THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
# சுடர் ஒளி
30.00
பக்கங்கள் -28
வார சஞ்சிகை
நவம்பர் 21- நவம்பர் 27, 2012
November 21- November 27, 2012



## அரசியலமைப்பின்படியான சர்வாதிகாரம்!




## ஐ.நா கற்றுக்கொண்ட பாடம்





# சிறைப் படுகொலைகள் புதிதல்ல!

# குட்டி ஐஸ்வர்யாவின் முதல் பிறந்த தினக் கொண்டாட்டம்





தனது முதல் பிறந்த தினத்தை கொண்டாடுகிறார் அபிஷேக் பச்சன்- ஐஸ்வர்யா ராயின் மகள் ஆரத்யா.

முன்னாள் உலக அழகியும், பாலிவுட்டின் முன்னணி நடிகையுமான ஐஸ்வர்யாவுக்கும், அபிஷேக் பச்சனுக்கும் கடந்த 2007ஆம் ஆண்டு திருமணம் நடந்தது.

சுமார் 4 ஆண்டுகள் கழித்து ஐஸ்வர்யா ராய் கர்ப்பமானார். குழந்தை பிறக்க போவதை எண்ணி குடும்பமே மகிழ்ச்சியில் இருந்தது.

இந்நிலையில் மும்பையில் உள்ள செவன்ஹில்ஸ் மருத்துவமனையில், கடந்தாண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி காலை 10 மணியளவில் அழகான பெண் குழந்தையை பெற்றெடுத்தார்.

குழந்தை பிறந்த பிறகு குழந்தையின் புகைப்படத்தைப் பார்க்க ரசிகர்கள் ஆர்வமுடன் காத்திருந்தனர்.

இதற்கிடையே ஆரத்யா இன்று தனது முதல் பிறந்த தினத்தை கொண்டாடுகிறார்.

ஆரத்யாவுக்கு, அபிஷேக் பச்சன் சுமார் ரூ.28 லட்சம் மதிக்கத்தக்க மினி கூப்பர் எஸ் காரை பரிசாக அளித்துள்ளார்.











அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

www.mobitel.lk



தேசத்தின் அபிவிருத்திக்காக பாடுபட்டு சேவை புரியும் அரச ஊழியர்களான உங்களுக்காக மொபிடெல் வழங்கும் உபஹார இன்டர்நெட்

5GB தரவுப் பொதி* இலவசம்

அரச ஊழியர்களான தற்போதைய உபஹார பாவனையாளர்களுக்கு டொங்கல் இலவசம்

இவ் அனுகூலங்களுக்கான மாதாந்தக் கட்டணம் ரூ.299/- மட்டுமே
இணைப்புக் கட்டணம் ரூ.1000/-

அனைத்து கட்டணங்களும் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது. நிபந்தனைகளுக்குட்பட்டது.

*நள்ளிரவு 12.00 மணி முதல் காலை 9.00 மணி வரை : 3GB
காலை 9.00 மணி முதல் நள்ளிரவு 12.00 மணி வரை : 2GB

உபஹார இன்டர்நெட்




1717

# சிறைப் படுகொலைகள் புதிதல்ல

கடந்த வாரம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் பெரும் போர்க்களம் ஒன்று உருவாக்கப்பட்டது. விசேட அதிரடிப் படையினர் ஒருபுறமும் கைதிகள் மறுபுற முமாக நடத்திய துப்பாக்கிப் போரில் 27 கைதிகள் இறந்தனர். உதவிப் பொலிஸ் ஆணையாளர் உட்பட 6 விசேட அதிரடிப்படையினர் காயமடைந்தனர்.

விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கை களை முடித்துக்கொண்டு வெளியேறிய போது அவர் கள் மீது கைதிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் இதன் பிறகு மேற்கொண்ட பதில் தாக்குதலில் கைதி கள் பலியானதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் லண்டன் பி.பி.சி ஒலிபரப்புக்கு கைதி ஒருவர் வழங்கிய தகவல்படி விசேட அதிரடிப்படையினர் சோதனை நடவடிக்கையின்போது சில கைதிகளுக்கு விலங்கிட முயன்றதாகவும் அவர்கள் மறுப்புத் தெரிவித்த போது அவர்களை ஒரு அறைக்குள் அடைத்து விட்டு கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் அதன் போது அவர்கள் மயக்கமடைந்ததாகவும் அதையடுத்து வெளியில் நின்ற கைதிகள் அதிரடிப்படையினர் மீது தாக்குதலை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. களஞ்சிய அறையை உடைத்து துப்பாக்கிகளைக் கைப்பற்றிய கைதிகள் படையினருடன் மோதலை மேற் கொண்டனர். இராணுவக் கொமாண்டோக்கள் வந்து பலமணிநேரம் போராடிய பின்பே நிலைமை கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் சில கைதிகள் தப்பியோடி விட்டதாகவும் துப்பாக்கிகள் முழுமையாக மீட்கப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இதில் நாம் இரு விஷயங்களை அவதானிக்க முடி யும். இதில் சம்பந்தப்பட்ட ஒரு சாரார் விசேட அதிரடிப் படையினர். அடுத்தது சிறைச்சாலைக்குள் நிகழ்ந்த படுகொலைகள்.

இந்த விசேட அதிரடிப்படையினருக்கு ஒரு நீண்ட கொலைப்பாரம்பரியம் உண்டு. இப் படை விடுதலைப் புலிகளை அழிக்கவே விசேடமாக உருவாக்கப்பட்டது. இவர்களால் விடுதலைப் புலிகளை அழிக்க முடிய வில்லை மாறாக பல்லாயிரக்கணக்கான பொது மக்க ளைக் கிழக்கு மாகாணத்தில் கொன்று குவித்தனர்.

அதிகாலையில் நான்கைந்து கிராமங்களைச் சுற்றி வளைத்து மக்களை ஒரு இடத்தில் குவித்துவிட்டு சுட் டும், வெட்டியும், எரித்தும் நூற்றுக்கணக்கானோரை ஒரு நேரத்தில் கொன்று தள்ளுவது இவர்களின் வழி முறை. கொக்கட்டிச்சோலை, புதுக்குடியிருப்பு, சத்துருக் கொண்டான், வந்தாறுமூலை, வீரமுனை, உடும்பன்குளம், குமாரபுரம் என நீண்ட படுகொலைப் பட்டியல் இவர்களுக்கு உண்டு.

இப்படுகொலைகளுக்காக இதுவரை ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை. விசேட அதிரடிப்படையென்றால் படுகொலைசெய்ய அங்கீகாரம் பெற்றவர்கள் என்னும் வகையில் அவர்களின் வெறியாட்டம் மேலோங்கி யிருந்தது.

சிறைச்சாலைகள் புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர அவர்கள் நாடாளுமன்றத் தில் மிகக் குறைந்தளவு வன்முறையே பாவிக்கப்பட்ட தாகத் தெரிவித்திருந்தார். மிகக் குறைந்தளவு வன் முறையிலேயே 27 பேர் கொல்லப்பட்டும் 35 பேர் காய மடைந்துமுள்ளனர் என்பது தான் வியப்புக்குரிய விஷயம்.

சிறைச்சாலைச் சோதனை நடவடிக்கைகளை மேற் கொள்வது சிறை அதிகாரிகளின் கடமை அப்படியிருந்த போதும் ஏன் விசேட அதிரடிப்படையினர் சோதனை களை மேற்கொண்டனர் என்ற கேள்வி எழுகின்றதல் லவா? சில கைதிகள் கொல்லப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகமும் எழக்கூடுமல்லவா? கைதிகளை ஒரு அறைக்குள் அடைத்து விட்டு அதற்குள் கண்ணீர்ப் புகையடிப்பது எவரையுமே கலவரத்தில் இறக்கக் கூடிய ஒரு கொடிய நடவடிக்கையாகும். அப்படியா னால் ஒரு கலவரத்தைத் திட்டமிட்டு உருவாக்கி அதைச் சாட்டாக வைத்து சில பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உருவாக வாய்ப்புண்டல்லவா?

கொல்லப்பட்டவர்களில் மூவர் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் இலங்கையில் இப்போது மரணதண்டனை நிறைவேற்றப்படுவதில்லை என்ற போதிலும் அங்கு விசேட அதிரடிப்படையினர் சட்டத் தைத் தமது கைகளில் எடுத்துள்ளனர்.

அதே வேளையில் இச் சோதனை நடவடிக்கைகள் பற்றியும் சில விடயங்களைக் குறிப்பிடாமல் விட முடி யாது. சிறைகளில் அடிக்கடி இடம்பெறும் சோதனை களில் கையடக்கத் தொலைபேசிகள், போதைவஸ் துகள் அடிக்கடி கைப்பற்றப்படுகின்றன. மீண்டும் மீண்டும் கைப்பற்றப்பட்டபோதும் எப்படி அவை சிறைக் குள் வருகின்றன? அவை உள்ளே வரும் வழிமுறை கள் ஏன் தடுக்கப்படவில்லை? சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்பின்றி அவற்றை உள்ளே கொண்டு வர முடியுமா?

இப்படியாகப் பல விடைகாணமுடியாத கேள்விகள் எழக்கூடிய நிலையில்தான் இந்தக் கொலை வெறி யாட்டம் இடம்பெற்றுள்ளது. சிறைகளுக்குள் படுகொ லைகள் மேற்கொள்வது இலங்கையைப் பொறுத்த வரையில் ஒரு புதிய விஷயமல்ல. ஏற்கனவே பல முறை இடம்பெற்ற முறை மீறல்கள் தான்.

1993 ம் ஆண்டு ஜுலை மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற கொடூரமான படு கொலைகளை எவரும் மறந்துவிடமுடியாது. ஜுலை 23 ம் திகதியும் 25 ம் திகதியும் 56 தமிழ்க் கைதிகள் கொடூ மான முறையில் அடித்தும் வெட்டியும் கொல்லப் பட்டனர். இவர்களில் குட்டிமணி, ஜெகன் ஆகிய மரணதண்டனைக் கைதிகளும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட தங்கத்துரையும் அடங்குவர். தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டு சிறையின் சிலைமுன் வீசப்பட்டனர். அவர்களின் கண்கள் தோண்டப்பட்டன. ஆணுறுப்புக்கள் வெட்டப்பட்டன. இப்படியான படு கொலைகள் சிறைச்சாலைகளின் உள்ளே சிறை அதிகாரிகள் முன்னிலையிலேயே இடம்பெற்றன.

> சிறைச்சாலைச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறை அதிகாரிகளின் கடமை அப்படியிருந்த போதும் ஏன் விசேட அதிரடிப்படையினர் சோதனைகளை மேற்கொண்டனர் என்ற கேள்வி எழுகின்றதல்லவா? சில கைதிகள் கொல்லப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்ற சந்தேகமும் எழக்கூடுமல்லவா? கைதிகளை ஒரு அறைக்குள் அடைத்து விட்டு அதற்குள் கண்ணீர்ப்புகையடிப்பது எவரையுமே கலவரத்தில் இறக்கக்கூடிய ஒரு கொடிய நடவடிக்கையாகும். அப்படியானால் ஒரு கலவரத்தைத் திட்டமிட்டு உருவாக்கி அதைச்சாட்டாக வைத்து சில பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உருவாக வாய்ப்புண்டல்லவா?



சில நாட்களின் பின்பு ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அதற்கு என்ன நடந்தது என்பதோ அதன் விசாரணைகள் எப்படி நடந்தது என்பதோ இன்றுவரை எவருக்குமே தெரியாது. ஆனால் இதில் சம்பந்தப்பட்டவர்களோ துணைபோனவர்களோ எவரும் தண்டிக்கப்படவில்லை. மாறாக இப்படுகொலைகளில் ஈடுபட்டதாகக் கருதப்பட்ட சிங்களக் கைதிகள் நெடுங் கேணி திறந்தவெளிச் சிறைக்கு மாற்றப்பட்டு சலுகை யளிக்கப்பட்டனர். வெலிக்கடைப் படுகொலைகள் இன்றும் தண்டிக்கப்படாத குற்றங்களாகவே நிலை பெற்றுவிட்டன.

இதே போன்று பிந்துனுவெவவில் இளைஞர் புனர் வாழ்வு முகாமிலும் கொடூரமான படுகொலைகள் மேற் கொள்ளப்பட்டு 25 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டனர். சிறை அதிகாரிகளின் உதவியுடன் உள்ளே புகுந்த சிங்களக் காடையர்கள் இளைஞர் களை வெட்டியும், சுட்டும் வெறியாட்டம் போட்டனர். புனர் வாழ்வின் பின் விடுதலையாகவிருந்த இளைஞர்கள் பலிகொள்ளப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாகச் சிலர் கைதுசெய்யப் பட்டனர். நீண்ட காலம் வழக்கு நடத்தப்பட்டு அவர் களில் இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்பு மேல் முறையீட்டில் அதுவும் தள்ளுபடி செய்யப் பட்டு அவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஏறக்குறைய 800 பேர் சிறைகளில் விசாரணை இன்றி யும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் பல வருடங்களாகச் சிறைகளில் வாடுகின்றனர். இவர்கள் தங்களை விடுதலை செய்யும்படி அல்லது பிணையில் விடும்படி கோரி பல தடவைகள் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தினர். ஒவ்வொரு முறையும் அவர்கள் அடித்து நொருக்கப்படுவதே கிடைக்கும் பலன்களாக இருந்து வந்துள்ளன. அண்மையில் வவுனியாச் சிறையில் தமிழ்க் கைதிகள் அப்படி ஒரு போராட்டத்தை நடத்தியமையும் அவர்கள் பின்பு தென்னி லங்கைச் சிறைகளுக்கு மாற்றப்பட்டு படுமோசமான முறையில் தாக்கப்பட்டதையும் நாமறிவோம். அதில் ஒரு இளைஞன் வைத்திய சிகிச்சையின்றி உயிரிழந் தான். மற்றொரு இளைஞன் கோமா நிலையில் பல நாட்கள் கிடந்து உயிரிழந்தான்.

இப்படுகொலைகள் தொடர்பாக எந்த ஒரு விசா ரணையும் நடத்தப்படவுமில்லை. எவரும் தண்டிக்கப் படவுமில்லை.

நீதிமன்றம் தீர்மானிக்கும் தண்டனைகளை வழங்கு வதே சிறைச்சாலைகளின் கடமையாகும். ஆனால் இலங்கையில் எவ்வித நீதிமன்றத் தீர்ப்புமின்றி மரண தண்டனை உட்பட தண்டனைகள் வழங்கும் அதிகா ரத்தைச் சிறைச்சாலைகள் கையில் எடுக்கின்றன.

இவ்வாறான ஒரு கொலை வெறியாட்டமே கடந்த வாரம் வெலிக்கடையில் இடம்பெற்று 27 கைதிகளின் உயிர்களைப் பறித்தது. பல கைதிகள் தப்பியோடவும் 4 துப்பாக்கிகள் காணாமற்போகவும் வாய்ப்பை வழங்கியது.

இச் சம்பவம் தொடர்பாக இரு சிறை அதிகாரிகள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். இதில் வியப்புக்குரிய விஷயம் என்னவெனில் அவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டது சிறைச்சாலையில் இடம் பெற்ற மோதல்கள் உயிரிழப்புக்கள் காரணமாக அல்ல. அங்கு நடந்த சம்பவங்கள் தொடர்பான செய்திகளை ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தியமைக்காகவே அவர் கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

உயர்ந்த மதில்களுக்குள்ளும் பூட்டிய இரும்புக் கதவுகளுக்கும் உள்ளே இடம்பெறும் கொடுமைகள் வெளியே தெரியவிடக்கூடாது என்பதில் சிறைச்சாலை நிர்வாகம் காட்டும் அக்கறையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

எப்படியிருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில் மக்களை ஓரிடத்தில் குவித்து வைத்துப்படுகொலை களை மேற்கொள்வதில் நீண்ட அனுபவம் பெற்ற விசேட அதிரடிப்படையினர் இதில் ஈடுபடுத்தப்பட்ட னர். அது மட்டுமன்றிக் கைதிகள் அடைக்கப்பட்ட அறைக்குள் தள்ளப்பட்டு கண்ணீர்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்பே மோதல்கள் ஆரம்பித்ததாகக் கூறப்படுகின்றது.

1990 தொடக்கம் இன்றுவரை விசேட அதிரடிப் படை யினர் மேற்கொள்ளும் படுகொலைகளுக்காகவோ குற்றங்களுக்காகவோ தண்டிக்கப்படுவதில்லை. வந் தாறுமூலைப் படுகொலைகள் பற்றி வழக்குத் தொடரப் பட்ட போதும் இன்று வரை எந்த முடிவும் இல்லை 21 வருடங்கள் கடந்து விட்டது குறிப்பிடத்தக்கது.

அடுத்து சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு எவ் வித பாதுகாப்பும் இல்லை. அவர்கள் தாக்கப்படுவது கொல்லப்படுவது தொடர்பாக இதுவரை எவரும் தண்டிக்கப்பட்டதாக வரலாறு இல்லை.

● சந்திரசேகர ஆசாத்

இப்படியான நிலைமைகள் தொடரும் பட்சத்தில் சிறைச்சாலைகளுக்குள் மட்டுமல்ல வெளியிலும் கூடப் போர்க்களங்கள் விரியும் நிலைமை தவிர்க்க முடியாத தாகிவிடும்.




# காதலே வாழ்க்கை



ஒருத்தி மீதில் கொண்ட மிகுந்த காதலால் அவளை அடைய முடியாத நிலையில் தற்கொலை செய்து உயிரைவிட எண்ணித் துயரத்தோடு போய்க்கொண்டிருந்தான் ஒருவன்.

அவனைத் தடுத்து "ஏனப்பா தற்கொலை செய்து கொண்டு உனது உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணுகிறாய்? அவளிடம் உனது காதலைச் சொல்லி அவளோடு உன்னால் சேர்ந்து வாழ இயலாதா?" என்று கேட்டார் ஒருவர்.

அவனோ, "எனக்கு அவளோடு சேர்ந்து வாழ்வதற்கான விருப்பம் நிறையவே உண்டு. ஆனால் அவளுடைய புருசனை நினைத்தால் பயமாக இருக்கிறதே!" என்று கூறினான் ஓர் அப்பாவியாக.

உடனேயே "ஏனப்பா மோட்டுத்தனமாகக் காதலிக்கிறாய்? கலியாணம் ஆகாத பெண்ணாகப் பார்த்துக் காதலிக்க உனக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டார் அவர்.

அவனோ, "ஐயையோ எனது மனைவிக்கு நான் காதலிப்பது தெரிந்தால் என்னை அவள் உதைக்க வருவாளே!" என்றான் ஒருவித அச்சத்தோடு.

காதல் என்பது என்ன? என்பதை அறியாது எவ்வாறோ விளைந்த உணர்வு வேகத்தில் ஒருத்தியைக் காதலிப்பதாகப் புலம்புகின்ற ஒருவனின் காதல் கதைதான் இது.

வாழ்க்கைப் பயணம் மகிழ்வுடன் நீண்டுசெல்வதை உறுதிசெய்வதற்குக் காதல்தான் ஆதாரமாக அமைகிறது. அந்தக் காதலின் அர்த்தம் புரியாமலேயே காதலிக்கவும் வாழவும் நாம் பழகிக் கொண்டோம்.

அன்பு, பாசம், காதல், நட்பு என்பதெல்லாம் உறவுகளுக்கிடையேயான பிணைப்புப் பாலங்களே! அவை முறைப்படி ஒழுங்குற அத்திவாரமிடப்பட்டு உரிய அமைப்பிலே கட்டப்படுவது அவசியமாகும்.

ஆண் பெண் இருபாலாரிடத்திலும் உறுதியான பிணைப்பை ஏற்படுத்தப் பிறக்கும் காதல், நாம் உயிர்வாழ வேண்டும் என்ற ஆசையை எமக்கு ஏற்படுத்துகிறது. அதுவே வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் வாழ வேண்டும் என்ற விருப்பையும் வலுவடையச் செய்கிறது. காதல் செய்யாத உயிர்களே இல்லை எனலாம். எமது சமூக பாரம்பரியத்தில் ஒருவனுக்கு ஒருத்தியென்றும் அந்த ஒருவனோடும் ஒருத்தியோடும் அன்பு கலந்து வாழ்தலே வாழ்க்கை என்றும் அதுவே எமது கலாசாரம் என்றும் போற்றப்படுகிறது. இந்தக் கலாசாரத்தினை ஆச்சரியத்தோடு நோக்கும் மேலைத்தேசத்தவர்களைப் பார்க்கின்றோம்.

நான் ஜேர்மனியில் நின்றிருந்த நாள்களில் ஜேர்மனியர் ஒருவர் ஒருநாள் என்னோடு பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினார் அப்போது அவரின் பேச்சின் இடையே "உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" என்று என்னிடம் கேட்டார். நான் "ஓம் என்றேன்" அப்பொழுது அவர் "இப்பொழுது உங்களுடன் இருப்பவர் எத்தனையாவது மனைவி?" என்று கேட்டார். எனக்கு ஏனோ அதற்குப் பதில் சொல்வதில் ஒருவித தயக்கம் ஏற்பட்டது. இவர் ஏன் இவ்வாறான ஒரு கேள்வியை எழுப்புகிறார் என நான் சிந்தித்தேன். எனினும் "எனக்கு ஒரேயொரு மனைவிதான் இருக்கிறாள்" என்று கூறினேன்.

அவர் என்னை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டே "அந்த மனைவியுடன் எத்தனை ஆண்டுகளாக வாழ்கிறீர்கள்?" என்று கேட்டார். நான் அவரது கேள்விக்குச் சரியான வருடங்களைக் கணக்கிட்டு "35 வருடங்கள்" என்றேன். உடனேயே "அப்பப்பா!, இத்தனை ஆண்டுகள் ஒரேயொரு மனைவியுடன் குடும்பம் நடத்துகிறீர்களே! உங்களுக்கு வாழ்க்கையில் சலிப்புத் தட்டவில்லையா?" என்று கேட்டார்.

மேலைத்தேச பண்பாட்டில் பிறந்த அவருக்கு அவரது இந்தக் கேள்வி நியாயமானதாகத் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் எனக்கு அது தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தும் ஒரு கேள்வியாகத் தெரிந்தது. எமது சமூகமும் அவர் தம் வாழ்வும் குடும்பமாக நீண்ட நாள்கள் ஒன்றி வாழ்தலிலேயே இன்பம் காணுகின்றது. அத்தகைய சிறப்பால் துலங்கும் வாழ்வே எமது கலாசாரத்தை மதிக்கும் வாழ்வாகிறது. அதனையே எமது முன்னோர் வழக்கப்படுத்தி வாழ்ந்து காட்டினார்கள். எமது சமூகத்தின் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் இந்த வாழ்வே துணை செய்கிறது. மனைவியில் தொடங்கி மக்கள் மருமக்களென்றும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளென்றும் சங்கிலிப் பிணைப்பாக விரிகிறது வாழ்க்கை.


அது தவறும் நிலையிலே - காதலற்ற குடும்ப உறவிலே விரிசலும் பிரிவினையும் ஏற்படுகின்றது. சண்டையும் சச்சரவும் தொடர்கிறது. மேலைத்தேச கலாசாரத்தைப் பின்பற்றும் பண்பு வளருகிறது. நீதிமன்ற வாசலிலே விவாகரத்துப் பெறும் வேகத்தோடு குவியும் கணவன் மனைவியரின் கூட்டம் பெருகுகிறது. இவை தவிர்க்கப்பட வேண்டும். அதன் போக்கில் உயர்ந்து செல்லும் தவறுகளைத் திருத்தி எமது வாழ்வின் கலாசார மகத்துவத்தைக் காப்பாற்றும் துணிவு ஒவ்வொருவரிடத்திலும் பலம்பெற வேண்டும். குடும்பத்தில் இணைந்துள்ள இருபாலாரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கையிலேதான் எத்தனை மகிழ்ச்சி.

காதலே வாழ்க்கை அதனைக் கட்டிக் காப்பதே பெருமை.

**நெடுந்தீவு மகேஷ்**

# எமையாளும் மகாமாரி

இறைவனைப் போற்றியும் அருளின்பத்தை வேண்டியும் பாடப்படும் பாடல்கள் காலத்தால் அழியாதவை. அந்த வகை மகத்துவமான சிரஞ்சீவித்தன்மையுடன் எமையாளும் மகாமாரி இன்னிசை இறுவட்டு வெளிவந்திருக்கிறது. இசையால் இறைவடிவமான அம்மையைப் பாடும், போற்றும் வணங்கும் பாடல்களை அமரர் கவிஞர் இயல் இசை வாருதி இணுவையூர் வீரமணி ஐயர், கவிப்புலவர் வேலணையூர் இ.சுரேஷ் ஆகியோர் ஆக்கித்தர யாழ்.மண்ணின் பிரபல இசைமைப்பாளராக மிளிரும் இசைப்பிரியன் அவற்றுக்கு இசை அமைத்துள்ளார். தமிழ்நாட்டின் புகழ்மிக்க பாடகர்களான மனோ, ரி.எல். மகாராஜன், வீரமணிதாசன், தீபன் சக்கரவர்த்தி, சீனிவாஸ், அனுராதா ஸ்ரீராம், சைந்தவி ஆகியோருடன் நம்நாட்டுப் பாடகரான எஸ்.ஜி.சாந்தனும் தங்கள் குரலினிமையால் பக்தர்களை மெய்மறக்கச் செய்துள்ளனர். புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ இராஜ மகாமாரி அம்மன் மீது 1983 ஆம் ஆண்டு வீரமணி ஐயர் அவர்களால் பாடப்பெற்ற கீர்த்தனைகள்




மூன்றும் முறையே பாடகர்களான சைந்தவி, ரி.எல்.மகாராஜன், எஸ்.ஜி.சாந்தன் ஆகியோரால் மீள் இசை செய்யப்பட்டுள்ளன. பாடல்கள் அனைத்துமே மீண்டும் மீண்டும் கேட்டின்புறும் வண்ணம் பாடப்பட்டும் இசையமைப்பால் இனிமை கூட்டப்பட்டும் பக்தியுள்ளம் இன்புற ஒலிக்கின்றன.

எமையாளும் மகாமாரிக்கான இன்னிசை இறுவட்டில் உள்ள 13 பாடல்களிலேயும் 9பாடல்களை இயற்றியவர் கவிப்புலவர் என்ற பட்டத்தை இதன் மூலம் பெற்ற வேலணையூர் இ.சுரேஷ் அவர்கள் இசைக்கேற்ற சொல்லாட்சியுடன் பாடல்கள் ஆக்கித்தந்துள்ளார். கருத்தாளமும் பக்திப் பெருக்கும் மேலோங்க அவர் ஆக்கியளித்துள்ள கவிதைகள் பாடகர்களின் இசை மேன்மைக்கு எழில் கூட்டுகின்றன. இவர் இன்றுவரை எழுதிய பக்திப் பாடல்கள் அனைத்தினதும் தொகுப்பாக இந்திய இசைக்கலைஞர்களின் இசை வண்ணத்தில் விரைவில் பாடல் இறுவட்டு வெளிவரவுள்ளமை. மகிழ்வுடன் வரவேற்கப்படும் விடயமாகும்.

**மைதிலி தேவராஜா**

# அச்சமில்லா இலங்கைக் குடியரசைக் காண ஏங்குகிறேன்!

பேராசிரியர் ரட்ண ஜீவன்.எச்.கூல்.

நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா குற்றம் சாட்டப்பட்டதுடன் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளார். நான் 2003இல் நீதிநெறிகள் சம்பந்தமான ஓர் கருத்தரங்கினை நடத்துவதற்கான ஒழுங்குகளில் ஈடுபட்டிருந்த வேளையில் மனித உரிமைகள் சம்பந்தமான கல்வியறிவில் அதிகார உரிமையுடன் பேசவல்ல ஒருவரை தேடிக்கொண்டிருந்தேன்.

அச்சமயத்தில்தான் சிலர் என்னிடம் அவரின் பெயரைக்கூறி அவரைச் சம்மதிக்கவைத்தால் அது அதிஸ்டமே எனத் தெரிவித்தனர்.

அவருடன் தொடர்புகொண்ட போது, அவரின் உயர்நீதிமன்றக் கேட்போர் கூடத்திற்கு வருமாறு கூறப்பட்டது. அங்கு சென்று விடயத்தை விளக்கிக் கூறியதுமே எதுவித தயக்கமுமின்றி ஆச்சரியமளிக்கும் விதத்தில் எனது வேண்டுதலை ஏற்றுக் கொண்டார்.

'சமத்துவக் கொள்கையை நோக்கிச் சிறீலங்கா' என்ற மனித உரிமைகளை வலியுறுத்தும் எனது நூல் ஒன்று சர்வதேச நீதிநெறிக் கல்வி மையத்தினால் 2003ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டபோது, அதில் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் அத்தியாயம் புகழ்வாய்ந்த ஓரிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இத்தகைய ஓர் புகழ்பெற்ற, மதிநுட்பம் வாய்ந்த, பிரிட்டிஷ் கவுன்சிலின் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது போன்ற சாதனைகளைப் புரிந்த பெண்மணியான அவர் மீது குற்றம் சுமத்தும் முறைதவறிய செயல்தான் என்ன?

கொழும்புப் பல்கலைக்கழகத்திலிருந்து ஷிராணி பண்டாரநாயக்காவை அப்போது ஜனாதிபதியாகவிருந்த சந்திரிகா பண்டாரநாயக்காவே உயர் நீதிமன்றத்தில் நீதியரசராகப் புகுத்தினார். அவ்வேளையில் சட்டத்துறைப் பேராசிரியராக இருந்த ஜி.எல்.பீரிஸ் அவர்களே அதற்காகப் பரிந்துரைத்தார் என்றும் சொல்லப்படுகின்றது. இன்றோ, அதே பேராசிரியர் அவருக்கு எதிராக மாறிவிட்டார்.

அதே பேராசிரியர்தான் நாடாளுமன்றில் ஓர் சாதாரண பெரும்பான்மை மூலமாகக் குற்றஞ்சுமத்துவதற்கு அரசியலமைப்பு அனுமதிக்கின்றது என யாவரையும் நம்பும்படியாகக் கூறுவது மட்டுமல்லாமல், அவை யாவும் சட்டபூர்வமானவையென்றும் தெரிவிக்கின்றார்.

எனது நண்பரான கார்லோ பொன்சேகா, கல்விமான்கள் மத்தியில் இடையிடையே தமது பொது உரைகள் மூலமாக அவர்களது தரத்தினைக் குறைத்துக் கொள்ளும் ஒருசிலரில் பேராசிரியர் ஜி.எல்.பீரிசும் ஒருவர் என ஒருதடவை என்னிடம் கூறியிருந்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் தொடரில் 13வது திருத்தம் மற்றும் வெளிவிவகார அமைச்சு விடயங்கள் போன்ற பொது விடயங்களை உள்ளடக்கியதான பல்வேறு விடயங்களில் அவரினால் வெளியிடப்படும் அறிவிப்புகள் அரசாங்கத்திற்குள்ளும் அவரது சகபாடிகளுக்குள்ளும் முரண்பாடுகளை ஏற்படுத்தின. அதனை நாங்கள் அவ்வளவு பெரிதாகவும் எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனெனில் அவரும் அரசின் உத்தரவின்படியான ஓர் நல்ல பொலிஸ்காரன் வேலையைத் தானே செய்கிறார். நீதியரசர் மீது முன்மொழியப்பட்டுள்ள இக்குற்றப் பிரேரணையானது அரசியலமைப்பின் படியானது என அமைச்சர் நியாயப்படுத்துவதும், திடீரென நீதியரசர் மீது குற்றம் காணுதலும் கெடுநோக்கமுடையதென்பதை உணரமுடியாதவர்களல்ல எம்மவர்கள். அவரை எதுவிதத்திலும் பதவியில் இருந்து அகற்றுதலே பிரதான நோக்கமாக உள்ளது.



எனினும், அரசாங்கத்தின் கொள்கைவழியில் நடக்கும் எஞ்சியுள்ள இருகட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ) மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி இரண்டும் தமது கட்சி உறுப்பினர்களைக் குற்றச்சாட்டுப் பிரேரணையில் கையொப்பமிட வேண்டாமெனக் கோரியுள்ளமை, பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானவை என்பதற்கு அடையாளமேயாகும்.

எனினும், அரசாங்கத்தின் கொள்கைவழியில் நடக்கும் எஞ்சியுள்ள இருகட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சி (மொஸ்கோ) மற்றும் லங்கா சமசமாஜக்கட்சி இரண்டும் தமது கட்சி உறுப்பினர்களைக் குற்றச் சாட்டுப் பிரேரணையில் கையொப்பமிட வேண்டாமெனக் கோரியுள்ளமை, பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் தவறானவை என்பதற்கு அடையாளமேயாகும்.

நானும் இலங்கையில்தான் வளர்ந்தேன். உலக தரத்திலான எமது பல்கலைக்கழகம் குறித்துப் பெருமிதம் அடைகின்றேன். இங்கு கற்றுத்தேறிப் பட்டதாரிகளாக வெளியேறி நாட்டிற்குச் சேவையாற்றிப் புகழீட்டிய பீட்டர் கெனமன், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரிய பல தேசியவாதிகள், சேவையாளர்கள், கல்விமான்கள், சாதனையாளர்கள் இன்னும் மனதில் நிலைத்து நிற்கின்றனர்.

இன்று கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துவிட்டது. நல்லவை ஒவ்வொன்றும் இல்லாமற் போய்விட்டன. முன்பொரு காலத்தில் சுதந்திரமாக இயங்கிய செய்தி ஆசிரியர்கள் இன்றோ அரசாங்கத்திற்கு அஞ்சுகின்றனர். வழக்கமாக நான் எழுதியனுப்பும் பத்திரிகையின் ஆசிரியர் ஒருவர் கொல்லப்பட்டுவிட்டார். மற்றும் இருவர் அச்சுறுத்தல்களின் காரணமாகப் பயத்தின் உச்சத்தில் வெளிநாடுகளில் தஞ்சம் கோரிச் சென்றுவிட்டனர். முன்பு நண்பர்களாயிருந்தவர்கள் இன்று அச்சநிலையிலுள்ளனர். அரசிற்குச் சிக்கலான விடயங்களை மின்னஞ்சல் மூலமாக எழுதி அனுப்பியவர்கள் கூட இன்று புலனாய்வாளர்கள் அதனையும் ஆராய்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். அதனால் நண்பர்கள் தொலைபேசி மூலமாகக் கூட அரசியலைப் பற்றிக் கதைப்பதில்லை.

வன்னி, கொக்கிளாயைச் சேர்ந்த இடம்பெயர்ந்த தமிழரான நம்பிக்கைக்குரிய ஒருவர் தனிப்பட்டவகையில் நேரடியாகவே எனக்குக் கூறிய ஒரு விடயமானது, அவருக்குச் சொந்தமான பல ஏக்கர் கணக்கிலான காணிகளுக்குரிய உறுதிப்பத்திரம் தம்வசம் இருப்பதாகவும், ஆனால் அங்கே அவரது காணி அரச தரப்பு ஆதரவாளர் ஒருவரால் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு விற்கப்பட்டுவிட்டதாகவும், அதுகுறித்து உரிமை கோரப்பயப்படுவதாகவும் தெரிவித்தார்.

தேர்தல்கள் மோசடியான வழிகளில் அரசுக்குச் சாதகமாகவே நடந்தேறியுள்ளன. தேர்தல் சமயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபட்ட ஒருவர் கொல்லப்பட்டார். அடையாளங் காணப்பட்டுக் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பியைச் சார்ந்த கொலையாளி பிணையில் விடப்பட்டதுமன்றி அவர் இங்கிலாந்திற்குப் பயணம் செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டு இன்று அவர் லண்டனில் ஆடம்பர வாழ்க்கையை வாழ்கின்றார்.

இவையாவும் நீதித்துறையில் பல பிரிவுகள் இருந்தும் கூட அவற்றின் தோல்விகளேயாகும். இவையாவும் நிறைவேற்று அதிகாரத்தின், நீதித்துறையின் மீதான அத்துமீறிய தலையீடுகளின் அறுவடைகளேயாகும். இலங்கையில் இவ்வளவு பூசல்கள் இருந்தும் கூட ஷிராணி பண்டாரநாயக்கா என்றும் எமது உரிமைகளைப் பாதுகாத்தே வந்துள்ளார்.

அண்மையில் அவரால் வழங்கப்பட்ட ஓர் தீர்ப்புக்கெதிரான ஓர் பழிவாங்கும் நடவடிக்கையாகவே அவருக்கெதிரான இக்குற்றச்சாட்டுப் பிரேரணையைப் பார்க்க முடிகின்றது. நீதித்துறையின் மீதான இத்தாக்குதல் மெதுவாகவும் அத்துடன் கண்ணுக்குப் புலனாகாமல் பரவுவதும் அதேவேளையில் கடும் தீங்கினை விளைவிக்கக் கூடியதுமான ஓர் செயல்முறையாகும்.

யாழ்ப்பாணத்தில் ஓர் கீழ் நீதிமன்ற நீதிபதியாகவிருக்கும் பெண்மணியொருவர் தன்னை உயர் நீதிமன்ற நீதிபதியாக்குவதற்கு உதவிபுரியுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்பதையும், டக்ளஸ் தேவானந்தாவும் அரசியற் கூட்ட மேடைகளில் அவருடன் அமர்ந்திருப்பதையும் நான் பார்த்திருக்கின்றேன்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் தேவானந்தாவின் சட்ட ஆலோசகரான கருத்து வேற்றுமைகள் கொண்டவரான ஓர் சட்டத்தரணியினால் சட்டத்தரணிகள் சங்கம் வழிநடத்தப்படுகின்றது. இந்நிலையில் அரசியல் சம்பந்தமான வழக்குகளில் கட்சிக்காரர் தரப்பில் வாதிட ஒரு சில சட்டத்தரணிகளே முன்வருவர்.

இனவாத உணர்வு அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதனால் பெருமளவிலான சேதங்கள், துன்பங்கள் உயிரழிவுகள் நேரிட்டன. பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழுவின் அறிக்கையில் உண்மையை நிரூபிக்கும் வகையில் பல ஆதாரங்கள் இருந்தும் கூட அது ஓர் இட்டுக் கட்டப்பட்ட அறிக்கையெனக் கண்டனம் தெரிவித்தது. அந்நேரத்தில் நிலவிய பயச்சூழலில் சில தமிழ் தலைவர்களும் மற்றும் இந்துமதத் தலைவர்களும் கூட பான் கீ மூனின் அறிக்கைக்கு எதிரான தீர்மானத்தில் கையொப்பமிட்டிருந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியும் மற்றும் லங்கா சமசமாஜக் கட்சியும் குற்றப் பிரேரணைகளுக்கெதிராக பலத்த குரலெழுப்ப வேண்டும். வெறுமனே மௌனித்து, வளைந்து கொடுப்பது கோழைத்தனமாகும். சிந்திப்பவர்கள் எழுந்து நிமிர்ந்து நில்லுங்கள்.

சண்டேலீடர் பத்திரிகையில் எழுதியது.

— தமிழில் ஜஸ்ரின்

சுடர் ஒளி

21, நவம்பர் - 27 நவம்பர், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 –5

E-mail: editorial@sudaroli.com

# வறுமை விட்ட வழி

வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் இளம்பெண்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் இராணுவத்தில் இணைக்கப்பட்ட நிகழ்வு விமரிசையாக கடந்த 17ஆம் திகதி கிளிநொச்சியிலுள்ள கிருஸ்ணபுரம் கிராமத்தில் நடைபெற்றுள்ளது. 'இலங்கைத் தரைப்படைக்கான ஆள்சேர்ப்பு' என்ற படிவத்தில் கையெழுத்திட்டே இவர்கள் இணைந்துள்ளார்கள்.

இராணுவத்தில் இணைந்துள்ள இவர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கப்படமாட்டாது எனவும், ஆனால் இராணுவப்பயிற்சி வழங்கப்படும் எனவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாதாந்தம் 30 ஆயிரம் வேதனம், மேலதிகமாக 50 ஆயிரம் வரை பெற்றுக் கொள்ளக்கூடியதான வாய்ப்பு, இலவச போக்குவரத்து வசதிகள், திருமணத்திற்குப் பின்னான விடுமுறைகள், வீட்டுக்கடன், பிள்ளைகளை தேசிய பாடசாலைகளில் கல்வி பயில்விப்பதற்கான வாய்ப்பு, என பல கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால், யுவதிகள் பலர் தங்களின் குடும்ப வறுமைநிலை காரணமாகவே இராணுவத்தில் இணைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். உண்மைநிலையும் அதுதான். இறுதிக்கட்டப் போரினால் பாதிக்கப்பட்டு, அகதிமுகாம்களில் இருந்துவிட்டு தற்போது மீள்குடியர்த்தப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த இளம் யுவதிகளே இன்று இராணுவத்தில் இணைந்துள்ளனர். தோழில்வாய்ப்பின்மை. வறுமை மற்றும், பாதுகாப்பின்மை போன்ற பல காரணிகள் இவர்களை இந்நிலைக்குத் தள்ளியுள்ளன.

இதற்கு முன்னரும், இலங்கைப் பொலிஸ் பிரிவில் இரண்டாயிரம் தமிழர்களை இணைத்துக்கொள்வதான திட்டத்தில் பல இளைஞர் யுவதிகள் இணைந்துள்ளார்கள். மேலும், வடக்கு கிழக்கில் சிவில் பாதுகாப்புப்படைக்கென 5000 முன்னாள் போராளிகளை இணைத்துகொள்வதற்கான நடவடிக்கைகளும் நடைபெற்று வருகின்றன. அதிலும் தற்போது பெரும்பாலானவர்கள் இணைந்து வருகின்றார்கள்.

போரிலே உழன்று, சொல்லொணா இழப்புக்களையும், துயரங்களையும் சந்தித்த வன்னி மக்களுக்கு இராணுவமும், குண்டுச்சத்தங்களும் ஒரு ஒவ்வாமையினையே ஏற்படுத்தியுள்ளது. இப்படியிருக்க மீண்டும் ஒரு இராணுவக்களத்திற்குள் கடமையாற்றுவதை அவர்கள் விரும்பியிருக்கவில்லை. வேறு வழிகள் தென்படாத நிலையிலேயே அவர்கள் இவ்வழியை நாடியுள்ளனர்.

போரின் பின்னர் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசரமான பல வேலைத்திட்டங்கள் இருக்கக் கூடியதாக அவற்றை விட்டுவிட்டு தமிழ் இளைஞர் யுவதிகளை படைகளில் இணைத்துக்கொள்வதில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு உள்நோக்கமிருப்பதாகவே கருதமுடிகின்றது.

இது ஒருபுறமிருக்க, இவ்வாறு தமிழ் இளைஞர் யுவதிகள் படைக்கட்டமைப்புக்களில் இணைவதை சிலர் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றமையினையும் இன்று அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு விமர்சனம் செய்பவர்களில் தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் தமிழர்களும் அடங்குகின்றனர்.

போரினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பலவகைப்பட்டவையாக இருக்கின்றன. தாய் தந்தையை இழந்து தவிக்கும் பிள்ளைகள், கணவரை இழந்த விதவைகள், ஊனமுற்று எதுவித தொழிலையும் மேற்கொள்ள முடியாதவர்கள் என பல தரப்பினரை வன்னியில் காணமுடிகின்றது. இது குறித்து சரியான கணக்கெடுப்புக்கள், அவர்களுக்கு உதவுவதற்கான சரியானதொரு வேலைத்திட்டம் என எதுவுமே தமிழ் அரசியல்வாதிகளினாலோ அவர்களுடன் தொடர்பிலிருக்கும் புலம்பெயர் தமிழர்களினாலோ மேற்கெளளப்பட்டுள்ளனவா?

இன்றைக்கும் புலம்பெயர் வாழ்விடங்களில் நிதிசேகரிப்புகள் இடம்பெறுவதாக அறிய முடிகின்றது. இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு வந்து சேர்கிறதா என்பது பற்றித் தெரியவில்லை. இங்கு தேர்தல்கள் நடைபெறுகின்றபோது தேர்தல் செலவுகளுக்காக பெருந்தொகைப்பணம் வந்து சேர்வதாக மட்டும் அறியமுடிகின்றது.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினாலேயே தமிழ் மக்களுக்கு இப்பெருந்துயர் ஏற்பட்டது. இன்னமும் எதுவித தீர்வுகளும் இன்றி பிரச்சினைகள் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவக்கூடிய சரியானதொரு செயல்திட்டத்தை இங்குள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் நிதிவளம் மிக்க புலம்பெயர் அமைப்புக்களும் முன்னெடுத்து, மக்களின் வறுமைநிலையைப் போக்கக் கூடியதான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவேண்டும். இவ்வாறு நடைமுறைப்படுத்தும் போது பாதிக்கப்பட்டவர்கள் வேறு விரும்பத்தகாத வழிகளை நாடிச்செல்ல வேண்டிய நிலை ஏற்படாது.

# நீளும் நினைவுகள்..



தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வாறு மே-19ஆம் நாளின் பெருந்துயரை மறக்கமுடியாதோ அவ்வாறே நவம்பா-27 ஆம் நாளின் உணர்வையும் மறக்க முடியாது. இவ்விரு நாட்களும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையே. தமிழ் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டத்தின் வழிமுறைகளை யாரும் விமர்சனத்திற்குரியதாக பார்த்தாலும் கூட, ஆயுதங்களை தமிழர்கள் ஏந்தவேண்டி ஏற்பட்ட காரணிகள், நோக்கங்கள் பிழையானவை என்று எவரும் கூறிவிட முடியாது. இப்போராட்டத்திற்காக தங்களின் உயிர்களைக் கொடுத்தவர்களின் தியாகங்களையும் எவரும் கொச்சைப்படுத்திவிட முடியாது. முற்போக்கான சிங்கள அரசியல்வாதிகளே இதனைப் புரிந்து கொண்டுள்ளனர்.

போராட்டத்தில் உயிரிழந்த இளைஞர்கள் அனைவரும் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்களின் பிள்ளைகளும் உறவுகளுமே. இவர்களின் நினைவுச்சின்னங்கள் அழிக்கப்பட்டு விட்டாலும் நினைவுகளை அழித்துவிடமுடியாது.

போர் முடிவின் பின்னர் தமிழ் பிரதேசங்களுக்கு வரும் பெருந்தொகையான சிங்கள மக்கள் படையினரால் போர் வெற்றிகொள்ளப்பட்ட பகுதிகளையே ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இச்சுற்றுலாக் காரர்களின் வருகையும் வெற்றிப் பார்வையும் தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கு மிடையே நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கையின் பின்னர் கணிசமான சிங்கள மக்கள் வன்னிப் பிரதேசத்திற்கு வருகை புரிந்தனர். அவ்வாறு வந்தவர்கள் முக்கியமாகப் பார்வையிட்ட இடம் மாவீரர் துயிலுமில்லங்களே. அக்கல்லறைகளைப் பார்த்துவிட்டு சில சிங்களத் தாய்மாரின் கண்கள் கலங்கியதையும் அவதானிக்க முடிந்தது.

மன்னாரில் அமைந்திருந்த மாவீரர் கல்லறைகளைப் பார்த்துவிட்டு ஒரு சிங்களத்தாய் கூறினார் பெற்றோரான எங்களின் மரணச்சடங்குகளை செய்ய வேண்டிய பிள்ளைகள் இப்படி இந்தக் கல்லறைக்குள் கிடக்கின்றார்களே என்று. அப்போது சாதாரண சிங்கள மக்களின் மனஉணாவு இப்படிப் பட்டதாகத்தானிருந்தது. இன்று அது மாற்றப்பட்டு விட்டது. போர் வெற்றிப் பரப்புரை அவர்களை முளைச் சலைவை செய்துவிட்டுள்ளது.

தமிழ் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டிருந்த அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களும் இன்று சுவடே தெரியாதபடி படையினரால் அழிக்கப்பட்டுவிட்டன. இதனைப்பார்த்த ஒரு சிங்கள நண்பர் கூறினார் அரசாங்கம் என்னதான் போரை வெற்றிகொண்டிருந்தாலும் கூட இந்தக் கல்லறைகளை இப்படி அழித்திருக்கக்கூடாது என்று. அவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாக இருந்திருந்தாலும் இங்கு வாழும் தமிழ் மக்களின் பிள்ளைகளே. இந்தப்பிள்ளைகளை நினைவுகூர பெற்றோர் உறவினருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்க வேண்டும். இவ்வாறு செய்திருந்தால் தமிழ் மக்களின் மனங்களில் அரசாங்கம் ஒரு நன்மதிப்பைக் கூடப் பெற்றிருக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

எதிரியான எல்லாலனுக்கு சிலை வைத்து மதிப்பளித்த துட்டகெமுனுவை பின்பற்ற முடியாவிட்டாலும்கூட கல்லறைகளைச் சிதைக்காத நடவடிக்கையினையாவது செய்திருக்க முடியும். அதன்முலம் தமிழ் மக்களின் மதிப்பினைப் பெற்றிருக்க முடியும் எனவும் அவர் சொன்னார். சிங்களவர்களில் இவ்வாறெல்லாம் சிந்திக்கக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள்!


இன்று மாவீரர் துயிலுமில்லங்கள் யாவும் துடைத்தழிக்கப்பட்டுள்ள நிலையிலும், நவம்பர் மாதம் 27ஆம் திகதியில் தமிழ் மக்கள் என்ன செய்கின்றார்கள் என அவதானிக்க படைத்தரப்பினர் பெருமளவில் முடுக்கிவிடப்படுகின்றனர். யாராவது தங்கள் வீடுகளுக்கு முன்பாக விளக்கேற்றியிருந்தால் அவர்கள் கடுமையாக அச்சுறுத்தப் படுகின்றனர். கோவில்கள் ஆலயங்களில் மணியோசை, பூஜைகள் இடம்பெறுவதையும் தடுக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

எதிர்வரும் கார்த்திகை விளக்கீடு நவம்பர் 28 இல் வருகின்றது. இந் நாளில் வாழ்விடங்கள், கோவில்களில் விளக்கேற்றி வழிபடுவது இந்து மதத்தவரின் பாரம்பரியமாகும். இந்நாளானது மாமிரர்நாளுக்கு அடுத்த நாள் வருவதால் படையினரால் என்ன நடக்குமோ என எண்ணி அச்சமுறுகின்ற நிலையும் தமிழ் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ளது. இப்போதே அதனை மக்கள் கற்பனை செய்கின்றனர்.

நினைவுச்சின்னங்களை அழிக்கலாம். அச்சுறுத்தி சடங்கு சம்பிரதாயங்களை தடுத்து நிறுத்தலாம். ஆனால் நினைவுகளை, உணர்வுகளை யாராலும் தடுக்கவோ அழிக்கவோ முடியாது. அது தமிழரின் வாழ்வு உள்ளவரை நீளும்.


• தயாபரன்

# கையொப்பமிட்டதன் நோக்கம் என்ன?



பெரும்பான்மை சமூகத்தில் இருந்து தனது மனசாட்சிக்கு விரோத மில்லாது பெரும்பான்மை பலம் கொண்ட அரசையும் எதிர்த்து, ஆணவம், கர்வம், கடின போக்குள்ள இனவாதிகளுக்கும் அஞ்சாது, துணிவோடு, ஒரு பெண்மணியாக இருந்துகொண்டு முற்று முழுதாக இலங்கைத் தமிழ், முஸ்லிம் மக்களுக்காக நீதித்துறையை சரியாகப் பயன் படுத்திய கலாநிதி ஷிராணி பண்டாரநாயக் காவுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள குற்ற விசாரணை பிரேரணைக்கு (இம்பீஜ்மென்ட்) ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் பலர் கையொப்பம் இட்டுள்ளது என்பது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமல்லாது இலங்கைத் திருநாட்டில் தமிழ்பேசும் மக்களுக்கே பெருத்த அவமானமாகும். என்பதுடன் மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை பதவி, பட்டம், பாதிஅமைச்சு, முழு அமைச்சுதான் வேண்டும் என்ற கோதாவில் இறங்கி விட்டார்கள். இந்த முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் திருந்தாத ஜென்மங்களாக தங்களது மனசாட்சியை மஹிந்த கம்பனியிடம் அடகு வைத்து பிழைப்பு நடாத்தி வருகின்றார்கள்.

இதில் கல்முனை ஹரீஸ், ஏறாவூர் பஷீர் சேகுதாவூத் ஆகிய இருவரும் குற்றப் பிரேரணையில் கையொப்பம் இட்டுள்ளதை முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் ஹஸன்அலி ஏற்றுக் கொண்டு தமிழ் ஊடகமொன்றுக்கு செய்தி வழங்கியுள்ளார். ஆனால் அந்தப் பிரேரணையில் ஹஸன்அலியும் கையொப்பம் இட்டுள்ளதாக இரகசியத் தகவல் தெரிவிக்கின்றது. ஆனால், தான் கையொப்பம் வைக்காதவர் போல் நல்ல பிள்ளையாக நடிக்கின்றார் ஹஸன்அலி. பிரேரணைக்கு எதிராக செயல்பட வேண்டாம் என்று எந்த இடத்திலும் ஹக்கீம் சொல்லவில்லையாம். ஆனால் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளலாம் என்று



ஹக்கீம் சொன்னாராம். அப்படியானால் பஷீர் சேகுதாவூத், ஹரீஸ், ஹஸன்அலி ஆகியோர் கையொப்பம் இட்டது தப்பில்லையே. இதை ஏன் மூடி மறைக்க வேண்டும். மனச்சாட்சி மறைப்பதற்கு இடம்தர மறுக்கின்றது. அதுதான் எல்லாமே வெளிவருகின்றது.


ஒரு நியாயமான பிரதம நீதிபதிக்கு எதிராக செய்யாத குற்றத்திற்காக, எந்தக் குற்றம், என்ன குற்றம் என்று இன்னும் சொல்லப்படாத குற்றத் திற்காக, சோடித்து தயாரிக்கப்பட்ட குற்றத்திற் காக மஹிந்த அன்ட் கம்பனியால் இன்னும் திரைக்கதை வசனம் எழுதப்படாத ஒரு பொய்யான குற்றத்திற்காக, சிறுபான்மை சமூகங்களின் நலனில் அக்கறை காட்டப்பட்டு உண்மையான நீதியை நிலைநாட்டி சட்டத்தையும், நீதித்துறை யையும் நிலைநாட்டிய ஒரு பிரதம நீதிபதிக்கு எதிராக சிறுபான்மை முஸ்லிம் எம்.பிக்கள் கையொப்பம் இட்டுள்ளது என்பது முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சிங்களக் காங்கிரஸ் கட்சியாக இயங்குவதைத்தான் காட்டுகின்றது.

அளவே இல்லாமல் முழு முஸ்லிம்

**முஸ்லிம் சமூதாயத்திற்கு தொடர் அவமானங்களை முஸ்லிம் காங்கிரஸ் என்ற போர்வையில் சிங்களக் காங்கிரஸ் செய்து வருகின்றது. மக்கள் திருந்தாத வரைக்கும் இறைவனும் மக்களை மாற்றமாட்டான் என்ற வார்த்தையைச் சொல்லித்தான் மறைந்த தலைவர் அஷ்ரப் முஸ்லிம்காங்கிரஸ் கட்சியை வளர்த்தார். இப்போது அந்த வார்த்தையை மீண்டும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஞாபகமூட்டிப் பார்க்க வேண்டும். ஒரு சமூகம் திருந்தாத வரைக்கும் ஒரு தனி மனிதனில் மாற்றம் ஏற்படாத வரைக்கும், இறைவனும் மாற்றமாட்டான் இப்படித்தான் இஸ்லாமும் சொல்கின்றது.**

சமூதாயத்திற்கு தொடர் அவமானங்களை முஸ்லிம் காங்கிரஸ் என்ற போர்வையில் சிங்களக் காங்கிரஸ் செய்து வருகின்றது. மக்கள் திருந்தாத வரைக்கும் இறைவனும் மக்களை மாற்றமாட்டான் என்ற வார்த்தையைச் சொல்லித்தான் மறைந்த தலைவர் அஷ்ரப் முஸ்லிம்காங்கிரஸ் கட்சியை வளர்த்தார். இப்போது அந்த வார்த்தையை மீண்டும் அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஞாபகமூட்டிப் பார்க்க வேண்டும். ஒரு சமூகம் திருந்தாத வரைக்கும் ஒரு தனி மனிதனில் மாற்றம் ஏற்படாத வரைக்கும், இறைவனும் மாற்றமாட்டான் இப்படித்தான் இஸ்லாமும் சொல்கின்றது. இதைத்தான் மறைந்த தலைவரும் சொல்லி வந்தார்.

ஹக்கீம் எதுவேண்டுமானாலும் செய்வாராம். சேதாரமற்ற விட்டுக் கொடுப்பு என்பாராம். முஸ்லிம் காங்கிரஸ் கொண்டுவந்த முதலமைச்சர்



அலுவலகத்தில் ஒரு பதவி கூட பெறமுடியாத ஹக்கீம் முஸ்லிம்களுக்கு எதைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றார் என்பதையாவது அம்பாறை மக்கள் சிந்திக்க வேண்டாமா? எல்லாமே சேதம்தான். முஸ்லிம் காங்கிரஸ் அரசிடம் தறிகெட்டு நிற்கின்றது. மடிப்பிச்சை கேட்கின்றது

இதன் பின்பு சபாநாயகர் நிலையியல் கட்டளைச் சட்டத்தின்படி பாராளுமன் றத்தின் எம்.பிக்கள் அல்லது அமைச்சர்கள் அடங்கலாக 7 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்து பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை மீதான விசாரணையை ஆரம்பித்து சபாநாயகருக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். அதன் பின்பு தீர்ப்பைப் பொறுத்து பிரதம நீதியரசர் மீதான நடவடிக்கை எடுக்கப்படும். அதில் அவரது பதவி பறிக்கப்படும் அல்லது அவர் தானாக தனது பதவியை இராஜினாமாச் செய்ய முனையலாம். இவைகளையும் மீறி சர்வதேச நெருக்கடிகள் இலங்கை மீது திணிக்கப்பட்டால் பிரதம நீதியரசரின் பதவி நீடிக்கும். இந்த மூன்றில் ஒன்றுதான் நடக்கும்.

பிரதம நீதியரசர் மீதான இந்த நெருக்குதல் என்பது அவர் தானாக பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். அல்லது அவரது பதவி சட்டப்படி பறிக்கப்படும். இலங்கையின் 5 ஜனாதிபதிகளின் வரலாற்றில் 5 ஆவது ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ச தனது நிறைவேற்று அதிகாரத்தை இந்த நாட்டில் முழுமையாக, நிறைவாக, நூறு வீதம் பிரயோகித்துள்ளார்.

ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பிரதம நீதியரசருக்குள்ள ஈவிரக்கம் கூட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கு இல்லாமல் போய்விட்டதே. இப்படிப்பட்ட பிரதம நீதியரசருக்கு எதிராகத்தான் முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் கையொப்பம் இட்டுள்ளார்கள்.

முழு அமைச்சும், அரை அமைச்சும் பெறுவதற்கும், வழங்கப்படுவதற்கும் அரசின் உயர்மட்டமும், முஸ்லிம்காங்கிரஸ் எம்.பிக்களும் இணக்கம் காணப்பட்டு பிரதம நீதியரசருக்கு எதிராக கையொப்பம் இடப்பட்டுள்ளது.

இதில் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்களை அழைத்து தங்களது மனசாட்சிப்படி நடந்து கொள்ளுங்கள் என்றாராம். அதாவது தான் சொல்லித்தான் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்ற சொல்லுக்கும் பழிக்கும் ஆளாகாமல் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் தங்களது இஷ்டப்படி நடந்து கொள்ளலாம் என்றாராம். முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் கையொப்பம் இடாவிட்டாலும் அரசு பிரேரணையில் நினைத்ததை சாதிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லைதான் என்றாலும் சிறுபான்மை சமூகத்திற்காக நீதி வழங்கிய அந்த சிங்களப் பெண்மணிக்கு எதிராக முஸ்லிம்காங்கிரஸ் எம்.பிக்கள் கையொப்பம் இட்டது என்பது மனச்சாட்சியை கல்லாக்கிவிட்டுச் செய்த இதயமே இல்லாத ஈனச் செயலாகும்.

ஹரீஸ் எம்.பியும், பஷீர் சேகுதாவூத் எம்பியும், ஹஸன்அலி எம்.பியும் பிரதம நீதியரசருக்கு எதிராக கையொப்பம் இட்டுள்ளார்களாம். ஏனையோரும் மிகவும் இரகசியமாக கையொப்பம் இட்டுள்ளார்களாம். அரை அமைச்சும், முழு அமைச்சும் எப்படியும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்குக் கிடைத்துவிடும்.

சிறுபான்மை சமூகத்திற்கு நீதி வழங்கிய பெரும்பான்மை பெண்மணியொருவருக்கு எதிராக அநீதியாக கையொப்பம் இடுவதற்கு நானா! நீயா என்று போட்டி போட்டுக் கொண்டு முஸ்லிம்காங்கிரஸ் எம்.பிக்கள் செயல்பட்டுள்ளமை என்பது முஸ்லிம்களால் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

படுபாதகமானவைகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருவதால் வேறு வழி இல்லாமல் முஸ்லிம் காங்கிரசுக்கு அரசு மேலும் ஒரு முழு அமைச்சும், இரண்டு பாதி அமைச்சும் வழங்கத்தான் போகின்றது. அநியாயத்திற்கும் படு பாதகத்திற்கும் துணை நிற்கும், முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் மத்தியில் செல்லாக் காசாகும் நாள் வெகு தொலைவில் இல்லை.

**எம்.எம்.நிலாம்டீன்**
**அட்டாளைச்சேனை.**

***




*நாடாளுமன்றில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை 2010 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளால் பெறப்பட்டதாகக் கருதமுடியாது. இவ்விசேடமான பெரும்பான்மை எதிர்வரிசைகளில் இருந்தவர்களின் கட்சித் தாவல்களினால் உருவாக்கப்பட்டதொன்றாகும்.*

# அரசியலமைப்பின்படியான சர்வாதிகாரம்!

அரசியலமைப்பின் படியான ஓர் சர்வாதிகாரத் திற்குள் சிறீலங்கா துரிதமாகப் பாய்ந்து இறங்குகின்றது. ஓர் அரசினால் ஆளப்படும் நாட்டில் நிறைவேற்று நிர்வாகம், சட்டமன்றங்கள் மற்றும் நீதித்துறை என்பவற்றின் அதிகாரங்கள் யாவும் அந்நாட்டை ஆள்பவராலேயே உரிமையுடன் பயன்படுத்தப்படும். ஆளும் தரப்பின் தலைவரே அதி உயர் அதிகாரமுடையவராக விளங்குவார். ஜனநாயகத்தில் மக்களே உயர் அதிகாரத் தையுடையவர்கள். அத்துடன் அவர்களின் இறையாண்மை அரசாங்கத்தின் நிறைவேற்று நிர்வாகம், சட்ட மன்றம் மற்றும் நீதித்துறையின் கிளைகளின் ஊடாக வெளிப்படுத்தப்படும்.

சகலருக்கும் உகந்ததான ஜனநாயகத்தில் அரசாங்கத்தின் வெவ்வேறுபட்ட பிரிவுகள் ஒன்றுக்கொன்று சுதந்திரமாகவும் அத்துடன் அவை ஒன்றுக்கொன்று வெளிப்படையான பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையிலும் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தும். அதுமட்டுமன்றி அவை தமது நடவடிக்கைகளைச் சரிபார்ப்பதிலும் அவற்றைச் சமச்சீர் செய்வதிலும் ஓர் நடைமுறையினைக் கொண்டிருக்கும் எனவே, அதிகாரத்தின் ஒரு கூறு மற்ற இரண்டு கூறுகளுக்குமிடையிலான முரண்பாடுகளைச் சமரசம் செய்யக்கூடி யனவாக இருக்கும்.

நிறைவேற்று அதிகார நிர்வாகத்திற்கும் மற்றும் நீதித்துறை, சட்ட மன்றங்களுக் கிடையிலான ஓர் முரண்பாடு இருந்திருக்கு மேயானால் அது மத்தியஸ்தருடனா னதாகவே இருக்க முடியும்.

நாங்கள் அனைவரும் இப்பொழுது ஓர் நிலைமையினை எதிர்கொள்கின் றோம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதம நீதியரசருக்கெதிராக ஓர் குற்றப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ள தால் அவர்கள் பிரதம நீதியரசரின் பதவியை நீக்குவதில் ஓர் முடிவினை எடுக்கவேண்டியுள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி மற்றும் அவரது அமைச்சரவைகளுக்குமான தலைமை அதிகாரங்களுக்கிடையில் ஓர் தெளிவான தனித்தனிப் பிரிவுகள் உள்ளன. ஜனாதிபதி அவரது அமைச் சரவைக்குத் தேவையானவர்களை செனட் சபையிலிருந்தும் மற்றும் வெளியே மக்கள் பிரதிநிதிகளின் சபையிலிருந்தும் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்க முடியும். அந்த வகையில்தான் கிலாரி கிளிங்ரனின் பதவியும் அமைந்தது. செனட்டராகப் பதவி வகித்த கிலாரி கிளிங்ரன் அவரது அப்பதவி நிலை யினை இராஜினாமாச் செய்துவிட்டே மந்திரி சபையில் பதவியேற்றார் என்பது உலகறிந்த விடயமே.

நிறைவேற்று அதிகாரத்திற்கும் சட்டவாக்கல் குழுமத்திற்கும் இடையி லான தனித்துவமான உறவுகள் மிகவும் இறுக்கமாகப் பேணப்படுகின்றன. சிறிலங்காவில் அமைச்சரவைக்கு அமைச்சர்களாக மக்களால் தெரிவுசெய் யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் இருந்து நிறைவேற்று அதிகார நிர்வாகம் மற்றும் சட்டமன்றங்களுக் கிடையிலான தனித்தனியான பிரிவுகள் நீர்த்துப் போகச் செய்யும் விதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதுவும் நிறைவேற்று அதிகாரத்தில் பங்கீடு செய்யுமளவிற்கு மேலாக அமைச்சரவை யில் அமைச்சர்கள் இருக்கும் நிலைமை உள்ளது.

சிரேஷ்ட அமைச்சர்கள், அமைச்சர் கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் கண் காணிப்பு அமைச்சர்கள் எனப் பன்முகமான அமைச்சர்களை ஜனாதிபதி ராஜபக்ஷவின் நிர்வாகம் நியமித்ததன் மூலமாக சட்ட மன்றத்தின் சுதந்திரத்தில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

நிறைவேற்று நிர்வாகத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் இடையிலான சுதந்திரத் தன்மை மீளமுடியாத அளவிற்கு பின் தள்ளப்பட்டுவிட்டது. ஜனாதிபதி இந்தப் பாணியில் அரசாங்கத்தின் கட்டமைப் புகளை மாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவர்களின் விருப்புத் தேர்வுகளுக்கான ஓர் சிறிய வாய்ப்பும் இன்றி ஜனாதிபதியின் எண்ணங்களுக் கும், விருப்புகளுக்கும் தலைசாய்க்க வேண்டியதாகவுள்ளது.

இந்நிலையில் பிரதம நீதியரசரும் இப்பொழுது நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழுவினரின் விசாரணைக்கும் அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்களிப்பிற்கும் உரிய வாதப்பொருளாக இருக்கவேண்டிய ஒருவராக உள்ளார்.

ஆதாரங்களைக் கேட்டறிந்து தீர்ப்பு வழங்கும் நடவடிக்கைக்காக நீதியின் ஆசனங்களில் உள்ள ஒவ்வொருவரும் பக்கசார்பற்றவர்களாகவும் அத்துடன் விடயம் தொடர்பான கருதுபொருளோடு எதுவித அக்கறைகள் மற்றும் ஆர்வங்களுடன் தொடர்பில்லாதவர் களாகவும் இருத்தல் வேண்டும்.

பிரதம நீதியரசருக்கெதிரான தீர்மானத்தில் கையொப்பமிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் உயர் நீதிமன்றில் அவர்களுக்கெதிரான வழக்குகளின் முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றனர் என்பதையும் மற்றும் சிலர் எதிர்க்கட்சி ஆசனங்களில் இருந்து தாவியவர்கள் என்பதையும் சுட்டிக்காட்டவேண்டிய அவசியம் உள்ளது.

ஓர் வழக்கு விசாரணைக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் நடுவர்குழாம் நடைமுறையில் தேர்வுசெய்யப்பட்ட நடுவர் ஒருவர் வழக்கு விசாரணைகளை முழுச் சுதந்திரத்துடன் கேட்டு நுணுகி ஆராய்தல் வேண்டும். அவ்விதமின்றி ஒரு நடுவர் தனது தெரிவில் ஏதாகிலும் ஒரு கருதுபொருளோ அல்லது முரண்பாடோ இருப் பதாகக் கண்டறியுமிடத்து அவர் அப்பதவி நிலையில் இருந்தும் நீக்கப்படுதல் வேண்டும். தேவையற்றவற்றை ஒழிப்பதை உறுதி செய்தலே நீதியை நிலைநாட்டுவதில் உள்ள ஓர் சிக்கலான விடயமாகும்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தின் ஒழுங்கு நடவடிக்கையில் நுழைந்து விட்ட அரசியலமைப்பின் தொகுதி 107 இன் தீர்மானத்தின் மீதான விமர்சனத் தைத் தவிர்ப்போம். எனினும் குற்றஞ் சுமத்துவதின் பின்னால் திரைமறை விலுள்ளவர்களையும் அத்துடன் நடை முறைகளையும் விமர்ச்சிக்கவேண்டிய தேவை உள்ளது.

ஓர் சாதாரண குடிமகன் நீதியைப் பெற்றுக்கொள்வதில் பல பாதுகாப்பு வழிகள் உள்ளன. உதாரணமாக கீழ் நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக உயர் நீதிமன்றம் ஒன்றில் மனுச் செய்யமுடியும். ஆனால் பிரதம நீதியரசர் அல்லது நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு விடயமெனில் அவ்வாறான உதவியை நாடமுடியாது.

ஆனபடியால் குற்றச்சாட்டுகள் அனைத்தும் குற்றப்பத்திரிகையாக மாற்றப்பட்டு அதன்பின்னர் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினரால் ஆதாரங்களைக் கேட்டறிந்து மிகுந்த கவனத்துடன் பகுப்பாய்வுசெய்து ஆராயப்படல் வேண்டும். ஓர் குற்றம் ஆதாரபூர்வமாகச் செய்யப்பட்டிருப்பினும் கூட அதுகுறித்து மேலும் நன்காராய்ந்து பரிசோதிக்க வேண்டியிருக்கும்.

உதாரணமாக முன்னாள் பிரதம நீதியரசரான நெவில் சமரக்கோன் கொழும்பிலுள்ள ஓர் கல்வியூட்டல் நிலையத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் ஆற்றிய உரையொன்று தவறானதாகக் கருதப்பட்டுக் குற்றஞ் சுமத்தப்பட்டது. ஆயினும் அது ஓர் குற்றச்சாட்டிற்கு வழிவகுக்காது போகவே அதனைத் தொடர்ந்து அவர் அக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

அரசியலமைப்பின் தெளிவான விளக்கமின்மையாலும் மற்றும் மக்களின் இறையாண்மை தொடர்பில் முக்கியமான பிரச்சினைகளுக்குத் தவறான தீர்ப்புகள் இடம்பெற்றமையொன்றும் இரகசியமானதல்ல. அதுபோலவே, நிறைவேற்று அதிகார முடையவர்களாலும் நாடாளுமன்றத் தினாலும் குறைபாடுகளையுடைய கவலையளிக்கும் முடிவுகள் எடுக்கப்பட் டமையும் ஒன்றும் இரசகியமானதல்ல. குறிப்பிடத்தக்க விடயமாக அரசியல மைப்பின் 17 வது திருத்த நீக்கம் அமையப் பெற்றது. என்றுமே ஓர் இழிவான அல்லது மட்டமான முடிவுகள் ஒருபோதும் ஓர் குற்றத்திற்கான அடிப்படையினைக் கொண்டிராது.

அரசியலமைப்புடன் மாற்று நிலைப் பாடுடையதான 18 வது திருத்தத்தைச் சேர்த்துக் கொள்வதற்கான உத்தரவினை வழங்கிய போது தலைமைதாங்கிய நீதித்துறையினர் அவர்களுக்கு உரித்தான சுதந்திரம் குறைக்கப்பட்டமை குறித்துக் கவலைகொள்ளாதிருந்தமை உண்மையாகவே ஓர் துரதிஸ்டமென்ப தைச் சுட்டிக்காட்டவும் வேண்டியுள்ளது.

நாடாளுமன்றில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை 2010 இல் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளால் பெறப்பட்டதாகக் கருதமுடியாது. இவ்விசேடமான பெரும் பான்மை எதிர்வரிசைகளில் இருந்தவர் களின் கட்சித் தாவல்களினால் உருவாக் கப்பட்டதொன்றாகும்.

விசேட பெரும்பான்மை மற்றும் பொது வாக்கெடுப்பு என்பவற்றினூடாக அரசியல மைப்புடன் மாறாத நிலைப்பாடுகளைக் கொண்ட சட்டக்கூறுகளையுடைய அரசியலமைப்பைக் கொண்டுள்ள ஒரு சில நாடுகளில் சிறீலங்காவும் ஒன்றாக உள்ளது.

திவிநெகும மசோதா ஜனாதிபதியின் சகோதரரான ஒரு அமைச்சரின் கீழ் அதிகாரங்களை ஒருமுகமாக மையப் படுத்துகின்ற ஒன்றாகவே இருக்கின்றது.

முன்மொழியப்பட்டுள்ள இம் மசோதாவானது அரசியலமைப்பில் பொதுமக்களின் நிதியுடன் தொடர்புடையதாக இருக்கும் நிபந்தனை 148 மற்றும் நிபந்தனை 150 ஆகியவற்றிற்கு மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத் துவதன் மூலமாக அரசியலமைப்பைச் சீர்குலைக்க முயல்வதுடன், மக்களின் இறையாண்மையின் ஓர் அங்கமாக விளங்கும் நிபந்தனை 3 இனையும் படுகுழிக்குள் தள்ளிவிட் டுள்ளது.

நிதிகள் யாவும் ஒருங்கிணைந்த நிதியில் வைப்பிலிடப்பட்டு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் திவிநெகும நிதிக்குக் கிடைக்கக்கூடியவாறு செய்யப்படல் வேண்டுமென உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

திவிநெகும மசோதாவும் கூட சட்டமன்றின் கரங்களுக்கு மேலாக அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரமுடையவர்களின் கரங்களை மேலும் வலுப்படுத்துவதற்கான ஓர் முயற்சியேயாகும். அதேவேளையில் நாடாளுமன்றின் ஆதிக்க வரம்பிற்கு வெளியே உள்ள நிதிகளைக் கையகப்படுத்தும் ஒரு முயற்சியாகவும் மற்றவர்கள் இதனைக் கருதுகின்றனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி சொத்துச் சுவீகரிப்பு மசோதாவின் மீதான தீர்ப்பு வழங்குகையில் உயர் நீதிமன்றம் அம்மசோதாவின் விதிக் கூறுகளான 2 (1) (பி) மற்றும் 7(பி) என்பவை அரசியலமைப்பின் நிபந்தனை 148 ற்கு எதிராக நிதிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை பூரணமாக நாடாளுமன்றிற்கு வழங்குகின்றது எனக்கூறியது.

நிபந்தனை 2 (1) (பி) நாடாளுமன்றின் விசேட அங்கீகாரமின்றி கடன்களைப் பெறுவதற்கான முயற்சியாகவும் அத்துடன் 7(பி) நாடாளுமன்றின் விவரமான அங்கீகாரமின்றி நிதிகளை ஒரு நோக்கத்திலிருந்து மற்றுமொரு நோக்கத்திற்கு ஒதுக்கீடுகளை செய்வதற்கான முடிவினை எடுக்கும் சுதந்திரத்தை அமைச்சர்களுக்குப் பரிந்துரைப்பதாகவும் உள்ளதென்பதை விளக்கிக்கூறியது.

உயர்நீதிமன்றத்தால் மேற்கூறப்பட்ட விளக்கங்கள் மற்றும் அண்மையில் வழங்கப்பட்ட உத்தரவுகள் யாவும் அரசாங்கத்தின் கடிவாளமிடப்படாத அதிகாரங்களையுடைய ஜனாதிபதிக்கும் மற்றும் நிறைவேற்று அதிகாரமுடையவர்களுக்கும் எரிச்சலூட்டுபவையாக அமைந்திருக்கும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

அதுமட்டுமல்லாது பிறர் கருத்தை ஈர்க்கும் வகையில் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கும் உயர் நீதிமன்றத்தின் புதிய சுதந்திரமான முயற்சியும் அரசாங்கத்திற்குக் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. போதைக்கு அடிமையானவர்களுக்கு மென்மேலும் போதையூட்டுவதற்கு போதைவஸ்து தேவைப்படுவதுபோல அதிகார போதையில் மூழ்கியவர்களுக்கு மேலும் மேலும் அதிகாரமே தேவை.

ஷிராணி பண்டாரநாயக்கா இன்று நேற்றல்ல கடந்த 15 ஆண்டுகளாகவே நீதித்துறைக்குள் வந்துவிட்டவர். கடந்த 15 ஆண்டுகளாக அவர் வழங்கிய தீர்ப்புகள் அவரின் பழக்கவழக்கங்கள் நடவடிக்கைகள் யாவும் ஆளும் தரப்பிலிருந்தவர்களால் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக இருந்தே வந்துள்ளன. பின்பு அவர் பிரதம நீதியரசர் என்ற உயர் நிலைக்கும் இந்த அரசினாலே தான் உயர்த்தப்பட்டார். ஆனால் இன்று நடப்பவை என்ன? இவற்றின் உள்நோக்கம் தான் என்ன?

எது எப்படியிருப்பினும் நிறைவேற்று அதிகாரமுடையவரும், நாடாளுமன்றமும் இதுவிடயத்தில் நீதியும் நியாயமுமான நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அத்துடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கால அவகாசமும் வழங்கப்படுதல் வேண்டும். அவ்விதமில்லையெனில் சிறிலங்கா அரசியலமைப்பின் படியான ஓர் சர்வாதிகார நாடாகவே இருக்கும்.

**தமிழில் ஜெகநாதன்**

***சண்டேலீடர் இதழில் எழுதியது எரான் விக்கிரமரட்ண***
***(நாடாளுமன்ற உறுப்பினர்)***

***

# கவிதைப்புனல்

## வளமான வாழ்வு



நினைவுகள் எல்லாம்
நிஜங்கள் ஆகினால்
மனித குலத்திற்கு
மரணமும் இல்லையே!

போராட்டமும்
போட்டியும் தானே
வளமான வாழ்வை
வனப்பாய் வழிப்படுத்தும்.

முயற்சிகள் செய்து
உயர்ச்சி அடைவாய்
கனவுகள் எல்லாம்
நனவுகள் ஆகும்.

வேல்மகள்
புளியம்பொக்கணை.

## மனங்களின் தேடல்



தொலைந்து போன
உறவுகளால்!
விலகிப் போகிறது
தூக்கம்.

கானலாகிப் போன
கற்பனைகளால்!
கருகிப் போகிறது
நிஜங்கள்.


மெல்ல மெல்ல எழுந்து
நடக்க முனைகையிலும்
மீண்டும் விழுகிறது
அடிகள்.

கள்ளம் கபடமற்ற
நெஞ்சங்கள்
தினம் தினம் வேலிகளுக்குள்
விரதம் இருக்கின்றன.

ஓ-உறவுகளே
சுயத்தை இழந்த பின்பும்
சுயசரிதை எதற்கு?
சுமைகளை இறக்கி - தினம்
சுதந்திரம் தேடு.

த.ஜனுப்பிரியா
திருவையாறும்.

## வகுப்பறை



கலைமகள் வாசம் கொள்ளும்
கலை பல கற்ற
களம் அது.

களிமகிழ் சிறக்க
கதை பயின்றோம்
கல்வி எனும் ஒளிபயின்றோம்.

கனவு மெய்ப்பட
கனிவுடன் நாம் நடந்தோம்.
கலங்கரை விளக்காய்
கரை சேர்த்த
கலைக்கூடம் அது.

காலம் நகர்ந்தது
கற்றல் முடிந்தது
கண்களில் கண்ணீர் கலந்தது.
கடைசி நாளில்
இருந்தவர் பிரிந்தோம்.
இவள் மட்டும் தனித்திருந்தாள்.

எம்.சிவா
கரவெட்டி மேற்கு.

## முகவரிக்காய்...



விடிகாலையில்
மறையும்
நிலவைப் போல.

நகரின்
மாலை நேர
பஸ்சில் அவளைப்
பார்த்தேன்.

கனவுகளுள்
வந்து போனாள்
கவிதைகளுள்
கலந்து போனாள்.

பஞ்சாபி உடை
அணிந்திருந்தாள்
கூந்தலிலே நித்தியகல்யாணி
பூவும் சூடியிருந்தாள்.

கையிலே சில
புத்தகங்களை நெஞ்சோடு
அணைத்து
வைத்திருந்தாள்.

சின்ன ரோஜா பூக்கள்
அலங்கரித்த
கைக்குட்டையை கசக்கி
பிடித்திருந்தாள்.

கடைசியாய்
யாழ்-முல்லைத்தீவு
பஸ்சில்
பார்த்தேன்.

அம்புலிக்கும்
சொல்லியிருக்கின்றேன்
அவள்
முகவரி தேட....

ஆ.முல்லைதிவ்யன்.

## புன்னகைக்கும் பூவினம்



சூரியனைக் கண்டு
முகம் மலர்ந்தேன் - இப்போ
பனித்துளி பட்டு
பரவசப்பட்டேன் - ஆயினும்

ஒரு நாள் வாழ்க்கையிலே
ஒரு கோடி அர்த்தம் கண்டேன்
பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே
புரிதல் கண்டேன்.

ஏங்கும் மனிதர்களே!
எந்தன் வாழ்க்கை புரிந்துவிட்டால்
துன்பம் மறந்து எனைப்போல்
இன்பமாய் வாழ்ந்து மடியுங்கள்.

க.பிரியா.

## மிகுதி....




உறவுகள் தினமும் உதிரத்தில் உதிர்ந்தது
தாயும் தந்தையும் தரையினில் மடிந்தனர்
பாட்டியும் பாட்டனும் படுக்கையில் இறந்தனர்
கூடிப் பிறந்தவர் குருதியில் நனைந்தனர்

மனமார வாழ்ந்த மனையும் வீழ்ந்தது
ஓடி விளையாடிய முற்றமும் தாழ்ந்தது
ஆசையாய் வளர்த்த செடிகளும் ஓடிந்தது
சேர்த்து வைத்த சொத்துக்கள் அழிந்தது

விழுமிய விழுதுகள் இடையில் அறுந்தது
கல்விச் சாலைகள் கருவறை இழந்தது
மூத்த குடியின் முடியது சரிந்தது
நிரந்தர முகவரி நிமிடத்தில் தொலைந்தது

எனது பெயரும் பலவாய் போனது
அயலவர் என்னை அனாதை என்றனர்
அரசு என்னை அகதி என்றது
ஏற்புடையோர் யார் இங்கு
என் பரம்பரையின் மிகுதி நான் என்று.

அ.அஜந்தன்
கந்தர்மடம்.



## இலவச வாக்குறுதிகள்

நாமெல்லாம் மலையில்
மேயும் ஆடுகள்
எங்கள் கழுத்து பட்டிகளை
நம்பி கொடுத்து
ஏமாறும் அபலைகள்
ஏமாறுவது வாங்கி வந்த வரமா!
மறப்பது எம்மக்களின் குணமா!
வாக்கு வியாபாரத்தில்
வாக்குறுதி மட்டுமே இலவசம்.

சு.நவரூபன்
உடப்புல்லைக்காடு.

# ராசி பலன்

**21.11.2012 - 27.11.2012**




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

அதர்மத்திற்கு தலை வணங்காதவர்களே! புது வேலை அமையும். சொந்த-பந்தங்கள் எதிர்பார்ப்புகளுடன் பேசுவார்கள். சிறுசிறு நெருப்புக் காயங்கள், திடீர் பயணங்கள், செலவுகள் வந்து செல்லும். அரசாங்க அதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். உணர்ச்சிவசப்படாமல் முடிவெடுக்க வேண்டிய வாரமிது.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

தொடங்கியதை முடிக்கும் வரை துவளாதவர்களே! வெளியில் கடன் வாங்க வேண்டி வரும். சிறுசிறு விபத்துகள், மின்சார சாதனப் பழுது, சகோதர வகையில் சங்கடங்கள் வந்து செல்லும். சொத்துப் பிரச்சினை தலைதூக்கும். மனைவியுடன் வீண் விவாதங்கள் வந்து போகும். பிள்ளைகள் செலவு வைப்பார்கள். எதிர்நீச்சலில் வெற்றிபெறும் வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

நெருக்கடி நேரத்திலும் பொறுமை இழக்காதவர்களே! சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். திருமணசீமந்தம், கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். உறவினர், தோழிகள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். மனஇறுக்கம், அலைச்சல் வந்து செல்லும். புதிய நண்பர்களின் வருகையால் முன்னேறும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

பிரச்சினைகளின் ஆணிவேரைக் கண்டறிபவர்களே! எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். பள்ளி, கல்லூரி காலத் தோழியை சந்திப்பீர்கள். சகோதர வகையில் இருந்த மனவருத்தம் நீங்கும். வேலைச்சுமை, தாயாருடன் மோதல்கள் வந்து செல்லும். தொலை நோக்கு சிந்தனையால் முன்னேறும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

மற்றவர்களை மதிப்பீடு செய்வதில் வல்லவர்களே! புது வேலை கிடைக்கும். திருமணப் பேச்சுவார்த்தை கைகூடும். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். வீடுமனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து செல்லும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப்போகும். அனுபவ அறிவால் சாதிக்கும் வாரமிது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

காலநேரம் பார்க்காமல் உழைப்பவர்களே! பணப்புழக்கம் அதிகரிக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வழக்கால் இருந்த நெருக்கடி நீங்கும். அரசால் அனுகூலம் உண்டு. கை, கால் வலி, அசதி வந்து போகும். வி. ஐ. பிகளால் அங்கீகரிக்கப்படும் வாரமிது.



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எதிலும் புதுமையை விரும்புபவர்களே! தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். உறவினர், நண்பர்களின் அன்புத் தொல்லைகள் குறையும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். திடீர் பயணங்கள் உண்டு. பேச்சால் பிரச்சினை, பார்வைக் கோளாறு, கண் எரிச்சல் வந்து செல்லும். சகோதர வகையால் சாதிக்கும் வாரமிது.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

நியாயத்தை பேசுபவர்களே! மகளுக்கு தள்ளிப் போய்க் கொண்டிருந்த கல்யாணம் நடந்தேறும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். நட்பு வட்டம் விரியும். வழக்கு சாதகமாகும். முன்கோபம், காரியத் தாமதம், அடிவயிற்றில் வலி, மாதவிடாய்க் கோளாறு வந்துச் செல்லும். தவிர்க்க முடியாத செலவுகளால் திணறும் வாரமிது.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

தயாள குணம் உள்ளவர்களே! பூர்வீக சொத்தை சீர்செய்வீர்கள். பிள்ளைகளின் கல்வி சம்பந்தப்பட்ட சந்தேகங்களைத் தீர்ப்பீர்கள். சகோதரிக்கு தள்ளிப்போன கல்யாணம் நிச்சயமாகும். திடீர் பயணங்கள், தூக்கமின்மை, வீண்செலவுகள் வரக்கூடும். பட்டறிவை பயன்படுத்தி உயரும் வாரமிது.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

பரம்பரை பழக்கங்களை விட்டுக் கொடுக்காதவர்களே! உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். கட்டிடவேலைகளை தொடங்குவீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். வீண் அலைச்சல், சகோதர வகையில் செலவுகள் வந்து போகும். வெற்றிப் பாதையில் நுழையும் வாரமிது.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கூடிவாழ ஆசைப்படுபவர்களே! வேலை தேடிக் கொண்டிருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். தாழ்வுமனப்பான்மை, தாயாருக்கு ஆரோக்கிய குறைவு, வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் வந்து போகும். தந்தையின் உடல் நிலை சீராகும். சிக்கனமும், திட்டமிடுதலும் தேவைப்படும் வாரமிது.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

அனுபவ அறிவால் அடுத்தவர்களை ஆக்கிரமிப்பவர்களே! தள்ளிப் போன திருமணம் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்திகள் வரும். மற்றவர்கள் பிரச்சினையில் அநாவசியமாக தலையிடாதீர்கள். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும்முன் கவனம் தேவை. விடாமுயற்சியால் விட்டதை பிடிக்கும் வாரமிது.

# மழையாய் மாறிய கோபம்




மகாவீரரின் சீடனான கோசலன் வாய்த்துடுக்கானவன். அவன், வேசாயனர் என்ற ரிஷியின் வற்றிய உடம்பைக் கண்டு கேலி செய்தான். கோபத்தில் வெகுண்டெழுந்தார் ரிஷி. அவரை சாந்தப்படுத்திய மகாவீரர், தவவாழ்வுக்கு கோபம் கூடாது என உணர்த்தும் கதையைச் சொன்னார்.

"குணால தேசத்து ரிஷிகள் இருவர் காட்டுப்பகுதியில் தவத்தில் ஆழ்ந்திருந்தனர். மழை பெய்யாமல் அப்பகுதியில் பெரும் பஞ்சம் உண்டானது. மரம்,செடி, கொடிகள் வாடின. ஆடுமாடுகள் குடிப்பதற்கு நீர் கூட கிடைக்கவில்லை. ஆடுமேய்க்கும் சிறுவர்கள், ரிஷிகள் இருவர் காட்டில் தவம் செய்வதைக் கண்டனர். சரீரம் மெலிந்து வற்றிய வயிறோடு இருந்த இருவரையும் பார்த்ததும் சிரித்து விட்டனர். அவர்களில் ஒரு சிறுவன், "ஏன் இவர்கள் இருவரும் இங்கு கடுந்தவம் செய்கிறார்கள்? இவர்கள் நினைத்தால் என்ன மழையா கொட்டப் போகுது?," என்று காதில் விழும்படி கேலி பேசினான்.

கிண்டல் மொழிகளைக் கேட்டதும் ரிஷிகளுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. கண்விழித்த இருவரும் ஆத்திரத்துடன், "விடாது இங்கே அடைமழை பெய்யட்டும்," என்று கத்தினார்கள். அவர்களின் தவசக்தியால் பதினைந்து நாட்கள் தொடர்ந்து இரவும்பகலும் அடைமழை கொட்டித் தீர்த்தது. எங்கும் தண்ணீர் சூழ்ந்து காட்டாற்று வெள்ளம் கரை புரண்டோடியது. துரும்பு கூட மிஞ்சாமல் எல்லாம் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது. தவத்தில் இருந்த இரண்டு ரிஷிகளையும் சேர்த்துத் தான்," என்று கதையை முடித்தார் மகாவீரர்.

கோபம் பிறரையும் அழித்து, தன்னையும் அழிக்கும் என்பது இக்கதையின் தத்துவம்.

# மாமிச உணவு வேண்டாமே!



* படுக்கும் போது இடதுகை பக்கமாக படுப்பதுடன், நான்கு மணி நேரம் தூங்க வேண்டும். அதன்பின் விழித்துக் கொண்டு நல்ல சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும்.
* உணவில் மாமிசம் சேர்த்துக் கொள்ளாததுடன், எப்படிப்பட்ட உணவாக இருந்தாலும் சிறிது குறைத்து, பசிக்கும் போது மட்டும் சாப்பிட வேண்டும்.
* வேற்று நாட்டினரிடத்தும், வேற்று மதத்தினரிடத்தும் மட்டுமின்றி உயிரினங்கள் அனைத்தின் மீதும் அன்பு கொள்ள வேண்டும்.
* மனிதனாகப் பிறந்தவன், மற்றவர்களுக்கு உதவும் மனம் உடையவனாக இருக்க வேண்டும். பிறர்படும் துயரைக் கண்டும் காணாது இருப்பவன் எதற்கும் உதவாதவன்.
* பசி, துன்பம் ஏற்பட்டால் அறிவு அழிந்து அழிவு ஏற்படும். பசிப்பவர்க்கு தக்க உதவி செய்வது அனைவரின் கடமை.
* பொய், புறங்கூறுவது போன்ற செயல்களால் முன்னேறலாம் என நினைக்கக் கூடாது. அது ஒரு நாள் மிகப்பெரிய அழிவில் கொண்டு போய் விட்டுவிடும்.
* ஓர் உயிரைக் கொன்று மற்றோர் உயிரின் பசியை போக்குவது கடவுள் அருளுக்கு ஏற்புடையதல்ல.

**- வள்ளலார்**

# உனக்கு இருபது எனக்கு எழுபது!

எழுபது வயது கிழவர், இருபது வயது பெண்ணுடன் கைத்தொலைபேசியில் காதல் உறவை வளர்த்துள்ளார் - தன்னை இளைஞனாகக் காட்டி கொண்டு. உண்மை அறிந்த அந்த பெண் அதிர்ச்சியில் மயங்கிப் போனாள். பார்க்காமல் காதல் கொள்வது ஒரு திரில் என்று எண்ணுகிற தன்மை சில இளவயதினரிடமுள்ளது. சில சமயங்களில் அது பெருமை கொள்ளும் விதமான ஒன்றாகியும் விட்டது. கைத்தொலைபேசி - எதற்காக பயன்பட வேண்டுமோ, அதைத் தவிர்த்து எல்லாவற்றுக்கும் பயன்படத் தொடங்கிவிட்டது.

இந்த விஷயத்தில், நம் இளம்பெண்கள் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிற கதியில் இருப்பது வருத்தமான விடயம். இதன் விளைவாக, வட இந்தியாவில் சில கிராமங்களில் கைத்தொலைபேசியை பெண்கள் உபயோகிக்கத் தடை விதிக்கின்றனர். கைத்தொலைபேசி - முன்பின் தெரியாதவனோடு காதலை வளர்க்க அல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

கைத்தொலைபேசிகளுடன் நடமாடும் பல இளைஞர்கள் வீதியில் செல்லும் இளம்பெண்களிடம் கைத்தொலைபேசி இலக்கத்தை கேட்கின்றனர். சில பெண்கள் அதைக்கொடுத்துவிட்டு, பின் பொழுது போக்கிற்காக அவர்களுடன் உரையாடவும் செய்கின்றனர். திருமணமான நடுத்தர வயதுப்பெண்கள் கூட தங்களைவிட வயது குறைந்த இளைஞர்களுடன் இவ்வாறு தொலைபேசியில் கதைத்து பொழுது போக்குவதை ஒரு இன்பமாகவே கருதுகின்றனர். இத்தொலைபேசி உறவுகள் வீடுவரை அல்லது விடுதிகள் வரை தொடர்வதும் உண்டு. இதனால் பல சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளும் குடும்பத்தில் பிரிவுகளும் ஏற்பட்டுவருகின்றன.

இருபத்திமூன்று வயது பெண்ணை எழுபது வயது கிழவர் ஏமாற்றியமை குறித்த தகவல் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது. அது குறித்து தினமலர் இணையத்தளத்தில் வெளிவந்தது.

கைத்தொலைபேசி மூலமாக ஒருவரை, ஓராண்டு காலமாக, காதலித்து வந்திருக்கிறாள், 23 வயது நிரம்பிய இளம் பெண் ஒருத்தி, தனது கைத்தொலைபேசிக் காதலனை முதல் முதலாகக் கண்டதும் அதிர்ச்சி அடைந்து, மயங்கி விழுந்துள்ளார். அவரது அதிர்ச்சிக்கு காரணம், தான் கைத்தொலைபேசியூடாக



இவ்வளவு காலமும் காதலித்து வந்தது 70 வயது கிழவர் என்பதுதான்.

இச்சம்பவம் இந்தியாவில் கேரளத்தில் இடம்பெற்றுள்ளது.


கேரளா, திருவனந்தபுரம் போத்தன்காடு பகுதியைச் சேர்ந்த, 23 வயது இளம் பெண்ணுக்கு, ஒரு ஆண்டுக்கு முன், கண்ணூர் பகுதியைச் சேர்ந்த, அம்சா என்பவர், மொபைல் தொலைபேசி மூலம் அறிமுகமானார். எம்.டெக்., பட்டதாரியான, அந்த இளம் பெண்ணும், அம்சா என்பவரும் அடிக்கடி மொபைலில் உரையாடி வந்தனர். இதனால் மெல்ல மெல்ல இருவரும் காதல் வயப்பட்டனர்.

ஓராண்டாக, இருவரும் நேருக்கு நேர் பாரக்காமலேயே, கைத்தொலைபேசிப் பேச்சிலேயே தங்கள் காதலை வளர்த்தனர்.

**உண்மைச் சம்பவம்**

இந்நிலையில், காதலனை பார்த்து விடவேண்டும் என்ற ஆவல், அந்த இளம்பெண்ணுக்கு ஏற்பட்டது. அதற்காக, இம்மாதம், ஒரு நாள் இரவு, திருவனந்தபுரத் திலிருந்து பஸ்சில் புறப்பட்டு, அதிகாலை, 5.00 மணிக்கு, கண்ணூர் கூத்துப்பரம்பு பஸ் நிலையம் சென்றடைந்தார். அங்கிருந்தபடி, பலமுறை காதலனை தொடர்பு கொள்ள முயற்சித்தும், முடியவில்லை.

இதனால், நீண்ட நேரம் பஸ் நிலையத்தில் சுற்றித் திரிந்தார். அதைக்கண்டு சந்தேகம் கொண்ட சிலர், போலிசுக்கு தகவல் கொடுத்தனர். பொலிசார், இளம்பெண்ணை போலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரித்தனர். விசாரணையில், அவர் தன் காதலன் அம்சாவை தேடி வந்ததாகக் கூறி, அவரது மொபைல் போன் எண்ணை பொலிசாரிடம் கொடுத்தார். பொலிசார் அந்த எண்ணை தொடர்பு கொண்டபோது, இப்ராகிம் என்பவர், போனை எடுத்தார்.



அவரை உடனடியாக, பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்தனர். இளமையான காதலன் வருவார் என, ஆவலோடு காத்திருந்த இளம்பெண்ணுக்கு, இப்ராகிமைக் கண்டதும் அதிர்ச்சியும் கலக்கமும் ஏற்பட்டது.

ஏனெனில், வந்தவர் 70 வயதுக் கிழவர். இந்தக்கிழவர்தானா இவ்வளவு காலமும் தன்னுடன் தொலைபேசியில் பேசிவந்த காதலன் எனத் தெரிந்ததும், அதிர்ச்சியடைந்து, அப்பெண் மயக்கமடைந்தார். அவர் மயக்கம் தெளிய, பொலிசார் உதவினர். மயக்கம் தெளிந்து எழுந்த அப்பெண், இளம் வயதுடையவர் எனவும், அம்சா தன் பெயர் எனவும் இப்ராகிம் தன்னிடம் பொய் சொல்லி, ஏமாற்றிவிட்டதாக, போலிசில் புகார் செய்தார்.

பொலிசார் நடத்திய விசாரணையில், இதுவரை ஒரு முறை கூட, இப்ராகிம் அப்பெண்ணை அழைத்து பேசியதில்லை என்றும், இப்பெண்ணுக்குச் சொந்தமாக, மொபைல்போன் இல்லை என்றும், அவரது உறவினர்களின் மொபைல்போன் மற்றும் தரைவழி தொலைபேசி மூலம், இப்ராகிமை, அவரே தொடர்பு கொண்டு காதலை வளர்த்து வந்துள்ளார் என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து, அந்த இளம் பெண்ணின் உறவினர்களை போலிசார் வரவழைத்து, அவர்களிடம், அப்பெண்ணை ஒப்படைத்தனர்.

பார்த்துப் பார்த்து காதலித்தாலே ஆயிரத்தெட்டு வில்லங்கங்கள் உள்ள இந்த நாளில் பார்க்காமல் காதலிப்பதும், பாழுங்கிணற்றில் விழுவதும் ஒன்றுதான். இந்தச் சம்பவத்தில் - அப்பெண்ணே தொலைபேசியில் பேசியதாக சொல்லப்பட்டாலும் - தானொரு முதியவர் என்பதை எடுத்துச் சொல்லாமல் விட்டது அந்த முதியவர் செய்த பெரிய தவறு. ஆசைக்கு வயசில்லை... எழுபதிலும் அது ஆசை வரலாம். இவ்வாறான சம்பவங்கள் மூலம் சில பாடங்களை பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறான ஏமாறும் சம்பவங்கள் நிறைய நடக்கின்றன. கைத்தொலைபேசி காதலில்



ஒரு 'த்ரில்' இருப்பதாக உணர்கின்றார்கள் சிலர். இவ்வாறான தொடர்புகளில் ஏமாறுபவர்கள் பெண்களே. ஏமாறுவதற்கு தயாராக இத்தகைய பெண்கள் காத்திருக்கும் போது, ஏமாற்றுவது ஒன்றும் பெரிய விடயமல்ல என்று சில ஆண்கள் நினைக்கின்றார்கள். பெண்கள் - தங்களை தாங்களேதான் காத்துக் கொள்ள வேண்டும். சட்டங்கள் ஓரளவுக்கே தண்டனையை பெற்றுதர இயலும். நமது முட்டாள்தனத்துக்கு சட்டம் என்ன செய்யும்?

# கண்கள் மூலம் குரலை வெளிப்படுத்துங்கள்!



பேச்சு என்பதன் சிக்கலான கூறுகள் பற்றிய பாடம் இல்லை இது. இந்த அத்தியாயத்தில் தொனி அமைப்பு, குரலில் ஏற்ற இறக்கம், தெளிவாய்ப் பேசுதல், குரல் வளையை உபயோகப்படுத்தும் பல வழிகள் பற்றி எல்லாம் பேசப் போவதில்லை. அதற்குத் தனி நூலே தேவைப்படும். அந்த விஷயம் பற்றி நிறைய நல்ல நூல்கள் கிடைக்கின்றன.

இந்த அத்தியாயத்தின் நோக்கம் ஒன்றே ஒன்றுதான்.

**காந்த சக்தியுடன் கூடிய குரலை உங்களுக்கு அளிப்பது.**

இதற்கு மிகச் சுலபமான, சாத்தியமான வழியான குரலின் ஒரு செயல்பாட்டை நாம் கவனிப்போம். **எடுப்பான குரல்.** தனிப்பட்ட நபர்களிடமோ அல்லது குழுக்களிடமோ நீங்கள் பேசும் வார்த்தைகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறீர்கள் என்பதைக் கவனிப்போம்.

மீண்டும் எளிமைப்படுத்த உங்கள் குரல் ஒலி, வாய்க்குள் இருந்து வருகிறது - சொல்லப்பட்ட வார்த்தைகளாக, இது உடல் ரீதியானது.

ஆனால் உங்கள் குரலைக் கட்டுப்படுத்துவது மனத்தின் காரியம்.

உங்கள் குரலை எங்கு எவ்வாறு எடுத்துக் காட்ட வேண்டும் என்பதை நீங்கள் சிந்திக்கிறீர்கள். உங்கள் சிந்தனையின் மூலம் பிரக்ஞையின் அடிஆழத்து செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துகிறீர்கள். அவை விழிப்புடன் கூடிய மேல் மதத்தினால் கட்டுப்படுத்த முடியாதவை.

முந்தைய அத்தியாயத்தின் உதாரணத்தை விளக்கும் விதமாக, உங்கள் பேச்சு வார்த்தை களை மற்றவர் கண்களுக்குள் செலுத்துவதாக நீங்கள் உணர்ந்து சிந்திக்கும் போது, நீங்கள் கண் தொடர்பை மிகவும் தீவிரப்படுத்துகிறீர்கள். இது முந்தைய அத்தியாயத்தில் கூறப்பட்டது.

நீங்கள் அறிந்து கொண்டபடி கண் தொடர்பு நேரடியாக, தீவிரமாக மற்றவர் கண்களை நோக்கும்போது ஏற்படுகிறது. இது உங்கள் தனிப்பட்ட காந்தசக்தியை அதிகப்படுத்துகிறது. மற்றவர்களைக் கவர, அவர்கள் உங்கள் சார்பாகச் செயல்பட இந்தக் காந்தசக்தி பயன்படுகிறது.

உங்கள் குரலில் காந்தக் கவர்ச்சி உண்டாக்க உங்கள் கண்களிலிருந்து மற்றவர்கள் கண்களுக்குள் உங்கள் குரலை நேரடியாக ஆழமாக எடுத்துக் காட்டுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

உங்கள் குரல், உங்கள் வாயிலிருந்து வெளிப்படுவதாக நீங்கள் நினைக்கவோ, உணரவோ செய்யாதீர்கள். மாறாக உங்கள் கண்கள் மூலமாக நேரடியாக ஆழமாக மற்றவர் கண்களுக்குள் உங்கள் குரல் காந்த ரீதியாகப் பாய்ந்து செல்வதாக நீங்கள் நினைத்து, உணரவும் செய்யுங்கள்.

உங்கள் உடலில் எந்தப் பகுதியிலிருந்தும் உங்கள் குரல் உருவாவதாக நீங்கள் நினைக்க முடியும். எங்கு உருவாகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அங்கிருந்து தோன்றுவதாக நீங்கள் உணர முடியும்.

உதாரணமாக, பேச்சுப் பயிற்சியாளர்கள் பேச்சாளர்களின் தேவைக்கேற்ப, குரல் எடுத்துக் காட்டும் உடலின் பகுதிகளைப் பற்றி போதிக் கிறார்கள். (இது அவரவர் தனிப்பட்ட கொள்கைகளைப் பொறுத்தது)

பேச்சாளர் தொண்டைத் தசைகளை மிகுதியாகப் பயன்படுத்தி தொண்டையிலிருந்து பேசுவதாக உணர்வது சாதாரணமான ஒரு பேச்சு சம்பந்தப்பட்ட பிரச்சினை.

இந்தப் பேச்சு சம்பந்தப்பட்ட பிரச்சினையான தொண்டைத் தன்மையை போக்க பேச்சு சிகிச்சையில் உடல் ரீதியான பயிற்சிகள் உள்ளன. ஆனால், இந்த அத்தியாயத்தின் நோக்கம் உடல் ரீதியான பேச்சு சிகிச்சை இல்லை. எனவே மனோதத்துவ உத்திகளை மட்டும் தெரிந்து கொள்வோம்.

தொண்டையிலிருந்து சப்தம் வருகிறது என்ற மனத்தின் சிந்தனையை எங்ஙனம் போக்குவது? தொண்டையைத் தவிர வேறு எங்கிருந்தோ சப்தம் வெளிப்படுகிறது என்று சிந்தித்து உணர்வதன் மூலம்.

தொண்டையிலிருந்து, வாய் நுனியிலிருந்து பேசுவதைத் தடுக்க அநேக எடுத்துக் காட்டு உத்திகள் உள்ளன.

1. உங்கள் நெற்றியிலிருந்து குரல் கிளம்புவதாக நினைத்து உணருங்கள். தொண்டை பற்றிய பிரக்ஞையை மறந்து விடுங்கள். குரல் உயர்வதை உணர்வீர்கள். தொனியும் வீச்சும் அதிகமாகும். தொனியைக் கட்டுப்படுத்த பயிற்சி மேற் கொள்ளுங்கள்.

2. ஒரு ஜனாதிபதியின் மனைவி பொது வாழ்வில் பங்குபெற விரும்பினார், அடிக்கடி பேச வேண்டி நேர்ந்ததால் பேச்சுப் பயிற்சி மேற்கொண்டார். மைக்குக்கு முன்னால் ஆறு அங்குலம் தூரம் தள்ளிப் பேசுமாறு அவர் போதிக்கப்பட்டார்.

இதனால் அவர் குரல், தொண்டை, வாய், மூக்கிலிருந்து விடுபட்டுக் கணீர் என்று மாறியது.

3. பொது இடங்களில், பெரிய மக்கள் கூட்டம் முன் பேசும் போது, நீங்கள் கடைசியில் உங்களிடமிருந்து தள்ளி அமர்ந்திருக்கும் நபரை நோக்கி உங்கள் குரலை உயர்த்திப் பேச வேண்டும். ஒலி பெருக்கி வசதி இல்லாத பழைய நாள்களில் இது அவசியத் தேவையாக இருந்தது. இப்பொழுதும் இது நல்ல உத்தியே. குரல் அளவை உயர்த்த தற்போது தேவை இல்லை என்றாலும், வீச்சுப் பெற, பிறரைச் சென்றடைய இது அவசியம்.

பேச்சுக் கலையைக் கற்றுத்தர இந்த உதார ணங்கள் தரப்படவில்லை. ஆனால் இவை பயனுள்ளவை. மாறாக, காந்தக் கவர்ச்சியுடன் கூடிய குரல் பெற, அடிப்படைக் கொள்கைகள் வலியுறுத்தப்படுகின்றன.

1. உங்கள் குரல், முகத்தின் எந்த ஒரு பாகத்திலிருந்தும் வெளிப்படுவதாக நீங்கள் நினைத்துக் கொள்ளலாம். தொண்டை, வாய், உதடுகள், மேல்வரிசை முன்பற்களின் பின்பக்கம். (இது நல்ல தொனியைத் தரும் வழி) நெற்றி (இன்னும் சிறப்பான தொனியைத் தரும் வழி) உங்கள் கண்களிலிருந்து, உங்கள் கண்கள் மூலம் குரல் வருவதாக உணரலாம்.

உங்கள் குரல் எடுபடும் விதத்தைச் சிந்திக்கும் போது இந்தக் கருத்து உங்களுக்கு உதவும் - உங்கள் சிந்தனைகள் வழிகாட்டுவது போல உங்கள் குரல் எடுப்பாக மிளிரும்.

2. உங்கள் கண்களிலிருந்தும் குரல் கிளம் புவதாக உணரலாம். எங்கு உங்கள் குரல் சென்றடைய வேண்டும் (குறிப்பிட்ட இடம்) என்றும் நீங்கள் கட்டுப்படுத்தலாம்.

உங்கள் கண்களிலிருந்து கண்கள் மூலம் மற்றவர்கள் கண்களுக்கு நேரடியாக ஆழமாக உங்கள் குரலைப் பாயச்செய்யலாம் - அப்படி நீங்கள் செய்வதாக, உணர்வதாக நினைத்தாலே போதும், விளைவு மந்திரம் போன்ற காந்தசக்தி.

தனிப்பட்ட காந்தசக்தியை அதிகரிக்க, பிறர் கண்களை நேராக ஆழமாகக் காணவேண்டும் (கண் தொடர்பு) காந்தசக்தியுடன் கூடிய கண்மொழி இதுவே.

'இப்பொழுது **கண்ணுக்கு கண், குரல் தொடர்பு மூலம்** தனிப்பட்ட காந்தசக்தியை மேலும் தீவிரமாக வெளிப்படுத்தலாம்.

உங்கள் கண்களிலிருந்து, கண்கள் மூலம் உங்கள் குரலை வெளிப்படுத்தி பிறர் கண்களுக்குள் நேரடியாக ஆழமாகச் செலுத்தி, அவர்கள் கண்கள் மூலமாக அவர்கள் மனத்திலும் புக வேண்டியது மிக முக்கியமான சமாச்சாரம். இதை நாம் சற்று ஆராய்வோம்.

உங்கள் குரலை வெளிப்படுத்தும் நடை முறையை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கட்டுப்படுத்தலாம்.

உங்கள் கண்களிலிருந்து, கண்கள் மூலம் குரலை எடுத்து விடுங்கள் - முதலில் உங்கள் கண்களிலிருந்து கண்கள் மூலம் குரல் கிளம்புவதாகச் சிந்தியுங்கள். பிறகு உங்கள் கண்களிலிருந்து கண்கள் மூலமாக குரல், நிஜமாகவே பயணிப்பதை நீங்கள் உணரத் தொடங்குவீர்கள்.

உங்கள் குரல் தோன்றும் இடத்தை உங்கள் சிந்தனையும், உணரும் விதமும் சுத்தமாகக் கட்டுப்படுத்துகின்றன. உங்கள் கண்களிலிருந்து கண்கள் மூலம் குரல் எடுபடுவதாக, சிந்தியுங்கள்; உணருங்கள்.

இது போலவே உங்கள் குரல், எங்கிருந்து கிளம்புவதாகவும் (மிக குறிப்பிட்ட பகுதி) நீங்கள் தேர்ந்தெடுத்துக் கட்டுப்படுத்த முடியும். மற்ற நபர் எங்கு அதைப் பெற வேண்டும் என்பதையும் நீங்கள் தீவிரமாக செயல்படுத்த முடியும்.

மற்றவர் கண்களுக்குள் உங்கள் குரலை நேரடியாக ஆழமாகப் பாய்ச்சுங்கள் - மற்றவர் கண்களுக்குள் உங்கள் குரல் ஆழமாக நேரிடையாகப் பாய்கிறது என்று சிந்தித்து உணர்வதன் மூலமே.

ஏனென்றால் **கண்கள் மனத்தின் சாளரங்கள்.**

எனவே மற்றவர் கண்கள் மூலம் அவர்கள் மனதிற்குள் உங்கள் குரலைச் செலுத்துகிறீர்கள்.

பிறரை மயக்கி அவரை உங்கள் வசப்படுத்தும் ஹிப்னாடிஸக் கலையின் அடிப்படை இவ்வளவேதான்.



# இராட்சத அனகோண்டாவுடன் நீச்சலடித்த தைரிய மனிதன்



சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பிரான்கோ பான்பி என்ற சுழியோடி வீரர் பிரேசில் பகுதியில் உள்ள நீர்ப்பரப்பு ஒன்றில் 26 அடிகள் நீளமான அனகோண்டா பாம்புடன் நீச்சல் போட்டிருக்கின்றார்.


# உலக சாதனை படைத்த காளை




அயர்லாந்தின் வடக்குப் பகுதியில் வளர்ந்து வரும் பிறந்து 17 மாதங்களே ஆன காளை ஒன்று உலகிலேயே உயரம் குறைந்த காளை என்ற கின்னஸ் சாதனையில் பதிவாகியுள்ளது. இதன் உயரமானது வெறும் 30 அங்குலமே ஆகும்.



# வியக்கத்தக்க முப்பரிமாண ஓவியங்கள்



# இரத்த கண்ணீர் வடிக்கும் சிறுவனால் தாய் அவதி



ஆந்திரா, பிரகாசம் மாவட்டத்தைச் சேர்ந்த பத்மா என்ற பெண்ணுக்கு பிரம்மையா (வயது 12) என்ற மகன் இருக்கிறான்.

இவனுக்கு 5 வயது இருக்கும் போதே மூக்கிலிருந்து ரத்தம் வடிந்தது. அதற்குரிய சிகிச்சைக்கு பின்னர் குணமடைந்தான்.

இருப்பினும் சில காலத்திற்குப் பின்னர் அவனுடைய கண்ணிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கியது. இதற்காக தனது சொத்துக்களை எல்லாம் விற்று மகனுக்கு சிகிச்சை அளித்தார்.

பணம் பற்றாக்குறையான போது ஊர் மக்கள் கோவில் கட்ட நன்கொடையாக வைத்திருந்த ரூ.30 ஆயிரத்தை கொடுத்தனர்.

இதை வைத்துக் கொண்டு வேலூர் சி.எம்.சி வைத்தியசாலையில் பிரம்மையாவை அனுமதித்த போது பிளட் பிலேட் லெட் டிசாடர் என்ற நோய் தாக்கியிருப்பதாகவும் இது கோடியில் ஒருவருக்கு மட்டுமே வருமெனவும் இதனால் கண் பார்வை பாதிக்கப்படுமென்றும் கூறியிருக்கின்றனர்.

மேலும் இந்நோயை குணப்படுத்த ரூ.10 லட்சம் வரை செலவாகுமெனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# செல்லப்பிராணியான காட்டு ராஜா





# Item பாடலில் அஞ்சலி!

'சிங்கம் 2' படத்தில் ஒரு குத்துப் பாடல் இருக்கிறதாம். இப்பாட்டிற்கு சூர்யாவுடன் ஆட நயன்தாரா, ஸ்ரேயா ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் திகதி பிரச்சினையால் அவர்களால் ஆட இயலவில்லை. தற்போது அப்பாட்டிற்கு ஆட அஞ்சலியை ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள். சுந்தர் சி.யின் 'கலகலப்பு', ஆர்யாவுடன் 'சேட்டை' படத்தில் முத்தக்காட்சி என கிளாமர் பக்கம் கவனம் காட்டும் அஞ்சலியை இப்பாட்டிற்கு ஆட பெருந்தொகை கொடுத்து ஒப்பந்தம் செய்து இருக்கிறார்கள்.

# 'துப்பாக்கி' வெற்றிப் படமாக அமையும்



விஜய் நடித்த 'துப்பாக்கி' படம் குறித்து விஜய் அளித்த பேட்டி வருமாறு:-

'துப்பாக்கி' ஸ்டைலிஸ் படமாக தயாராகியுள்ளது. இதில் புதிய கெட்டப்பில் வருகிறேன். மும்பையில் படமாக்கப்பட்டு உள்ளது. ஏ.ஆர்.முருகதாஸ் கைவண்ணத்தில் வந்துள்ளது.

'துப்பாக்கி' முழுக்க, முழுக்க முருகதாஸ் படம். கதை பிரமாதமாக உள்ளது. அதனால்தான் ஒளிப்பதிவாளர் சந்தோஷ் சிவன். அதிக நாட்கள் எடுத்து வேலை செய்தார். படம் பிரமாதமாக வந்துள்ளது.

இந்த படத்தில் பஞ்ச் வசனங்களுக்கு அவசியம் இல்லை. காரணம் படமே பஞ்ச் தான். கொமெடிக்கு சத்யன் இருக்கிறார். எனக்கும், கதாநாயகி காஜல் அகர்வாலுக்கும் இடையிலான காதல் காட்சிகளில் அவருடைய கொமெடி அசாதாரணமாக அமைந்துள்ளது. பாடல்கள் ஹிட்டாகியுள்ளன. படத்தில் எல்லா பாடல்களுமே நன்றாக வந்துள்ளன.

அலைக்கா லைக்கா, கூகுள் கூகுள் பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்த பாடல்கள் ஆகும்.

ஆரம்பத்தில் நான் நடித்த படங்களில் காஸ்ட்யூமில் கவனம் செலுத்தவில்லை. ஆனால் 'போக்கிரி' படத்துக்கு பிறகு நான் அணியும் ஆடைகள் பற்றி தனிப்பட்ட முறையில் எனக்கு அக்கறை வந்துள்ளது.

'துப்பாக்கி' படத்தில் ஒவ்வொரு பிரேமிலும் நான் சிறப்பாக தெரியும்படி காஸ்ட்யூம்கள் வடிவமைக்கப்பட்டது. எதிர்காலத்தில் வித்தியாசமான கேரக்டர்களில் நடிக்க ஆர்வம் உள்ளது. சிறந்த இயக்குநர்கள் படங்களிலும் நடிக்க விரும்புகிறேன். இம்மாதம் இறுதியில் ஏ.எல்.விஜய் இயக்கும் படத்தில் நடிக்க உள்ளேன்.



# இரண்டு கெட்டப்பில் நடிக்கிறார் லட்சுமிராய்.

'ஒன்பதுல குரு' படத்தை எழுதி இயக்கும் பி.டி.செல்வகுமார் கூறியதாவது: கல்லூரி வாழ்க்கையை அனுபவிக்கும் 4 இளைஞர்கள் அதன்பிறகு இன்னொரு வாழ்க்கையை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்போது அந்த சூழல் அவர்களை எப்படி மாற்றுகிறது என்பதை நகைச்சுவை ததும்ப கதை கூறுகிறது. வினய், சத்யன், பிரேம்ஜி, அரவிந்த் நண்பர்களாக நடிக்கின்றனர். இதில் இருவித கெட்டப்பில் நடிக்கிறார் லட்சுமி ராய்.

இந்தியில் வித்யாபால...
பெரும் வரவேற்பை பெற்...
படத்தினை தமிழ் மற்று...
ரீமேக் பேச்சுவார்த்தை ...
காலமாக நடைபெற்று ...
நிறைமாத கர்ப்பிணி வேட...
பாலன் நடித்த 'KAHAAN...
சமீபத்தில் பார்த்த அனு...
பாலன் வேடத்தில் நடிப்ப...
பச்சை கொடி காட்சி ...



## வித்யா பாலன் ... அனுஷ்க...

## ஆயுர்வேத சி... நயன்...

நடிகை நய...
விஷ்ணுவர்தன் இ...
படாத படத்தில் அஜீத்...
நடிக்கிறார். ஆர்யாவு...
என்ற படத்திலும் ந...
நயன்தாராவுக்கு இன்...
வாய்ப்புகள் குவி...
இருக்கின்றன. தமிழ் த...
மலையாளத்திலும் நடித்...
, தன் அழகை மேலு...
நினைக்கிறார். இதனா...
களுக்கு இடையே மாத...
கேரளாவுக்கு சென்...
இளமையாகவும், தோல்...
பாகவும் இருப்பதற்காக...
வேத சிகிச்சை ...
மேற்கொண்டு வ...

# 1000 திரையரங்கில் 'ஓங்காரம்'



ராணா டக்குபதியின் 'ஓங்காரம்' நவம்பர் 30ஆம் திகதி 1000 தியேட்டர்களில் திரையிட ஏற்பாடு. நடிகர் ராணா டக்குபதி பல்வேறுபட்ட கதாபாத்திரங்களில் நடித்துள்ள படம் 'கிரிஷ்ணம் வந்தே ஜகத்குரும்' (தெலுங்கு). தமிழில் இந்த படம் 'ஓங்காரம்' என்ற பெயரில் உருவாகிறது. நயன்தாரா பத்திரிகையாளராக நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளிலும் நவம்பர் 30ஆம் திகதி ரிலீசாகும் இப்படம் 1000 தியேட்டர்களில் திரையிடப்படுகிறது.

# நந்திதா தாஸுக்கு பிரான்ஸ் செவாலியே விருது...



இயக்குநர் தங்கர்பச்சான் இயக்கத்தில் வெளிவந்த 'அழகி' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானவர் பொலிவூட் நடிகை நந்திதா தாஸ். தொடர்ந்து மணிரத்னத்தின் 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்தில் நடித்ததன் மூலம் மேலும் பிரபலமானார். இவர் தற்போது சீனுராமசாமி இயக்கும் 'நீர்ப்பறவை' திரைப்படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்நிலையில் நந்திதா தாஸுக்கு பிரான்ஸ் அரசு செவாலியே விருது அறிவித்து கௌரவித்துள்ளது.



ாலன் நடிப்பில்
பெற்ற KAHAANI
ற்றும் தெலுங்கு
தை மிக நீண்ட
ற்று வருகிறது.
வேடத்தில் வித்யா
ANI' படத்தினை
னுஷ்கா, வித்யா
ப்பதற்கு உடனே
ட்சி விட்டார்.



ன் ரோலில்
ஷ்கா!

## சிகிச்சை பெறும் ...யன்தாரா!

நயன்தாரா, தற்போது
இயக்கும் பெயரிடப்
ஜீத்துக்கு ஜோடியாக
யாவுடன் 'ராஜாராணி'
நடித்து வருகிறார்.
இன்னும் நிறைய பட
குவிந்து கொண்டே
ழ் தவிர தெலுங்கு,
டித்து வரும் இவர்,
மேலும் மெருகூட்ட
னால், படப்பிடிப்பு
மாதம் ஒருமுறை
சென்று உடம்பை
நால் மினுமினுப்
காக சில ஆயுர்
ச முறைகளை
வருகிறாராம்.



## ஆபிரிக்காவில் வடிவேலு



நகைச்சுவை நடிகர் வடிவேலு தனக்கென ஒரு பாணி வகுத்துக்கொண்டு கோலிவுட்டில் வலம் வந்தார். இப்போது 1 வருட ஓய்வுக்கு பிறகு கே.எஸ்.ரவிகுமார் இயக்கும் படத்தில் நடிக்கிறார். "சினிமாவை நன்கு புரிந்துகொண்டிருக்கிறேன். கே.எஸ்.ரவிகுமார் சமீபத்தில் 'ஆப்பிரிகாவில் வடிவேலு' என்ற ஸ்கிரிப்டை எனக்கு கூறினார். பிடித்திருந்தது. ஒப்புக்கொண்டேன். இது எனக்கு புத்துணர்ச்சியை தந்திருக்கிறது. எனது ரசிகர்களை ஏமாற்றமாட்டேன். ஆப்பிரிகாவில் இதன் ஷூட்டிங் நடக்க உள்ளது" என்கிறார் வடிவேலு.

# சினிமா விமர்சனம்




கடந்த சில மாதங்களாக வந்த பெரிய பட்ஜெட் படங்கள் எல்லாத்தையும் முதல் நாள் முதல் காட்சி பார்த்து நொந்து போய் இருந்த ரசிகர்கள் இந்த படமாவது சொதப்பாமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டே பார்த்ததற்கு ஏமாற்றாமல் இருந்தது துப்பாக்கி.

விஜய் (ஜெகதீஷ்) மிலிட்டரியில் பணிபுரிகிறார். விடுமுறைக்காக சொந்த ஊரான மும்பைக்கு வருகிறார். வந்த இடத்தில் ஒரு குண்டுவெடிப்பு. சம்பந்தப்பட்ட ஆள் விஜய்யிடம் சிக்குகிறான்.

அவனைத் தனியறையில் வைத்து விசாரணை செய்யும் போது இரண்டு நாட்களில் மும்பையில் 12 இடங்களில் குண்டுவெடிக்கப்போவதை அறிகிறார். எந்த விதமான துப்புகளும், குறிப்புகளும் கிடைக்காமல் இருக்கும் போது தனது புத்திசாலித்தனத்தால் அவனை தப்ப விட்டு தன் மிலிட்டரி டீமுடன் பின்தொடர்ந்து சென்று 12 இடத்திலும் குண்டுவைக்க சென்ற மனிதவெடிகுண்டுகளை ஒரே சமயத்தில் சுட்டுக் கொல்கிறார்.

இதனை அறிந்த வில்லன் மும்பைக்கு வந்து விஜய் பற்றிய விவரங்களை கண்டறிந்து 'டார்கெட்' செய்கிறான். க்ளைமாக்ஸில் வில்லனை சுட்டுக் கொன்று விட்டு மீண்டும் மிலிட்டரிக்கு வேலைக்கு செல்கிறார். இந்திய ராணுவத்தில் பணிபுரியும் வீரர்களுக்கு சமர்ப்பணம் என்ற டைட்டிலுடன் படம் முடிகிறது.

ஒரு படம் அதுவும் தீபாவளிக்கு வரும் படம் என்றால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இந்தப்படம் ஒரு உதாரணம். முழு எண்டர்டெய்னர் மூவி. ஒரு இடத்தில் கூட தொய்வு விழவில்லை. படம் துவங்கி அரைமணிநேரத்திற்குள் நாம் படத்தினுடன் ஒன்றி விடுவோம். அதன் பிறகு படம் முடிந்ததும் தான் மீள்கிறோம்.

மாஸ் எண்டர்டெய்னர் இப்படித்தான் இருக்க வேண்டும். இது விஜயின் வழக்கமான படமல்ல. விஜய் படத்தில் அழகாக இருக்கிறார். காஸ்ட்யூம் டிசைனர் மற்றும் ஒளிப்பதிவாளரின் உதவியுடன் ஜம்மென்று வருகிறார். இயல்பாக நடிக்கிறார். நடனம் மட்டும் சொல்ல வேண்டுமா என்ன. குறுந்தாடி பக்காவாகப் பொருந்துகிறது.

தமிழ் சினிமாவின் இலக்கணம் மாறாத லூசுப் பெண் கதாபாத்திரத்தில் காஜல் அகர்வால். அழகாக இருக்கிறார். குத்துச் சண்டை வீராங்கனையாம். விஜய்யின் மீதுள்ள கோபத்தில் ஒரே குத்தில் எதிரியை வீழத்தி நொக்அவுட் செய்கிறார். விஜய்யை காதலிக்க வீட்டு பால்கனி வழியாக ஏறி வீட்டுக்குள் குதிக்கிறார்.

சத்யன் விஜய் நண்பராக மும்பையில் உள்ள சப் இன்ஸ்பெக்டர் வேடத்தில் வருகிறார். விஜய் நடத்தும் ஒபரேசனில் உதவுகிறார். முதலில் ராணுவத்தை விட பொலீசே புத்திசாலிகள், உயர்ந்தவர்கள் என்னும் அவர் படத்தின் முடிவில் ராணுவம் தான் உயர்ந்தது என்பதை ஒத்துக் கொள்கிறார்.

படத்தில் வில்லன் பாத்திரம் அமைதியாக வந்து கடைசியில் விஜய்யை இரண்டு அடி அடித்து பிறகு அடிவாங்கி செத்துப் போகிறார். அஜித்துக்கு ஒரு மங்காத்தா போல, விஜய்க்கு இந்தப் படம் மாபெரும் வெற்றிப் படமாக அமையும்.

படத்தில் 5 வீரர்களின் பெண் உறவினர்களை கடத்திச் சென்று விஜய்யை கண்டுபிடிக்க வில்லன் முயற்சி செய்யும் திட்டத்தில் புத்திசாலித்தனமாக தன் தங்கையை நுழைத்து தன் வீட்டு நாய் உதவியுடன் கண்டுபிடிக்கும் காட்சியும் அசத்தலாக படமாக்கப்பட்டு இருக்கிறது.

படத்தில் சில இடங்களில் லொஜிக் மிஸ்டேக்குகள் இருக்கின்றன. இருந்தாலும் நல்ல மாஸ் எண்டர்டெயினர் படத்தில் இதனைப் பொருட்படுத்த வேண்டியதில்லை.

## ஆர்யாவைத் தொடர்ந்து அவரது தம்பி சத்யா



சின்னத்திரை நடிகர் விஜய் ஆதிராஜ் இயக்கும் முதல் படமான புத்தகத்தில் சத்யாவை நாயகனாக்கியுள் ளார். "என் தம்பி சத்யாவுக்கு பெரிதாக நான் நடிப்பு எதுவுமே சொல்லிக்கொடுத்ததில்லை. நடிக்க விரும்பினான். நான் ஓகே சொல்லி விட்டேன். ஆனால் முதல் படத்திலேயே அவனது நடிப்பு பிரமாதமாக இருக்கிறது. அந்த வகையில் என்னைவிட என் தம்பி பெரிய நடிகனாக வருவான்" என்கிறார் ஆர்யா.

## ஊர் மக்கள் சேர்ந்து நடிக்கும் படம்



"ஹீரோ, ஹீரோயின் தொடாமல் நடிக்கும் காதல் படம் 'நேசம் நெசப் படுதே' என்ற பெயரில் உருவாகிறது. காதல்தான் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைக்கிறது என்ற கருவும் இதில் இடம்பெறுகிறது. வேந்தன் ஹீரோ. அரசி ஹீரோயின். இருவரும் புதுமுகம். எந்தக் காட்சியிலும் இருவரும் தொட்டுக்கொள்ளாமல் நடித்திருக்கின்றனர்" என்கிறார் இயக்குநர் ராஜசூரியன்.

## மாயா, ஜெஸ்ஸி, நித்யா



கௌதம் மேனன் இயக்கத்தில் 'காக்க காக்க' மாயா, 'விண்ணைத் தாண்டி வருவாயா' ஜெஸ்ஸி கேரக்டர்களை யாரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. அதைப்போன்று 'நீதானே என் பொன்வசந்தம்' வெளிவந்தவுடம் நித்யா என்ற பெயரையும் யாரும் மறக்க மாட்டார்கள் என்று உறுதியாக சொல்கிறார் சமந்தா. இப்படத்தில் தனது வேடம் அனைவரையும் கவரும், மாயா, ஜெஸ்ஸி போல நித்யாவையும் யாரும் மறக்க மாட்டார்கள் என்று தெரிவித்து இருக்கிறார்.

## சமந்தாவுக்கு பதில் சுருதி



தனுஷ் ஜோடியாக '3' படத்தில் நடித்த பிறகு தமிழில் புதிய படம் எதிலும் ஸ்ருதி ஹாசன் நடிக்கவில்லை. இந்தி, தெலுங்கு படங்களில் நடித்து வருகிறார். இது பற்றி அவர் கூறியதாவது: பிரபு தேவா இயக்கும் புதிய இந்திப் படத்தில் தற்போது நடித்து வருகிறேன். இதையடுத்து ராம் சரண் தேஜா ஜோடியாக 'எவடு' என்ற படத்தில் நடிக்கிறேன் என்றார். 'எவடு' படத்தில் முதலில் சமந்தா நடிப்பதாக இருந்தது பின்னர் அவர் அதிலிருந்து விலகினார். அந்த வேடத்தில் ஸ்ருதி ஹாசன் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




# முட்டாள் வேலைக்காரன்!

ஓர் ஊரில், வணிகன் ஒருவன் இருந்தான். பணக்காரனான அவன் சரியான கஞ்சன். எனவே, முட்டாளான ஒருவனை வேலைக்காரனாக வைத்திருந்தான். வணிகன்

ஒருநாள் அவனை அழைத்து, "நம் வண்டியை எடுத்துக்கொண்டு பனங்காட்டுக்குப் போ... அங்கே பலர் பனைமரங்களை வெட்டி வண்டியில் ஏற்றிக்கொண்டு இருப்பர். அதேபோல் நீயும் மரங்களை வெட்டிக்கொண்டு வா!" என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். அங்கே சிலர் மரங்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு இருந்தனர். சிலர், கீழே கிடக்கும் மரங்களை முயன்று வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டிருந்தனர். இதைப் பார்த்ததும் வேலைக்காரனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

என்ன இவர்கள் எல்லாரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை வைத்தால் மரம் அதில் சரியாக விழும். வீணாக ஒரு முறை பூமியில் கிடக்கும் மரத்தை வண்டியில் ஏற்ற வேண்டாமே!' என்று நினைத்தான்.

என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்டி, நான் எத்தகைய அறிவாளி என்பதைப் புரிய வைப்பேன் என்ற எண்ணத்தில், தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தை தேர்ந்தெடுத்தான்.

கோடாரியால் அந்தப் பனைமரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான். மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், ஏன் இவன் இப்படிப் பைத்தியக்கார வேலை செய்கிறான் என்று நினைத்தனர்.

சிறிது நேரத்தில் அந்த மரம், சடசட'வென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது. அவ்வளவுதான், வண்டி தூள் தூளானது. கால் உடைந்து குற்றுயிரும் குலை உயிருமாக மாடு துடித்துக் கொண்டிருந்தது. இதைக்கண்டு அவன் திகைத்து விட்டான். தன் திட்டத்தில் என்ன குறை என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

என் திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய்விட்டது என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், "முட்டாளாக இருக்கிறாயே! இப்படி செய்யலாமா?" என்று வேலைக்காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்துவிட்டது.

தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய லாபம் கிடைக்கும் என்று நினைத்தான் வணிகன். உடனே வேலைக்காரனை அழைத்து, கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக் கூடாது!" என்றான்.


வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன். ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இப்போது அவன் உள்ளத்தில், இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்று சொல்லவில்லையே! என்ற சிந்தனை எழுந்தது.


சரி, அவரையே கேட்டு விடுவோம்' என்ற எண்ணத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான்.

ஐயா! நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்துவிட்டேன். காலி பீப்பாய்களை என்ன செய்வது என்று கேட்டான். வணிகனுக்குச் சிறிது சிறிதாக உண்மை புலப்படத் தொடங்கியது. ஐயோ, மண்ணெண்ணெய் எல்லாம் பேச்சே!' என்று அலறிய வணிகன், அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்.

படங்களில் உள்ள வித்தியாசங்களை குறித்துக் காட்டுங்கள்!




முயல் குட்டி பசியில் இருப்பதால் கொரட்டை அடைய முயலுக்கு வழி கண்டு பிடித்துக் கொடுங்கள் பார்ப்போம்






# புருஷோத்தமனும் அலெக்சாண்டரும்



சிறுகதை

# உறவுகள்

வ.ராஜரூபன்

வளம் கொழிக்கும் அழகிய கிராமம் அது. அந்த கிராமத்தில் பிறந்தவன்தான் ஜீவா. தந்தை கந்தையா சாதாரண கூலித் தொழிலாளி. அன்றாட செலவிற்கு அவரது உழைப்பு போதுமானதாகவே இருந்தது. ஆனாலும் ஜீவாவின் அறிவுப் பசியைப் போக்க அவனை நன்றாகப் படிப்பிக்கவேண்டும் என்ற ஆசையினால் மிகவும் கஸ்டப்பட்டு படிக்க வைத்தார் கந்தையா. கால ஓட்டத்தில் அவன் நன்றாகப் படித்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் தங்கை அஞ்சலி வறுமையின் கொடுமையினால் தன் கல்வியை உயர்தரத்துடன் நிறுத்திவிட்டு தாய்க்கு ஒத்தாசையாக வீட்டில் இருந்தாள்.

ஒருநாள் அவனது கல்லூரி வாழ்வில் அவள் நுழைந்தாள். அழகிய நீண்ட கூந்தல் அவள் பின்னழகை என்றும் மறைத்து நிற்கும். அழகிய செந்தாமரை வதனம், மென்மையான புன்னகை காண்போரைக் கவரும் அழகு. ஆனாலும் அந்த அழகியின் மனதில் இருக்கும் சோகங்களை அந்த வேல்விழிகள் காட்டிக்கொடுத்துவிடும். அவளிடம் கலகலப்பிற்கு குறைவில்லை. ஆனாலும் திடீரென அமைதியாகி விடுவாள். சில நாட்கள் புதிய சூழ்நிலை என்பதால் அவளுக்கு அவ்விடம் ஓரளவு பழக்கப்படாமலே இருந்தது. ஆனால் சில நாட்களின் பின்னர் அவள் அந்தக் கல்லூரியின் அழகி ஆகிவிட்டாள். எல்லோருக்கும் அவளைத் தெரியும். ஆனால் அவளுக்கு ஒருவரையும் தெரியாது. ஆண்களைக் கண்டாலே ஒருவித வெறுப்பு அவள் மனதில் குடிகொள்ளும்.



அன்று ஒரு காலைப்பொழுது. பல்கலைக்கழகத்தின் வாசலிலே அழகிய நீலநிறக் கார். அதிலிருந்து நீலநிறச் சுடிதாரில் அவள் இறங்கி வந்து கொண்டிருந்தாள். எல்லோர் விழிகளும் அவளை நோக்க அவளுக்கு சிரிப்பாகத்தான் இருந்தது. ஆனாலும் அந்த இரு விழிகள்மட்டும் அவளை நோக்காது மரநிழலில் சோகத்தில் அமர்ந்து எதையோ தேடிக்கொண்டிருந்த அவனைப் பார்த்ததும் ஏதோ ஒரு இனம்புரியாத உணர்வு அவள் இதயத்தில் குடிகொண்டது. அவளுக்கொரு சந்தேகம் இது அவனல்லவா? மனம் பழைய நாட்களைத் திரும்பிப் பார்த்தது.

அவளும் ஜீவா வசிக்கும் அதே கிராமத்தைச் சேர்ந்தவள்தான். அவளுடைய தந்தை மிகப்பெரிய வர்த்தகர். அடியாட்களுடன்தான் எப்போதும் வலம் வருவார். அவ்வளவு பிரபலமானவர். ஆனாலும் ஒரேயொரு கெட்ட பழக்கம். மதியம் வரை வெளிநாட்டு மதுபானங்கள் அவரின் வயிற்றினுள் தினமும் இடந்தேடிக்கொள்ளும். அவருடைய மகள் தான் இந்த அழகி பிரியா. ஏனோ தெரியவில்லை இவள் பிறந்து நான்கு மாதத்தில் தாய் வானுலகம் சென்றுவிட்டாள். அதனால் அன்றிலிருந்து தாயாக வீட்டு வேலைக்காரியான செல்லம்மாவே துணை. என்ன கஸ்டம் என்றாலும் அவளிடமே சொல்லிக்கொள்வாள்.

இப்போதுதான் அவனை அவளுக்கு நினைவு வந்தது இவன் எதிர்வீட்டு கந்தையரின் மகனல்லவா என மனதுக்குள் நினைத்துக் கொண்டாள். அவள் நினைவுகளில் அவர்கள் இருவரும் சேர்ந்து பழகிய அந்த பாலர் பருவ நாட்கள் மனதில்வந்து சென்றது. அவனுடன் உரையாட வேண்டும் போலிருந்தது.

மெதுவாக நடந்து அவன் அமர்ந்திருந்த மரத்தின் கீழ்சென்று "ஜீவா உம்மட பிளானிங் சப்ஜெக்ட் கொப்பியை ஒருக்கா தருவீரா" எனக்கேட்டாள். மறுப்பேதுமில்லை அந்தக்கொப்பி அவன் கையிலிருந்து அவள் கைக்கு இடம் மாறியது. நிமிர்ந்து பார்த்ததில் அவன் இதயமும் தான். அவள் உரையாட அவனை நெருங்கும் போதெல்லாம் அவன் விலகியே சென்றான். "இங்க பாருங்கோ ஜீவா நானும் உங்கள மாதிரி தான் என்னிடம் ஏன் பயந்து கொண்டு தாராளமா பேசுங்க...." என்றபடி சில கதைகளை கதைத்துவிட்டு அவனின் குடும்ப விபரங்களை கேட்டாள். "எனக்கு ஒரு ஆசைத்தங்கை அஞ்சலியும் அம்மாவும் தான்" என்றான். அப்பா தனக்காக கஸ்டப்பட்டே நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டதையும் சொன்னான். "ம்... எனக்குத் தெரியும் உங்க எல்லோரையும் பற்றி...".

"என்ன தெரியுமா? அப்படியாயின் என்னை ஏன் கேட்டனீங்கள்" என்றான் பொய்யான கோபத்தோடு. "உங்கட அப்பா இறந்தது தெரியாது ஏனென்றால்' அந்நேரம் நான் அமெரிக்காவில் படித்துக்கொண்டிருந்தேன். ஆனால் மீதி எல்லா விடயங்களும் எனக்குத் தெரியும். சரி ஜீவா நான் உங்கட குடும்பத்தைப் பற்றிக் கேட்டாத்தானே நீங்க என்னைப் பற்றி கேட்பீங்க என்றாள்.

"சரிசரி உங்க குடும்பத்தைப் பற்றிச் சொல்லுங்க".

"எங்க குடும்பத்தில் நானும் தம்பியும் வளர்ப்புத்தாய் செல்லம்மாவும் அப்பாவும் தான்".

"அப்படியென்றால் உங்கட அம்மா" "நான் சிறு குழந்தையாய் இருக்கும்போதே இறந்திட்டாங்க" என்றாள் பிரியா. இருவரும் வார்த்தைகளை பகிர்ந்து கொள்ளவே அன்றைய நாளும் நிறைவுபெற்றது.

மறுநாள் காலை எல்லோர்க்கும் ஆனந்தமாகவே விடிந்தது. ஆனால் அவனுக்கு மட்டும் அந்த காலைப்பொழுது ஏனோ வெறுப்பாகத்தான் இருந்தது. அன்று பல்கலைக்கழகமும் அவன் செல்லவில்லை. மாறாக அந்த கடற்கரையில் அவன் தினமும் வந்து அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து கடலின் அலைகளையே வெறித்துக்கொண்டிருந்தான். அப்போது ஒரு கரம் அவன் தோளைத் தொட்டது. "என்ன ஜீவா ஏதேனும் பிரச்சினையா....?"

"இல்ல பிரியா மனசு சரியில்லை".

"இல்ல ஜீவா இவ்வளவு காலமா உங்க கூடப்பழகிறன் உங்க மனசைப்பற்றி எனக்குத் தெரியாதா? ஏதோ பிரச்சினை உங்களுக்கு ஆனால் என்னென்று சொல்றீங்களில்லை. பிளீஸ் ஜீவா என்னிடமாவது சொல்லலாமில்லையா.........?"

"அதாவது வந்து அப்பா இறந்ததிலிருந்து என் அம்மாதான் எனக்கு இந்த உலகத்திலிருக்கும் ஒரேயொரு சொத்து. எனக்காகவே கஷ்டப்பட்டு உழைச்சு மிகவும் நோயாளியாகிட்டா. அவவுக்கு ராத்திரி வருத்தம் கடுமையானதால் ஹொஸ்பிட்டல்ல சேர்த்திருக்கிறேன். ஹார்ட் றொம்ப வீக்காம். அதனால சத்திரசிகிச்சைக்கு நான்கு லட்சம் செலவாகும் என்று டொக்டர்ஸ் சொல்றாங்க. நாளைக்கு மதியத்திற்குள் எப்பிடியாவது பணத்தைக் கட்டனுமாம் அவ்வளவு பணத்துக்கு நான் எங்க போவது? மிஞ்சி மிஞ்சிப் போனாலும் என்ற செயினையும் தங்கச்சியின்ர நகைகளையும் சேர்த்து விற்றாலும் ஒரு லட்சம்தான் வரும். மிச்சம் மூன்று லட்சத்திற்கு நான் எங்க போவது? அதுதான் இங்கவந்து யோசிச்சிக்கிட்டிருக்கிறன்" என்று தன் உள்ளத்திலுள்ள சுமைகளையெல்லாம் மூச்சுவிடாமல் அவளிடம் ஒப்புவித்தான்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த பிரியா "இங்க பாருங்க ஜீவா இதற்குப்போய் கவலைப்படுறீங்க இவ்வளவு நாளா பழகிறம் என்னட்ட வந்து ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமில்லையா... சரி பரவாயில்லை. இனிமேல் எதுக்கும் நீங்கள் கவலைப்படாதீங்க எனக்குத்தான் தாயின் அன்பு கிடைக்கேல்ல அதனால உங்களுக்குக் கிடைத்த அன்பைப் பாதுகாக்கவாவது இனிமேல் என்னாலான எல்லா உதவிகளையும் செய்வேன் இதுவரைக்கும் இருந்த பாரத்தை இறக்கி வைச்சிட்டு என்னோட வாங்க..." சொல்லுக்குக் கட்டுப்பட்டவன்போல் அவள் பின்னால் நடந்தான்.

வீடு சென்றதும் நன்றாக இருட்டிவிட்டது அவனை அழைத்துச்சென்று தன் தந்தையிடம் அறிமுகப்படுத்தினாள். அவர் குடித்தாலும் மாலை நேரங்களில் குடிப்பது மிகக் குறைவு. தன் மகளிடம் அவனைப்பற்றிய முழு விடயங்களையும் அறிந்து கொண்டதும் "சரியம்மா பிரியா நாளை காலையில எவ்வளவு பணம் தேவையோ பணத்தை எடுத்துக் கட்டிடு...." என்றபடி "தம்பி இனிமேல் கவலைப்படாதீங்க" என்றபடி முதுகில் தட்டிக்கொடுத்தார். "நீங்க செய்த உதவியை என்றைக்குமே நான் மறக்கமாட்டேன்" என கண்களில் கண்ணீர் மல்க இருகை கூப்பி அவரை வணங்கினான் ஜீவா.

மறுநாள் ஹொஸ்பிட்டலுக்கு ஜீவாவும் பிரியாவும் சென்றார்கள். அங்கு சிகிச்சை முடிந்து தாயின் உடல்நலம் நன்றாக இருப்பதாக டொக்டர் கூறியதுதான் தாமதம். தன்நிலை மறந்தவனாக தாங்யூ பிரியா என்று கூறியபடி அவளைக் கட்டிப்பிடித்தான். அவள் சற்றும் இதை எதிர்ப்பார்க்கவில்லைத்தான். ஆனாலும் அவள் மனம் ஆனந்தப்பட்டது. ஏனெனில் அவள் மனதிலும் அவன் நிறைந்திருக்கின்றானல்லவா.

சில நாட்களின் பின்னர் வீடு வந்துசேர்ந்த தாய் ஜீவாவிடம் "உனக்கு ஏதடா இவ்வளவு பணம்" என்று கேட்டாள். எதிர்வீட்டுப் பண்ணையாரின் மகள்தான் தனக்கு உதவி செய்ததாகக்கூறவும் அங்கு பிரியா வரவும் சரியாக இருந்தது. "இதோ அம்மா அவவே வந்திட்டா" என கூறியபடி பிரியாவை வரவேற்றான். அவனின் தாயோ "வாம்மா உமக்கு எப்படி நன்றி சொல்கிறதென்று தெரியேல்ல. பெற்ற தாயையே ஒதுக்கிற காலத்தில் நீங்க இப்படி உதவி செய்திருக்கீங்க உங்களை என் வாழ்நாள் முழுக்க மறக்கவே முடியாதும்மா" எனக்கூறியபடி கண்ணீர் விட்டாள்.

"சரியம்மா இந்த நிலைமையில நீங்க கவலைப்படக்கூடாது உங்களுக்கு ஓய்வு தேவை எதுக்கும் கலைப்படாதீங்க. இந்தாங்க இதில உங்களுக்குத் தேவையான மருந்துகள் எல்லாம் இருக்கு நேரத்துக்கு நேரம் சாப்பிடுங்க. இவைதான் உங்க உடம்புக்கு நல்லது" எனக்கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றாள்.

பின்னர் காதல் வானிலே இருவரும் ஜோடிப்புறாக்களாக மகிழ்ந்திருந்தனர். இவர்களது காதலும் இரண்டு ஆண்டுகளைக் கடந்து சென்றது. இவ்விடயம் பிரியாவின் தந்தைக்குத் தெரிய வந்தது. ஆனால் அவர் காதலுக்கு மறுப்பேதும் சொல்லவில்லை. தாயில்லை அவளுக்கு. ஆனால் அந்தத் தாயின் அன்பைப் போல அவனிடமிருந்து அவளுக்குக் கிடைத்த அன்பினால் இன்று அவள் மிகவும் சந்தோசமாய் இருந்தாள். அதைவிட பிரியாவின் விருப்பங்களுக்கு குறுக்கே அவர் ஒருபோதும் நின்றதில்லை. இதனால் இருவருக்கும் மிகவும் கோலாகலமாக திருமணம் செய்து வைத்தார்.

ஜீவாவிற்கு வாழ்க்கையே இனித்தது. அவன் வாழ்வில் அவள் இணைந்ததிலிருந்து அன்பாகவே சென்று கொண்டிருந்தது. அஞ்சலிக்கும் பிரியாவின் தம்பிக்கும் திருமணம் நடைபெற்று அவர்கள் இருவரும் அமெரிக்காவிலே குடியேறிவிட்டனர். அவன் வாழ்வில் வசந்தத்திற்கு சாட்சியாக புவனா என்னும் அழகிய மழலை அவர்களுடைய இனிமையான அந்த இல்லற வாழ்விற்குப் பரிசாகக் கிடைத்து அவர்களுடைய வாழ்வை மேலும் இனிமையாக்கியது.

இதன் மத்தியிலும் அவன் இதயம் அழுதுகொண்டிருந்தது தன் தாயை நினைத்து. இன்றுடன் தாய் இறந்து பன்னிரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனாலும் தாயின் நினைவுகள் மட்டும் அவன் மனதினைவிட்டு நீங்கவில்லை.

***

# புரிதல்



கணவன் மனைவியிடையே புரிதல் இருந்தால்தான் பிரச்சினைகள் வராமல் குடும்பம் சந்தோஷமாக இருக்கும். அதை உணர்ந்து இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சின்னச் சின்ன பிரச்சினைகளை பெரிதாக்காமல் இருந்தாலே குடும்பத்தில் பிரச்சினை வராது.

திருமணமான புதிதோ அல்லது பல வருடங்கள் கழிந்தோ... சில பெண்கள் தங்களுடைய கணவரைப் பற்றி புரிந்துகொள்ளாமல் இருப்பார்கள். இதற்கு மனைவி மட்டும் காரணம் அல்ல... கணவனும்தான்.

வெளியே... அலுவலகத்தில் ஏற்படும் மனக்கசப்புகளை வீட்டுக்குள் காண்பிக்கும்போதுதான் தம்பதிகளுக்குள் பிணக்கு ஏற்படுகிறது. எனவே அளவோடு பேசுங்கள்.

அதிகமாக பேசுவதால்தான் அது வாக்குவாதமாக மாறி சண்டையில் முடிகிறது. குறைவாக பேசும்போது, உங்கள் பேச்சுக்கு கணவர் மதிப்புக் கொடுப்பார். நிறைய பேசுவதைக் கேட்பதற்கு ஆண்களுக்கு பொறுமை கிடையாது. தேவையில்லாமல் பேசுவதால், தேவையான பேச்சும் கேட்கப்படாமல் போய்விடக்கூடும்.

கணவர் உங்களைத் திட்டுவதையோ... உங்களோடு சண்டை போடுவதையோ, பிறர் முன்பாக செய்வதை நீங்கள் விரும்பவில்லை என்பதை கணவரிடம் தனியாக எடுத்துச் சொல்லுங்கள்.

அவரைப் பற்றிய குறைகளை அம்மாவிடமும், தோழியுடனும் பேசுவதை விட, அவரிடமே பேசினால் நல்ல பலன் கிடைக்கும். நம் குழந்தைகள் சந்தோஷமான குழந்தைகளாக வளர்வதற்கும், நல்ல பண்புகள் கொண்ட வருங்கால இளைஞர்களாக இருப்பதற்கும், சாதனைகள் புரிவதற்கும் அடிப்படைக் காரணம் பெற்றோர்களின் வளர்ப்புத்தான்.

கணவர், குழந்தைகள், கணவரின் குடும்பத்தார் என எல்லோருக்கும் நீங்கள் தேவை என்பதை சாத்தியமான ஒன்றாக நினைத்துப் பாருங்கள்.

## மகளிர் சுடர்

## கண்களை கவர்ச்சியானதாக்க..

இன்றைய உலகில் கண்களை அழகுபடுத்தாத பெண்கள் குறைவு எனலாம். கண்களுக்கு செய்யும் மேக்கப் சரியில்லையெனில், அது வீணாகிவிடும். ஏனெனில் மேக்கப்பில் கண்கள்தான் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே கண்களுக்கு செய்யும் மேக்கப்பால் கண்கள் நன்கு மென்மையாக அழகாகத் தெரிவதற்கு சில எளிய குறிப்புகள் இதோ.

கண் இமைகளை நன்கு அடர்த்தியாக வெளிப்படுத்துவதற்கு, கறுப்பு நிற மஸ்காராவை பயன்படுத்துவது நல்லது. சிங்கிள் கோட் போதாமல் இருந்தால், டபுள் கோட் வேண்டுமானாலும் கொடுக்கலாம். மஸ்காராவை அளவுக்கு அதிகமாகவும் கொடுக்கக்கூடாது. ஏனெனில் அது கலைந்து, அசிங்கமான தோற்றத்தைத் தரும். எனவே மஸ்காரா அதிகமாகிவிட்டது போல் தெரிந்தால், லாஷ் கரலர அல்லது பிரஷினால் சீவி அதிகமாக இருக்கும் மஸ்காராவை நீக்கலாம்.

பின்பு கண்களின் இமைகளுக்கு மேல் இருக்கும் பகுதியை காஜலை வைத்து, அடர்த்தியான கோடு வரைய வேண்டும். அதிலும் அந்தக் கோடு மூக்கின் பக்கத்திலிருந்து போடும் போது மெல்லியதாகவும், போகப் போக அடர்த்தியாகவும் இருக்க வேண்டும்.



கண்களுக்கு போடும் ஐ-லைனர் பென்சிலாக இருப்பது நல்லது.

மேலும் கண்களின் கீழ் இமைகளில் போடும் ஐ-லைனர் பிரவுன் அல்லது கோப்பி நிறத்தில் இருப்பது நல்லது. இதனால் மேல் இமைகளுக்கு மேலே போடப்பட்டுள்ள காஜல் சற்று அழகாக வெளிப்படும். மேலே சொன்ன சில மேக்கப் டிப்ஸ்களை மனதில் கொண்டு, மேக்கப் செய்து வந்தால், கவர்ச்சிகரமாக பார்க்க மிகவும் அழகாகவும் இருக்கும்.

## உதட்டின் மேலுள்ள கருமையை நீக்கலாம்



பெண்களில் சிலருக்கு ஹோர்மோன் காரணத்தினால், அதிகமாக முடி வளரும். முகத்தில் கூட வளர்ச்சி அடையும். சிலருக்கு மீசை இருப்பது போல கூட இருக்கும். ஆகவே உதட்டிற்கு மேல் உள்ள பகுதி கருமையான நிறத்தில் காணப்படும். சுலபமாக அந்த பிரச்சினையை சரிசெய்ய வீட்டிலேயே மருந்துகள் இருக்கின்றன.

உதட்டிற்கு மேலே ஃபேஸ் ப்ளீச்சைத் தடவி, பின் சிறிதுநேரம் கழித்து கழுவ வேண்டும். இதனால் அதிலுள்ள பொருள் உடனடியாக கருமைநிறத்தை போக்கிவிடும்.

உதட்டின் மேல் பகுதியை எலுமிச்சை, தேன் அல்லது தயிரால் நன்கு ப்ளீச் செய்து வந்தால், நாளடைவில் அந்த இடத்தில் உள்ள கருமை நீங்கிவிடும்.

இல்லையெனில் பீட்ரூட் அல்லது மாதுளையின் ஜூஸை முகத்தில் தடவி, சிறிது நேரம் மசாஜ் செய்தால், முகத்தின் நிறம் சற்று அதிகரித்து, புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

உதட்டிற்கு இரசாயனம் கலந்த, மிகவும் அடர்ந்த நிற லிப்ஸ்டிக், லிப்ஸ் பாம் போடுவதை தவிர்ப்பது நல்லது. அதற்கு பதிலாக இயற்கை லிப்ஸ் பாம்களான நெய், வெண்ணெய் போன்றவற்றை பயன்படுத்தினால், உதடு வறட்சி அடையாமல் இருக்கும்.

## முளைப்பயறு சப்பாத்தி



**தேவையான பொருட்கள்**

முளைத்த பச்சைப்பயறு - 3/4 கப்
பெரிய வெங்காயம் - 1
நாட்டுத் தக்காளி - 2
சீரகப் பொடி - 1/2 தேக்கரண்டி
மிளகாய்ப் பொடி - 1/2 தேக்கரண்டி
மஞ்சள் பொடி - 1/4 தேக்கரண்டி
பூடு - 4 பல்
உப்பு - தேவைக்கேற்ப

**செய்முறை:**

கோதுமைமாவில் உப்பு, 1 கரண்டி எண்ணை ஊற்றிப் பிசைந்து எடுக்கவும்.

முளைப்பயறை ஆவியில் வேகவைக்கவும்.

வாணலியில் சிறிதளவு எண்ணை விட்டு, பொடியாக நறுக்கிய வெங்காயம், பூடு இவற்றை வதக்கவும். பின் பொடியாக நறுக்கிய தக்காளியைப் போட்டு நன்கு வதக்கவும்.

வதங்கிய பின் பொடி வகைகளைச் சேர்த்து சற்று நீர் தெளித்து, பச்சை வாடை போக வதக்கவும்.

வேகவைத்துள்ள பச்சைப் பயறை சற்று மசித்து, வதக்கிய பொருட்களுடன் சேர்த்துக் கிளறவும்.

தேவையான உப்பு சேர்த்து கலந்து, வாணலியில் எல்லாம் ஒன்றாக சேர்த்து கிளறிப் பொடியாக நறுக்கிய கொத்தமல்லி தூளை தூவி இறக்கி ஆறவைக்கவும்.

இரு மெல்லிய சப்பாத்திகளாக இடவும்.

ஒரு சப்பாத்தி நடுவே வதக்கியவற்றை பரவலாக வைத்து, மேலே இன்னொரு சப்பாத்தி வைத்து மூடி, ஓரங்களை ஒட்டி, தோசைக் கல்லில் போட்டு இருபுறமும் வெந்தபின் எடுக்கவும்.

இதற்கு தொட்டுக்கொள்ளவும் எதுவும் தேவையில்லை. சுவையான, சத்தான சப்பாத்தி.

## உடல் நலம்



# சுகப்பிரசவமா சத்திரசிகிச்சை மூலம் பிரசவமா?

**ம.நந்தினி, புத்தளம்.**

**கேள்வி :-** வயது 28. இது எனது முதல் கர்ப்பம். 7 ம் மாதம் முடிந்துவிட்டது. எனக்கு சுகப்பிரசவம் நிகழுமா? சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் பிரசவம் நிகழுமா என ஒரே குழப்பமாக உள்ளது.

**பதில் :-** இது குறித்து முடிவெடுக்கக்கூடியவர் மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் ஒருவரே என்பதை ஆரம் பத்திலேயே தெரிவிக்க விரும்புகிறேன். எனினும், சம காலத்தில் நவீன மருத்துவத்தில் இது விஷயமாக உள்ள போக்குகள் பற்றி பொதுப்படையான ஒரு விளக்கத்தைத் தரமுடியும். சென்ற நூற்றாண்டின் (1900-2000) தொடக்கம், மத்திய காலப்பகுதிகளில் கர்ப்பிணித்தாய்மார் மரணவீதம் மிக உயர்வாக இருந்தது. இது ஏற்கமுடியாத ஒரு விடய மாகும். ஏனெனில் ஒரு கர்பிணித்தாய் மரணித்தால் அவரது கணவருக்கு மனைவி இல்லாமற் போகும். அதைவிட முக்கியமாக அந்தத் தாயினுடைய மூத்த பிள்ளையை பராமரிக்க தாய் இல்லாது போய்விடும். இது பாரதூரமான ஒரு நிலையாகும். அக்காலத்தில் பிரசவ அறையும் மரண அறையும் கிட்டத்தட்ட ஒன்று என்று சொல்லுமளவுக்கு கர்ப்பிணித்தாய்மார் கர்ப்பத்தினால் அல்லது அதன் முடிவில் வரும் பிரசவத்தில் மரணமடைவது சர்வசாதாரண விடயமாக இருந்தது. பிரசவத்தில் அதிக இரத்தப்போக்கு, இரத்த மேற்ற வசதியின்மை, கிராம வைத்தியசாலையில் பிரசவிப்பு சிக்கல்கள் இருப்பின் அத்தாயை நகர்ப்புறத்தில் வசதியுள்ள வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு போக்குவரத்து வசதிகள் இல்லாமை, கர்ப்பத்தில் ஏற்படும் இரத்த அழுத்தத்தினால் (HIGH BLOOD PRESSURE) வலிப்பு ஏற்படல் என்பன தாய்மார் உயிரிழக்க பெரிதும் காரணமாயின. எனவே, குழந்தை உயிரிழந்தாலும் தாய் உயிரிழக்க விடக்கூடாது என்ற இறுக்கமான நோக்கத்தைக்கொண்டு வைத்திய நிபுணர்கள் செயற்பட்டனர். முடிந்தால் குழந்தையையும் தாயையும் பூரண சுகத்துடன் பெறுவிப்பது, இது முடியாவிடில் குழந்தை உயிரிழந்தாலும் கடைசிவரை தாயை உயிரிழக்க விடக்கூடாது என்று கருதப்பட்டது. எனவே சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் குழந்தையை பிரசவிப்பது என்பது மிக மிக அரிதான சந்தர்ப்பத்தில் மட்டுமே செய்யப்பட்டது. ஏனெனில், சிசேரியன் சிகிச்சை அவ்வளவு நுணுக்கமாக, 100 வீதம் சரியாக செய்யக்கூடிய நிலை அன்று இருக்கவில்லை. அதற்குரிய வசதிகள், அனுபவமுள்ள டொக்டர்கள் பற்றாக்குறையாகவே இருந்தது. இதனால் சிசேரியன் சத்திர சிகிச்சையிலும் தாய்க்கு அதிக இரத்தப்பெருக்கு ஏற்பட்டு உயிர் ஆபத்து ஏற்படும் நிலை இருந்தது. ஆனால் சிசேரியன் சிகிச்சையில் குழந்தையை நலுங்காமல் குலுங்காமல் பக்குவமாக வெளியே எடுக்கமுடியும் என்பது தெரியவந்தது. குழந்தையின் உயிரை விட தாயின் உயிர் என்பது அக்காலத்தில் முக்கிய மானதாக கருதப்பட்டதால் சிசேரியன் சிகிச்சை இனிமேல் இல்லை என்ற அரிதான சந்தர்ப்பத்தில் மட்டுமே செய்யப்பட்டது. ஆனால் சிசேரியன் சத்திரசிகிச்சைக்குச் செல்லாது முடிந்த வரைக்கும் சாதாரண பிரசவம் (சுகப்பிரசவம்) மூலம் பிறப்பிக்கவே வைத்திய நிபுணர்கள் முயன்றனர். சாதாரண பிரசவத்தின் மூலம் பிள்ளைப் பேறு அடைந்த தாய்மாரில் சத்திரசிகிச்சைக் காயம் போன்று, பாரிய வயிற்றுக்காயம் ஆறவேண்டியது போன்று தேவைகள் இல்லாததால் சாதாரண பிரசவத்தின் மறு நாளே வீடு செல்லக் கூடியதாயிருந்ததும் சுகப்பிரசவத்தை விரும்பக்காரணமாயிற்று. மேலும் சிசேரியன் சிகிச்சை அக்காலத்தில் தாயை முழுமையாக மயக்கியே செய்யப்பட வேண்டி இருந்தது. இதனால் குழந்தையை கவனிக்கவும், உடனே பால்கொடுத்தலை தொடங்கவும் முடியாது. இதனாலும் சாதாரண பிரசவமே நல்லது என்று கருதப்பட்டது.

இன்றோ சிசேரியன் சிகிச்சைக்குரிய வசதிகள் மிக பரந்து விரிந்து அதிகரித்துவிட்டன. அனுபவமிக்க டொக்டர்கள், தாதிகள் எண்ணிக்கையும் மிக அதிகம். முன்புடன் ஒப்பிட கர்ப்பிணித்தாய்மாரின் மரண வீதமும் குறைந்துவிட்டது. எனவே சிசேரியன் சிகிச்சையினால் கர்பிணித்தாய்மாரின் மரணவீதம் மேலும் அதிகரிக்குமோ என்ற பயம் இப்போது கிடையாது.

முந்திய தசாப்தங்களில் பெண்கள் கிராமங்களில் பாரமான வேலைகள் செய்தவர்கள் என்பதால் இடுப்புத்தசைகள் நன்கு விருத்தியடைந்திருந்தது. இது சாதாரண பிரசவத்தில் முக்கி இலகுவாக பிள்ளைப் பேற்றை அடைய முடிந்தது. இன்றோ நகரத்துப் பெண்கள் மட்டுமன்றி ஆண்களுமே பாரப்பட்ட வேலைகளைச் செய்யும் தசைவிருத்தி உள்ளவர்களாக இராது கொழுப்பு உணவு உண்டு தசை விருத்தி குறைந்தவர்களாகவே இருக் கின்றனர். இத்தகைய பெண்களை சாதாரண பிரசவத்துக்கு அனுமதித்தால் அவர்களுக்கு அதற்குரிய பொறுமையும் முக்குவதற்குரிய தசைபலமும் இராது என்பதால் சிசேரியன் சிகிச்சையே உகந்ததாக இருக்கக்கூடும்.

முற்காலத்தில் குழந்தை உயிரைப் பாதுகாக்க முடியாவிட்டாலும் குறைந்த பட்சம் தாயின் உயிரையாவது பாதுகாக்க வேண்டுமென்ற முனைப்பு மேலோங்கி இருந்தது. இதனால் பிறக்கும் குழந்தை சாதாரண பிரசவத்தில் பல நெருக்கீடுகளுக்கு உட்படுவதை கவனத்தில் எடுக்க மருத்துவத் துறைக்கு இயலவில்லை. இன்று தாயின் உயிரைப் பாதுகாக்கும் வல்லமை மருத்துவ விஞ்ஞானத்துக்கு கைகூடி வந்துவிட்டதால் அடுத்த கட்டமாக பிறக்கும் குழந்தையை இன்னும் பக்குவமாக நலுங்காமல் குலுங் காமல் வெளியே எடுப்பதில் இன்று அதிக அக்கறையை மருத்துவ விஞ்ஞானம் காண்பிக்கிறது. சாதாரண பிரசவத்தில் கருப்பை ஒவ்வொருமுறை விட்டுவிட்டு சுருங்கும் போதும் உள்ளே இருக்கும் குழந்தைக்கு செல்லும் இரத்த அளவு கணிசமாக குறையலாம். இது தவிர குழந்தை சராசரியை விட பருமன் குறைவாக இருந்தாலோ, கூடவாக இருந்தாலோ தலைப்பிள்ளை காலால் பிறப்பதாக இருந்தாலோ குழந்தைக்கு சாதாரண பிரசவத்தில் ஏற்படும் நெருக்கீடுகள் அதிகமாகும். இதனைத் தவிர்க்க சிசேரியன் சிகிச்சை சிறந்த வழியாக கருதப்படுகிறது.

இன்றைய நவீன யுகத்தில் குழந்தைகளும் சிறுவர்களும் மூத்தவர்களாகிய அந்த வயதுகளில் இருந்ததை விட பல மடங்கு புத்திசாலித்தனமாகவும் படுசுட்டியாகவும் இருப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுகிறோம். அது சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் வரவர அதிக குழந்தைகள் பிறப்பிக்கப்பட்டதன் காரணமாக இருக்கலாம். குழந்தைகள் பக்குவமாக நெருக்கடிக்குள்ளாகாது சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் பிறப்பிக்கப்படுவதால் சாதாரண பிரசவத்தில் போல் குழந்தைக்கு நெருக்கீடு மிகவும் குறைவாக இருந்து அதன்மூளை விருத்திக்கு அதிகமதிகமான வாய்ப்புகள் உண்டாகும்.

எனவே, காலமாற்றத்திற்கேற்ப கூடுமான வரையில் சிசேரியன் சத்திரசிகிச்சைக்கு செல்வது உசிதமாக இருக்கக் கூடும். முன்பு 100 கர்ப்பிணித்தாய்மாரில் 4.6 வீதம் மட்டுமே சிசேரியன் சிகிச்சைமூலம் குழந்தை பெற வைக்கப் பட்டனர். இன்று 100 தாய்மாரில் 20-25 பேர் வரை சிசேரியன் சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நிலைக்கு மருத்துவ விஞ்ஞானம் முன்னேறியுள்ளது. (சிசேரியன் சிகிச்சை மூலம் குழந்தை பெறுவதில் மற்றொரு லாபமும் தாய்க்கு உள்ளது. சாதாரண பிரசவத்தில் இடுப்புத் தசைகள் இழுபட்டு தளர்வடைய சாத்தியமுண்டு. முற்காலத்தில் இவ்வாறு 10-12 பிள்ளைகளை சாதாரண பிரசவம் மூலம் முக்கி முக்கி பெற்ற வேதனையுடன் அந்த தாய்க்கு பிற்காலத்தில் கருப்பை இறக்கம், இருமும் போது தும்மும் போது சிறுநீர் வெளியேறல் முதலிய பிரச்சினைகள் ஏற்பட்டன.

முற்காலத்தில் 8-10 பிள்ளைகளை பெறுவது சர்வ சாதாரண விடயம். இதில் ஒரு குழந்தை சாதாரண பிரசவத்தின் நெருக்கீடுகளால் புத்தி குறைந்த பிள்ளையானாலும் ஏனைய பிள்ளைகள் பூரண ஆரோக்கியம் புத்தியுடன் இருப்பதால் பெற்றோர் மனதை சமாதானப்படுத்திக் கொள்ளலாம். இன்றோ அவசரவாழ்வில் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெறுவது அரிது. அதிலும் ஒரு பிள்ளை புத்திகுறைவாக பெறுவது என்பது எந்தப் பெற்றோராலும் கனவில் கூட நினைக்க முடியாத விடயமாகும். எனவே முடியுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் சிசேரியன் சத்திரசிகிச்சை மூலம் பெறுவதே நவீன வாழ்க்கை முறை நவீன மருத்துவம், நவீன சமூகவியல் என்ற சகல துறைக்கும் பொருந்துவதாகும். முற்காலத்தில் முழு மயக்கத்தில் சிசேரியன் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது போலன்றி இன்று இடுப்புக்கு கீழ் மட்டும் மரத்துப்போக செய்து சிசேரியன் சிகிச்சை செய்யக்கூடியதாக இருப்பதால் சத்திரசிகிச்சை முடியமுன்பே உடனடியாக குழந்தையைத் தாய் காணவும் பால் கொடுக்கவும் முடியும். இவ்வாறு சத்திர சிகிச்சைப் பிள்ளைப்பேறு தான் சிறந்தது என்று இங்கு கூறுவதால் அரசவைத்திய சாலைகளிற்கு வரும் கர்ப்பிணித்தாய்மார் சகலருக்கும் சிசேரியன் சிகிச்சை செய்யும்படி நாம் அரசவைத்திய நிபுணர்களிடம் கேட்க முடியாது. அதற்குரிய வசதி சில வைத்தியசாலைகளில் மட்டுமே உண்டு. ஏனைய வைத்தியசாலைகளிலும் இவ்வசதிகள் உண்டாக்கப்படவேண்டும். மதுபானம் புகைத்தல் மூலம் நோயுறுபவர்களுக்கு அரசு சிகிச்சைக்கு செலவிடும் பணத்தை இவ்வாறு கர்ப்பிணிகள் நலம் மற்றும் புத்திசாதுர்யமிக்க குழந்தைகளின் பிறப்புக்கு பயன்படுத்தவேண்டும்.

**டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்**

சிலசமயம் கட்டாயம் சிசேரியன் சிகிச்சை மூலமே குழந்தையை பிறப்பிக்கப்படவேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. அது அந்தத்தாய், தந்தை, மகப்பேற்று வைத்திய நிபுணர் யாவரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செய்யவேண்டுமென்பது மருத்துவ விஞ்ஞானம் கண்டறிந்த முறையாகும். உதாரணமாக தலைப்பிள்ளை (முதலாவது குழந்தை) காலால் பிறக்குமாயின் கட்டாயம் அதை சாதாரண பிரசவத்துக்கு விடவே முடியாது. கட்டாயம் சிசேரியன் சிகிச்சைதான் முடிந்த முடிவு. இங்கு நான் கூறியவை மருத்துவவிஞ்ஞானம், சமூகவியல், உளவியல் உள்ளிட்ட பல அம்சங்களை கருத்தில் கொண்டவை. தனிப்பட்ட நபரான உங்களைப் போன்ற கர்ப்பிணி குறித்த முடிவை இந்தப் பின்னணியில் உங்கள் மகப்பேற்று மருத்துவநிபுணருடன் ஆலோசித்து பெறவேண்டும்.

**வாசகர்களே!**
**உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**



**உடல் நலம்**
**சுடர் ஒளி வாரமலர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

## அதிகரித்த இரத்தப்போக்கு



பெண்களுக்கு ஏற்படும் அதிகரித்த இரத்தப்போக்கினால் உடல் சோர்வு அசதி, வெறுப்பு, இடுப்புவலி, உடல்வெளுப்பு, வீக்கம் ஆகியவை ஏற்படுகின்றன. இதை பெரும்பாடு என்றும் அழைப்பார்கள்.

முறையற்ற கருக்கலைப்பு, கருத்தடை சாதனங்களை பயன்படுத்துவதில் ஏற்படும் ஒவ்வாமை, கருப்பை அழற்சி மற்றும் இடம்பெயர்தல், கரு உறுப்புகளில் கட்டிகள், புற்றுநோய் ஏற்படுதல், அதிக இரத்த சோகை, நாளமில்லா சுரப்பிகளின் மாறுபட்ட செயல்பாடு உள்ளிட்ட காரணங்களாலும் அதிகப்படியான மாதவிடாய்ப் போக்கு ஏற்படலாம்.

சாதாரண நிலையை விட அதிகப்படியான மாதவிடாய்ப்போக்கு காணப்பட்டால் கைப்பக்குவ மருந்தாக, நாவற்பட்டை குடிநீர் தயார் செய்து குடிக்கலாம். அதாவது 10 கிராம் நாவற்பட்டையை ஒன்றிரண்டாக இடித்து 200 மில்லி தண்ணீரில் போட்டு நன்றாக கொதிக்கவைத்து 50 மில்லியாக வந்ததும் வடிகட்டி தினமும் 2 வேளை குடிக்க கொடுக்கலாம்.

10 கிராம் அசோகுப்பட்டையை இடித்து 200 மில்லி தண்ணீர் விட்டு கொதிக்கவைத்து வடிகட்டி குடிநீராக தினமும் 2 வேளை குடிக்கலாம். அதிக மாதவிடாய் போக்கு இருந்தால் காரமான உணவுகளைத் தவிர்த்து விடுவது நல்லது.

இளஞ்சூடான, காரம் குறைந்த உணவுகள், வாழைப்பூ உணவுகள் ஆகியவற்றை தாராளமாக சாப்பிடலாம். சித்த மருத்துவத்தில் தயாரிக்கப்பட்ட சிலாசத்துப் பற்பம் 200 மில்லி கிராம் எடுத்து 5 முதல் 10 மில்லி நெய் அல்லது வெண்ணெயில் கலந்து தினமும் 2 வேளை கொடுக்கலாம். குங்கிலிய பற்பம், படிகப் புங்காவி, செந்தூரம் ஆகியவையும் சிறந்த மருந்துப் பொருட்கள். வெண்பூசணி லேகியத்தை 5 முதல் 10 கிராம் அளவில் தினமும் 2 வேளையாக அரை தம்ளர் பாலுடன் கலந்து சாப்பிடலாம்.

# மௌன மனவெளிகள்

48

சிவஞானமும் இளையவனும் ஆலடிச்சந்தியை அடைந்தபோது அங்கும் ஒரு பரபரப்பான சூழலே நிலவியது. காசிப்பிள்ளைக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி எங்கும் பரவிவிட்டது. ஆனால் திடீரென அவருக்கு ஏன் நெஞ்சுவலி ஏற்பட்டது என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் சார்ஜண்ட் சின்னத்தம்பி வந்துபோனது தொடர்பாக ஏதோ புதிய விஷயம் இருக்கவேண்டும் என கனகரத்தினம் ஊகித்திருந்த போதிலும் அது என்ன என்பதை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

கிணற்றுப்பட்டயைத் தோளில் வைத்தவாறு வந்த கந்தவனம், சிவஞானத்தின் அருகில் வந்து "என்னவாம்! காசி பாடு எப்படியாம்?" எனக்கேட்டார்.

சிவஞானம் "ஊசி போட்டு ஆஸ்பத்திரியிலை மறிச்சுப் போட்டினமாம்! ஆபத்து இல்லையாம்" என்றான்.

"அவன் செய்யிற அநியாயங்களுக்கு கடவுளாய்ப் பாத்து வேலை காட்டியிருக்கிறார். மூத்த நயினார் அநியாயம் பொறுக்கமாட்டார். பாப்பம் இனியெண்டாலும் திருந்திறானோவெண்டு" எனக் கூறிய கந்தவனம் தொடர்ந்து நடக்கத் தொடங்கினான். இரு இளைஞர்களையும் விளக்கமறியலுக்கு காசி அனுப்பியதால் ஏற்பட்ட கோபம் அவருக்கு இன்னும் அடங்கவில்லை. ஆனால், காசி இப்போ புதிய சிக்கலுக்குள் மாட்டுப்பட்டிருப்பதை அவர்கள் எவருமே அறிந்திருக்கவில்லை. காசியைச் சந்தித்து விட்டுக் கோபமாக வெளியேறிய சின்னத்தம்பி நேராக விதானையார் வீட்டுக்குப் போனார். அவர் ஜீப்பை விட்டிறங்கி உள்ளே சென்ற போது ஏற்கனவே கறுப்பான அவரின் முகம் மேலும் இருண்டு போயிருந்தது. விதானையார் இவ்வளவு லாவகமாகக் காய் நகர்த்துவார் என்பதை அவர் எதிர்பார்க்கவேயில்லை.

அவரின் வருகையின் காரணத்தை விதானையார் விளங்கிக்கொண்ட போதும் எதையுமே காட்டிக்கொள்ளாமல் "வாருங்கோ இருங்கோ!" என்றார்.

சின்னத்தம்பி சில வினாடிகள் எதுவுமே பேசவில்லை.

"என்ன ஏதும் பிரச்சினையே?" என மௌனத்தைக் கலைத்தார் விதானையார்.

சின்னத்தம்பி ஒரு பெருமூச்சுடன் "ஓ... காசி முதலாளி கேட்டதுக்காக ஒரு அலுவல் பார்க்க வெளிக்கிட்டு அது சிக்கலிலை கொண்டு வந்து விட்டிட்டுது!" என்றார்.

இப்போது விதானையாரின் குரலில் ஒரு அதிகாரமும் இறுக்கமும் தொனித்தது. "ஓ.. அப்பாவிப் பொடியளை தேவையில்லாமல் மாட்ட வெளிக்கிட்டால் சிக்கல் வரும்தானே!"

ஒரு அமைதியின் பின் சின்னத்தம்பி "அது பொய்முறைப்பாடு எண்டு இன்ஸ்பெக்டருக்கு விளங்கியிட்டுது என்னோடை நெருப்பாய் நிக்கிறார்!" என்றார்.

"அப்ப. இப்ப என்ன செய்யப் போறியள்?"

"அது தான் என்ன செய்யுறதெண்டு தெரியேல்லை... நீதவானும் லேசிலை விடார் போலை கிடக்குது"

"ம்... நீங்கள் இந்த தவணையிலை அது பொய் முறைப்பாடு எண்டும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய ஆதாரம் எதுவுமில்லை எண்டும் நீதவானட்டைச் சொல்லுங்கோ!" என்றார் விதானையார்.

"சரியான விசாரணை இல்லாமல் முதல் அறிக்கை எழுதினதுக்கு எனக்கு எச்சரிக்கை வரும். காசி பொய்முறைப்பாடு போட்டதுக்காக ரிமாண்ட் போக வேண்டி வரும்!"


விதானையார் அழுத்தமாகவே சொன்னார். "இதெல்லாம் நீங்கள் மற்றவைக்கு கெடுதல் செய்யேக்கை யோசிச்சிருக்க வேணும். இப்ப உங்கடை தலையிலை விடியேக்கை பதறிப் பிரயோசனம் இல்லை!"

சின்னத்தம்பி தலையைக் குனிந்து கொண்டார். பின்பு நீங்கள் தான் ஏதாவது வழி செய்யவேணும். அடுத்த தவணை வரமுந்தியே காசி சமாதானமாய் போக விருப்பம் எண்டு நல்லதொரு அப்புக்காத்தரை வைச்சு மனுக் குடுத்தால், பொடியளும் சம்மதிச்சாங்களெண்டால் ஒரு மாதிரிச் சமாளிச்சிடலாம். பொடியள் நீங்கள்சொன்னால் கேட்பாங்கள்" என்று தயங்கியவாறே சொல்லி முடித்தார்.

விதானையாருக்கு இப்போது உண்மையிலேயே கோபம் வந்து விட்டது. "அப்ப பொடியள் செய்தது தான் எண்டு ஒப்புக்கொள்ளுறமாதிரியல்லோ?"

"இல்லை... இல்லை அப்பிடி இல்லை" எனப் பதறினார் சின்னத்தம்பி.

"என்ன இல்லை.. எனக்கும் கோடு பற்றின நடைமுறை விளங்கும். இப்ப நீங்கள் போங்கோ



அட்வகேற் ஜெயசிங்கத்தோடை யோசிச்சுப்போட்டுச் சொல்லுறன்".

சின்னத்தம்பி எழுந்து நின்றவாறே. "எப்பிடியும் நீங்கள் தான்...." என இழுத்தார்.

"நான் இப்ப ஒண்டும் சொல்ல ஏலாது வாசிகசாலைப் பொடியளோடை யோசிக்கவேணும்.. அவங்கட முடிவுதான் என்ர முடிவும்.." என்று விட்டு எழுந்து கொண்டார் விதானையார்.

"அப்ப நான் வாறன்" என்று விட்டு சின்னத்தம்பி ஜீப்பில் போய் சோர்வுடன் ஏறிக்கொண்டார்.

கீலா, சிவப்பிரகாசம், சிவானந்தன் ஆகியோர் மருத்துவமனைக்கு வந்தபோது காசிப்பிள்ளை ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டார். எனினும் மருத்துவர் இரு நாட்களுக்குப் படுக்கையில் ஓய்வு எடுக்க வேண்டும் எனக் கூறிவிட்டார்.

**நா.யோகேந்திரநாதன்**

கீலா முதலாளியைக்கண்டதும் காசிக்கு கண்கள் கலங்கிவிட்டன. அவர் "முதலாளி நான் மட்டும் ரிமாண்டுக்குப் போறதெண்டால் மருந்து குடிச்சுச் செத்துப் போவன்" என்றார்.

அப்புக்காத்தர் ஒருமுறை தொண்டடையைச் செருமிவிட்டு, "அப்பிடி நாங்கள் கைவிடுவமெண்டால் நான் படிச்ச படிப்பிலை பிரயோசனமில்லை. நான் இன்ஸ்பெக்டரோடை போய்க் கதைச்சுப்போட்டு எல்லாம் வெட்டியாடி விடுறன்" என்றார்.

அந்த வார்த்தைகள் காசிக்கு பெரிதாக நம்பிக் கையைக் கொடுக்கவில்லை. அவர் தயக்கத்துடன் "சின்னத்தம்பி பிரச்சினை வரும் எண்ட மாதிரி வெருட்டுறான்".

"அவனுக்கு வழக்கை நெறிப்படுத்தத்தான் தெரியும் உடைக்கத் தெரியாது. விளங்குதே!"

"ஆகப்பிரச்சினை எண்டால் சொல்லுங்கோ. அவங்களை அடிச்சு முறிச்சுப்போட்டு கொண்டு வந்து காலுக்கை போடுறன்" எனச் சீறினான் சிவானந்தன். அவன் வடமராட்சிச் சண்டியர்களில் ஒருவன். அவனைக் கண்டாலே நல்லவர்கள் ஒதுங்கிப் போய்விடுவதுண்டு.

கீலா முதலாளியின் முறைப்பான ஒரு பார்வையுடன் அவன் வாயை மூடிக்கொண்டான்.

கீலா சொன்னார்? "காசி! நீ ஒண்டுக்கும் யோசியாதை. எல்லாம் நாங்கள் பாப்பம்" அந்த வார்த்தைகள் காசிக்குச் சற்று நிம்மதியைக் கொடுத்திருக்க வேண்டும்.

சிவப்பிரகாசம் கீலா முதலாளி ஆகியோர் பொலிஸ் நிலையத்தை அடைந்த போது இன்ஸ்பெக்டர் பயசும் சார்ஜண்ட் சின்னத்தம்பியும் கடுமையான ஆலோசனையில் இருந்தனர்.

தப்ப வேண்டுமானால் காசி எப்படியும் மாட்டுப்படவேண்டிவரும் என இன்ஸ்பெக்டர் நம்பினார். சின்னத்தம்பியோ இருவரில் எவருக்குமே சிக்கல் வராமல் பிரச்சினையை முடிக்க விரும்பினார்.

அவர்கள் இருவரும் மண்டையைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருந்த போது தான் சிவப்பிரகாசமும் கீலாவும் உள்ளே வந்தனர்.

இருவரையும் வரவேற்று அமரவைத்தார் சின்னத்தம்பி.

சிவப்பிரகாசம் இன்ஸ்பெக்டர் அறிக்கை தயாரிக்க சேகரித்த தகவல்களை வாங்கிப் பாத்துவிட்டு "கொஞ்சம் கஷ்டம்தான் ஆனால் செய்ய ஏலாதெண்டில்லை"

சின்னதம்பி ஆவலுடன் "என்னண்டு" எனக் கேட்டார்.

"நான் வடிவாய்த் தயாரிச்சுப் போட்டு நாளைக்குக் காலமை வாறன்" என்றார் சிவப்பிரகாசத்தார் சிரித்தவாறே.

விதானையாரின் அழைப்புக்கிணங்க வாசிகசாலை இளைஞர்களும், ஆலடிவெட்டைப் பெரியவர்களும் வாசிகசாலை முன்றலில் கூடியிருந்தனர். சிறிது நேரத்தில் விதானையாரும் குடியரசரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

விதானையார் நடந்த விஷயங்களையும், சார்ஜண்ட் சின்னத்தம்பி தன்னிடம் வந்து கெஞ்சியதையும் ஒன்றுவிடாமல் விளக்கமாகச் சொல்லிவிட்டு "இப்ப நாங்கள் என்ன செய்வம்" எனக் கேட்டார்.

கந்தவனம் சிறிது கூடத் தயங்காமல் "அவன் காசி ஒருக்கால் மறியலுக்குப் போட்டு வந்தால் தான் திருந்துவான்" என்றார். சிங்கனின் தகப்பன் சிதம்பரியோ "அவனாலை எப்பவும் தரித்திரம் தானே அவனைத் தூக்கிலைப் போட்டாலும் பரவாயில்லை" என்றார். எவரிடமும் உரத்துக்கூடக் கதைக்காத சிதம்பரியார் இவ்வளவு கடுமையான வார்த்தைகளைப் பாவித்தது அனைவரையுமே திகைக்கவைத்து விட்டது. விதானையார் சிதம்பரியாரின் அடக்கி வைத்திருந்த பிள்ளைப்பாசம் வெடித்ததாலேயே அந்த வார்த்தைகள் அவ்வளவு கடுமையாக வெளிவந்தன என்பதைப் புரிந்துகொண்டார்.

எல்லோருமே காசியின் மீது கோபத்தையே காட்டினர். அதுவரை அமைதியாயிருந்த கனகரத்தினம் "அவர் செய்ததெல்லாம் மன்னிக்க முடியாத பிழையள்தான். ஆனால் தொடர்ந்து பகையை வளர்த்து எங்களுக்குப் பின்னாலை கொஞ்சப்பேர் அவங்களுக்குப் பின்னாலை கொஞ்சப்பேர் எண்டு ஊர் இரண்டு படுறது நல்லதில்லை எண்டு நான் நினைக்கிறன்" என்றான்.

விதானையார் மெல்லச் சிரித்தவாறே கேட்டார், "காசி திருந்துவான் எண்டு நீ நம்புறியே?" என்றார்.

"கடைசி வரையும் திருந்தப் போறதில்லை!" என்றான் நல்லதம்பி குறுக்கிட்டு.

"கடைசிச் சந்தர்ப்பம் குடுத்துப் பார்ப்பம்" என்றான் கனகரத்தினம்.

"உன்னை மறியலுக்கு அனுப் பினவனல்லே?" கனகரத்தினம் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னான்.

"அண்ணை! நாங்களும் அவரை மறியலுக்கு அனுப்பினால் அவருக்கும் எங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போகுமெல்லே!"

சில வினாடிகள் அமைதி நிலவியது?

கந்தவனம் அமைதியைக் குலைத்தார் "ஏதோ விதானையார் ஐயா முடிவெடுத்துச் செய்யட்டும்... அவரின்ரை முடிவுக்கு நாங்கள் சம்மதம்"

அனைவரும் விதானையாரின் முகத்தைப் பார்த்தனர்.

அவர் "ம்.. யோசிச்சுச் செய்வம்" என்றார். குடியரசருடன் ஆலோசித்தால்தான் சரியான முடிவுக்கு வரமுடியும் என விதானையார் நம்பினார்.

(தொடரும்)

# ஐ.நா கற்றுக்கொண்ட பாடம்!

உலக ஜனநாயக வாதிகளின் மனச்சாட்சி அப்பாவிகளின் அவலங்களில் இருந்து பாடங்களை படிப்பதாகவே உள்ளது. கூரிய ஆயுதமொன்றால் கீறிப் பிளக்கப்பட்ட காயத்திற்கு மருந்திடுவதையும் இரத்தப்போக்கை தடுத்து அந்த உயிரைக் காப்பாற்ற கட்டிடுவதையும் விடுத்து காயப் பட்டவரின் அவலத்திலும், அவரின் மரணத்திலும் பாடங்களை படிப்பதையே உலக ஜனநாயகவாதிகள் என தம்மை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

நடுவீதியில் ஒருவர் அடித்து கொலைசெய்யப்படும்போது, அங்கு நடப்பது கொலை என தெரிந்திருந்தும் அதனை தடுக்க வக்கற்று இருந்துவிட்டு, ஐயோ நான் செய்தது தவறு. கொலையை தடுத்திருக்க வேண்டும் அவரை காப்பாற்றியிருக்க வேண்டும் என கூச்சலிடுவதும், பின் குறித்த கொலை தொடர்பில் பாடங்களை கற்று இப்படியொரு கொலை இனி இடம்பெறாமல் தடுப்பேன் என முழங்குவதும் எவ்வாறு ஏற்புடையதல்லவோ அதேபோல் இன்று ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் போதிப்பவர்களின் நடவடிக்கைகளும் ஏற்புடையதற்காகவே பரிணாமம் உள்ளது. இதனைத்தான் அச்சொட்டாக நிரூபித்திருக்கிறது இலங்கை விடயம் தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் சபையின் அறிக்கை.

இறுதிக்கட்டப்போர் வன்னியில் தனது கோரமுகத்தை காட்டியபடி உயிர்குடிக்கும் வெறியுடன் தமிழர் பிரதேசமான வன்னிப் பெருநிலப்பரப்பை முற்றுகையிட்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் எறிகணைகளால் தினம் தினம் செத்து வீழ்ந்துகொண்டிருந்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகநிறுவனங்கள் தமது வெளியீடுகளில் அப்பாவிகளின் சிதைக்கப்பட்ட உடலங்களையும் இழக்கப்பட்ட அவயங்களையும் குற்றுயிராய் துடித்துக் கொண்டிருக்கும் பதிவுகளையும் உள்ளடக்கி செய்திகளாக வெளியிட்டுவந்தன.

இறுதிப்போரின்போது வன்னிப் பெருநிலப்பரப்பில் மனித மனச்சாட்சியை உலுக்கும் சம்பவங்கள் தினம் தினம் இடம்பெற்று வந்தன. இதை அங்குள்ள வெளிநாட்டு, உள்நாட்டு ஊடகவியலாளர்கள் தமது பதிவுகளில் உள்ளடக்கி தினமும் வெளியிட்டுவந்தனர். மருத்துவமனைகள் உட்பட வன்னியின் எல்லாப் பகுதிகளையும் எறிகணைகள் பதம்பார்த்த வண்ணமிருந்தன. மோதல் தவிர்ப்பு வலயம் என அறிவிக்கப்பட்டு அங்கு சென்ற மக்கள் மீது எறிகணைகளும் போர்விமானங்களும் தமது கொலை வெறியைக் காட்டி மகிழ்ந்தன. போர் அரக்கன் தனது வாயை அகலத்திறந்தபடி அப்பாவிகளின் உயிரைக் குடித்து மகிழ்ந்தான். தம்மை காப்பாற்றுமாறு அப்பாவிகள் உலக நாடுகளிடம் கண்ணீர் வடியும் முகங்களுடன் கதறி அழுது கோரிக்கைவிடுத்து வந்தனர். ஆனால், அதுதொடர்பில் உலக மனித உரிமைவாதிகள் எந்தவித அக்கறையுமே எடுக்கவில்லை. கொத்துக் கொத்தாக மக்கள் கொன்றொழிக்கப்பட்டபோது வாய்பேசாமல் கைகளைக் கட்டியபடி மௌனமாயிருந்தனர். அப்பாவிகளைக் கொல்ல ஏதுவாக ஆயுதங்களையும் அள்ளி வழங்கினார். இவ்வாறு செயற்பட்டவர்கள் வன்னியில் ஏற்பட்ட கறைகளைக் கழுவ அறிக்கை போரை ஆரம்பித்திருக்கின்றனர். அதனை நிரூபித்திருக்கிறது சார்ள் பெற்றியால் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்ட (சில விடயங்கள் கறுப்பு மையால் பூசப்பட்ட) 127 பக்க அறிக்கை.

குறித்த அறிக்கையின் உள்ளடக்கம் ஐ.நாவின் பொறுப்பு மீது குற்றஞ்சாட்டினாலும் அது காலங்கடந்த ஞானமாக, சாத்தான் ஓதும் வேதமாக இருப்பதாக அங்கலாய்க்கின்றனர் மக்கள். போர் இடம்பெற்றபோது போரிற்கு முன்னும் போரிற்கு பின்னரான சூழ்நிலையிலும் ஐ.நாவின் நடத்தையும், குறிப்பாக இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதிலும் சமாதான பேச்சுமேசைக்கு இழுப்பதிலும் உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகளும் காட்டிய அக்கறை அதை நடைமுறைக்கு கொண்டுவருவதிலும் அதனை மீறும் தரப்பு மீது அழுத்தத்தை பிரயோகிப்பதிலும் காட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டு வலுவாக எழுந்திருந்தது. குறிப்பாக தமிழர் தரப்பை ஆத்திரமூட்டி வன்முறையின்பால் இழுக்கும் போக்கை ஆளும் தரப்பு மேற்கொண்டபோது ஆளும் தரப்பை கட்டுப்படுத்துவதிலும் அதன் மீது அழுத்தத்தை பிரயோகித்து பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதிலும் ஆர்வம் காட்டப்படவில்லை. அதுமாத்திரமன்றி தமிழர் பிரதேசங்களில் தொடர்ந்த நீதிக்குப் புறம்பான படுகொலைகள் தொடர்பில் ஐ.நா. நாடுகள் சபை வெறும் பார்வையாளராக மாத்திரமே இருந்தது.

மூதூரில் அக்ஷன்பாம் நிறுவன ஊழியர்கள் 17 பேர் அவர்களின் அலுவலகத்திற்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டமை, ஐ.நா மனிதநேய பணியாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு இலக்கானமை என்பவற்றில் ஐ.நா செயற்பட்ட விதமும் நடைமுறைக்கு ஒவ்வாத வகையிலேயே அமைந்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அத்துடன் மோதல் நிகழ்ந்த பகுதியில் சிக்கியிருந்த மக்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்தல், அவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்களில் ஐ.நா. அக்காலங்களில் நழுவல் போக்கை கடைப்பிடித்திருந்தது. குறிப்பாக போரில் அப்பாவி மக்கள் இலக்குவைக்கப்பட்டபோதும், தமிழர் பிரதேசத்திற்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டபோதும், யாழ்ப்பாணம் திறந்தவெளிச் சிறைச்சாலை ஆக்கப்பட்டபோதும் ஐ.நா மௌனியாய் மட்டுமே தம்மை உருமாற்றியிருந்தது.

அப்பாவிகளை பாதுகாப்பதிலோ, அவர்களின் அவலங்களை தடுப்பதிலேயோ, அவ்வேளையில் ஐக்கிய நாடுகள் சபை எந்தவிதமான உருப்படியான திட்டங்களையும் முன்வைக்கவில்லை. போராட்டத்தை பலமிழக்க செய்வதிலும் அப்பாவிகளைப் பாதுகாக்குமாறு விஜய் நம்பியார் உட்பட ஐ.நா அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதிலும் சுயலாப ராஜதந்திர பூகோள அரசியல் நடத்துவதையே ஐ.நாடுகள் சபை உட்பட்ட அமைப்புகளும் அவற்றில் அங்கம் வகிக்கும் உலக வல்லரசுகளும் தமது செயற்றிட்டமாக முன்னெடுத்தன. போரின் இறுதிக்காலப்பகுதியில் வன்னியிலும் ஏனைய தமிழர் பிரதேசங்களிலும் பணியில் இருந்த மனித நேயப் பணியாளர்களை பாதுகப்பு எனக்கூறி அவர்களைத் திருப்பி அழைத்து வன்னிப் பெருநிலப்பரப்பில் பாரிய மனிதப் பேரவலங்களும் இனப்படுகொலைகளும் தாராளமாக இடம்பெறுவதற்குரிய சூழ்நிலையை ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் இன்று நல்லபிள்ளை போல வன்னிப்பெருநிலப்பரப்பில் இடம்பெற்ற யுத்தத்தின் இரத்தக்கறைகளைக் கழுவ ஐ.நா முற்படுகிறதா என்ற சந்தேகம் தவிர்க்க முடியாமல் எழுகின்றது. போர் தமிழர் பிரதேசமெங்கும் விஸ்வரூபம் எடுத்திருந்தபோது ஐ.நாவின் மனச்சாட்சியை தட்டித்திறக்க 'சனல் 4' போன்ற உலக ஊடகங்கள் முயன்ற போதிலும் ஐ.நாவின் மனச்சாட்சியை திறப்பது கல்லில் நாருரிக்கும் வேலையாகவே அமைந்திருந்தது. அப்போதெல்லாம் சினிமா திரையரங்குகளில் பார்வையாளர் கலரிகளில் இருந்து விசிலடித்து திரைப்படம் ரசிக்கும் ரசிகர்களைப்போல பார்வையாளர்களாக மாத்திரம் இருந்துவிட்டு எல்லாமே முடிந்து தமிழ்மக்கள் மீள முடியாத அவலத்திற்குள் தள்ளப்பட்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில் தவறுகளை ஏற்பதும் அதற்காக மனம் வருந்துவதும் எந்தவிதத்தில் அர்த்தமுடையது என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

இது தொடர்பாக அண்மையில் கருத்துத்தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையின் மோதல் காலப்பகுதியில் ஐ.நா நடந்துகொண்ட விதம் தவறானது என தெரிவித்திருக்கிறார். ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி சாள்ஸ் பெற்றியினால் கைளியளிக்கப்பட்ட ஐ.நாவின் உள்விவகாரங்களை ஆராயும் 127 பக்க அறிக்கை தொடர்பிலேயே பான் கீ மூன் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். இலங்கை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டில் பாரிய பின்னடைவு இருந்ததை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் இலங்கை விடயத்தில் ஐ.நா செயற்பட்ட விதம் தொடர்பில் தவறுகளைப் பாடமாக கொண்டு இனிவரும் காலங்களில் அதனை திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் ஐ.நா விடயம் தொடர்பில் அவரின் கருத்தும் ஐ.நாவின் நிலைப்பாடும் காலம் கடந்த ஞானமாக இருந்தாலும் இலங்கை விடயத்தில் ஐ.நா நீண்டதூரம் பயணிப்பதன் ஊடாக தமது தவறுகளுக்கு பிராயச்சித்தம் ஓரளவுக்கேனும் தேடலாம் என்கின்றனர் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இதையே வலியுறுத்தியிருக்கிறார். இலங்கை விடயத்தில் சுயாதீன விசாரணை அவசியம் எனவும் அவ்விடயத்தில் ஐ.நா பொறுப்புடன் செயற்படவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். அத்துடன் மோதல் காலப்பகுதியில் தமிழ் மக்களை காக்கத் தவறிய ஐ.நா மீது சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ள சுமந்திரன் இலங்கை விடயத்தில் ஐ.நா செயற்பட்ட விதம் எதிர்காலத்திற்கான நல்ல பாடமாக கருதமுடியாது எனவும் வலியுறுத்தியிருக்கிறார். அத்துடன் இந்த விடயத்தில் ஐ.நா தனது தவறை உணர்ந்திருந்தால் நிச்சயமாக எதிர்காலத்தில் இலங்கை விடயத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியும் இருக்கிறார்.

எனவே எதிர்காலத்திலும் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விடயத்தில் பொறுப்புடனும் நிதானத்துடன் செயற்படுமா? என்ற கேள்வி இன்றைய சூழ்நிலையில் எழுகின்றது. குறிப்பாக வறுமையால் சிக்கித்தவிக்கும் அப்பாவித் தமிழ்மக்களை அதிலிருந்து மீட்டெடுக்க காத்திரமாகச் செயற்படுமா? அரசின் முறையற்ற மீள்குடியேற்றத்தால் தவிக்கும் மக்களை மீட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுமா? 13 பிளஸைத் தருவோம் என்றுவிட்டு 13 ம் திருத்தத்தையே மாற்றுவோம் என கங்கணம் கட்டி நிற்கும் ஆட்சியாளர்கள் மீது அழுத்தங்களை பிரயோகித்து நீதியான தீர்வு வழங்கப்படுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துமா? தமிழர் பிரதேசங்களில் தொடர்வதாக கூறப்படும் சிங்களக் குடியேற்றங்கள், நில அபகரிப்புகள், இராணுவ மயமாக்கல்கள் என்பவற்றிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபை எடுக்குமா? இலங்கையில் இடம்பெறும் ஜனநாயக மீறல்கள் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை இடம்பெற தோள்கொடுக்குமா? போன்ற கேள்விகள் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின் பின் தமிழ் மக்களிடம் எழுந்துள்ள கேள்விகளாகும். எனவே தவறுகளை செய்துவிட்டு தவறை ஏற்றுக் கொண்டு முன்னேறுவோம் என கூறும் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை விடயத்தில் செய்த தவறை ஏற்றுக்கொள்வது கடந்த கால துன்பியலுக்கு பரிகாரமா? அல்லது சில வருடங்களுக்குப் பின் போரிற்கு பின்னரும் இலங்கை விடயத்தில் தவறு செய்துவிட்டோம் என்ற அறிக்கையும் கவலையும் வருமா? பொறுத்திருந்து பார்ப்போம்.



— ஹரன் —

இலங்கைத் தீவில் சிவன் வழிபாடு காலம் தோறும் மிகப்பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வந்துள்ளமையை வரலாற்று ஆவணங்கள் பதிவுசெய்து வைத்துள்ளன. சிவப்பிராமணர்கள் மிகத்தொன்மையான காலப் பரப்பிலிருந்து இலங்கையில் வாழ்ந்து வந்திருந்தமைக்கான சாசனப் பதிவுகளும் கிடைத்துள்ளன. 'சிவ' எனத் தொடங்கும் பெயர்களையுடைய அரசர், வணிகர், நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரது குலக்குறிப்புடனான கல்வெட்டுப் பதிவுகள், நாணயச்சான்றுகள் என்பனவும் இலங்கையில் கிடைத்துள்ன. கந்தரோடையில் 'சிவ' எனப் பிராமி வரிவடிவில் பொறிக்கப்பட்டுக் கிடைத்த சதுர நாணயம் ஒன்று (செம்பு) மிகச் சிறந்த சான்றாகின்றது. இவையாவும் கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே பிராமணக் குடியேற்றங்களும், பிராமணீயச் சடங்குகளும் இலங்கையில் நடைபெற்று வந்துள்ளமையை உறுதிப்படுத்தும் சான்றுகளாகும். தனித்துவமான சிவ வழிபாட்டு முறைக்குள் (திருமூலர் பாடியது போன்று) இலங்கைத் தீவு அகப்பட்டிருந்தது என்பதற்கான மிகத்தெளிவான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. பஞ்ச ஈஸ்வரங்களுள் அவற்றின் இரண்டு தலங்களின் சிறப்புக்களை இலங்கைக்கு வருகைதராம

அங்கீகாரம் பெற்ற நிலையில் பௌத்த மதம் தொடர்பான சகல அனுகூலங்களையும் அனுராதபுரமானது யாழ்பாணக் குடாநாட்டினூடாகப் பெற்று உருத்திரபுரம் சிவன் ஆலய வளாகத்திற்கு தென் எல்லையிலிருந்தே அதன் பரந்துபட்ட பண்பாட்டு நிறுத்தல்களுக்குரிய வேலைத் திட்டங்களை முன்னிறுத்தியிருந்தது. எந்தவொரு பண்பாட்டு வருகையும் பௌத்தத்துடன் சம்பந்தப்பட்ட வகையில் குடா நாட்டின் வடகரையில் இடம்பெற்றிருந்தாலும் அவை உடனடியாக அனுராதபுரத்திற்கு வருவிக்கப்பட்ட சம்பவங்களூடாக ஒரு பண்பாட்டு அறிக்கையாளன் என்ற வகையில் அறியமுடிவது, பௌத்தப் பண்பாடு வளர்வதற்குரிய எந்தவிதமான சூழலும் உருத்திரபுரம் சிவன்கோயிலுக்கு வடபாகத்தில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்பதேயாகும். ஆகையால் தான் தமிழ் பௌத்தப் பள்ளியாகக் காணப்பட்ட வல்லிபுரம் விஷ்ணு கோவிலாகியது. கந்தரோடையில் கண்ணகி வழிபாடு வளர்ந்து பரவியது. நயினா தீவில் சக்தி பீடம் வளர்ச்சியடைந்தது. பௌத்த சமயம் வேரூன்றமுடியாத மையங்களுக்கே 'புத்தரின் மும்முறை வருகை'அமைந்தது. அவ்வாறெனில் சிவ வழிபாட்டு மரபுகள் அம்மையங்களில் மிகவும் வலிமை பெற்றிருந்தது என்பதே அர்த்தமாகும். தென்னிலங்கையில் காணப்பட்ட தொண்டீஸ்வரம் (தெவுந்தர)

பாட்டு முறைகள் தழுவப்பெற்ற மக்கள் வாழ்ந்த ஒரு மையமாக உருத்திரபுரம் சிவன் கோவில் வளாகம் பரிணாமமடைந்து வந்தது என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

தற்பொழுது உள்ள நிலையில் இக்கட்டுரையாளர் பல்லவர் சோழர் பண்பாட்டுச் சான்றுகள் பலவற்றை உருத்திரபுர சிவன்கோயில் வளாகப் பரப்பிலிருந்து கடந்தகாலங்களில் மீட்டெடுத்திருக்கின்றார். பல்லவர் கலைமரபிற்குரிய சங்க உருக்கள் (வெண்வைரக் கற்களினாலானவை) மீட்டெடுக்கப்பட்டு தேவஸ்தான அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சிவன் கோயிலின் கட்டிட இடிபாடுகளுக்கு மத்தியிலிருந்து தமிழ் வரிவடிவம் பொறிக்கப்பட்ட செங்கற்கள் பல மீட்டெடுக்கப்பட்டிருந்தன. அவ்வரிவடிவங்கள் கி.பி 10 ஆம், 11 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய சோழர் சாசனங்களில் இடம் பெற்ற வரிவடிவத்தினை ஒத்துக்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்கோயிலினுள் வைக்கப்பட்ட செப்புத்திருமேனிகள் சில சோழர் காலத்திற்குரிய கலையம்சங்களைக்கொண்டு விளங்கிய போதும் உண்மையான பழமையான வெண்கலப் படிமங்கள் இங்கிருந்து களவாடப்பட்டு கொண்டு செல்லப்பட்டுவிட்டன என்பதே உண்மையாகும். போத்துக்கேயரது ஆட்சியில் இத்தகைய கலை

# சிதைந்துபோன சிவன் வளாகமும் மறைந்துபோன வழமைகளும்.



லேயே இந்தியாவில் இருந்தவாறு சைவ நாயன்மார்களால் பாடப்பெற்றது என்றால் இலங்கையில் சிவவழிபாட்டின் இறுக்கமான தொடர்பு எவ்வாறு இருந்திருக்கும் என்பதனை உணர்ந்து கொள்ள முடியும். பஞ்ச ஈஸ்வரங்களின் சிறப்புக்கள் பலரும் அறிந்ததே. பஞ்சஈஸ்வரங்களைச் சுற்றி பிராமணக் குடியேற்றங்களும், மாஞ்சோலைகளும், மயில் - மான் வாழும் பூஞ்சோலைகளும் கூடங்களும், குடிகளும் என பெரிய பெரிய கோயில் வளாகங்களே காணப்பட்டன. பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற சிவத்தலங்களான கோணேஸ்வரம், கேதீஸ்வரம் ஆகியன மிகமிகச்செழிப்பான முறையில் பண்பாட்டு வளர்ச்சி கண்டிருந்த வகையில் சிவனை மையமாகக்கொண்ட மாபெரும் சைவப்பண்பாட்டு வளாகங்களாக திகழ்ந்திருந்தன. மன்னார் முத்து மலிந்த கேதீஸ்வரத்தில் பல்லவர் காலத்து சிவன் - உமை - சோமாஸ்கந்த மூர்த்தி வெண்கலப்படிமங்களும், கோணேஸ்வரத்தில் ஏழுக்கு மேற்பட்ட சிவன் - உமை உள்ளிட்ட வெண்கலப்படிமங்களும் பாதுகாக்கப்பட்ட நிலையில் இற்றைவரைக்கும் சைவசமயத்தவரது பண்பாட்டுப் பொக்கிஷங்களாக விளங்கிக்கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். இவ்வாறானதொரு மிகச் செழுமையான சைவப் பண்பாட்டு அகப்புறச் சூழலில் வளர்ச்சியடைந்திருந்த இலங்கைத் திருநாட்டின் வரலாற்றில் வன்னிப்பிராந்தியத்தில் மிக நீண்டதொரு வைதீகப் பண்பாட்டு நெறியை உள்டக்கிய வகையில் உருத்திரபுரம் சிவன் ஆலய அகச் சூழல் வளர்ச்சியடைந்திருந்தமையை தொல்லியற் சான்றுகள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கைத் தீவின் பண்பாட்டுருவாக்கத்தில், கரையோரம் தவிர்த்து, மையப் பகுதியினூடாக அமையப்பெற்ற வணிகமையங்கள் இணையப் பெற்ற போக்குவரத்து வலையமைப்பின் பின்னணியின் கட்டமைப்பில் ஒரு காவல் பண்பாட்டுக் கோபுரமாக உருத்திரபுரம் சிவன் கோவில் அமைந்திருந்தமையை சைவசமய வளர்ச்சியை ஆராயும் ஆய்வாளர் இன்னும் கண்டுகொள்ளவில்லை. சைவத்திற்கு பங்கமேதும் ஏற்படாது பாதுகாக்கும் (?) நோக்கில் உருத்திரபுரம் சிவன் கோவிலின் பண்பாட்டு வளாகக் கட்டமைப்பு உரியவர்களால் உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செ.கிருஷ்ணராஜா,
வரலாறு - தொல்லியல்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

அந்நிலையானது பல்லவர்காலத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டிருந்தது என்பதற்கான விளக்கங்களும் காணப்படுகின்றன. (சோழர் காலத்தில் அந்நிலை எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கும் என்பதனை விளங்கப்படுத்தித்தான் தெரியவேண்டுமென்பதில்லை)

இலங்கை பண்பாட்டின் கட்டமைப்பில் உருத்திரபுரம் சிவன்கோவிலுக்கும் தெற்கேயுள்ள பரப்பிலேயே பௌத்தத்தின் முழுமையான செயற்பாடுகளும் மேலோங்கிக் காணப்பட்டிருந்தன.

புத்தரின் மகியங்கனைக்கான வருகைக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அனுராதபுரத்திற்கு கௌதமபுத்தர் வருகை தராமல் தவிர்த்து விட்டதற்கான காரணத்தினை வினாவும்போது மகாவம்சம் எழுதப்பட்டதன் உள்நோக்கமும், மகாசேனன் ஆட்சிக்காலத்தில் (கி.பி. 4 நூ.) ஈழத்திலுள்ள சிவன் கோவில்களை இடித்து அழித்து ஒழித்த நிகழ்வுக்குரிய அர்த்தமும் எமக்குப் புரியும். இச்சந்தர்ப்பத்திலேயே உருத்திரபுரம் சிவன் ஆலய வளாகம் சைவ சமயத்திற்கு பாதுகாப்பரணாக பெரும் பங்காற்றியிருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது.

ஈழத்து இந்து சமய வளர்ச்சிக்கும் அதன் பண்பாட்டு உருவாக்கத்திற்கும் உருத்திரபுரம் சிவன் ஆலய வளாகம் பல்துறைப்பட்ட பங்களிப்புக்களை நல்கியிருந்தது என்றால் அதில் தவறேதும் இருக்க முடியாது. தேவதானமாகக் கொள்ளப்பட்ட நெல்விளையும் பரப்புக்களும் மாஞ்சோலைகளும் மலிந்த உருத்திர்புரம் சைவப்பண்பாட்டுக்கு ஒரு காவல் அரணாகத் தொழிற்பட்டிருந்தது என்பதனை எவருமே மறைக்க முடியாது.

வடக்கு வன்னி மக்கள் தொடர்ந்தும் சைவ சமய மரபினை சங்ககாலப் பரப்பிலிருந்து முன்னெடுத்து வளர்த்து வந்திருந்தமைக்கான தொல்லியற் சின்னங்களை உருத்திரபுரம் சிவன்கோயில் வளாகம் கொண்டுள்ளது, கொண்டிருந்தது என்பதே யதார்த்தமாகும். காலத்திற்குக்காலம் உருத்திரபுரம் சிவன் கோவில் வளாகப் பரப்புக்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த தொல்லியற் சின்னங்களால் அவ்வாலயத்தின் அதீத தொன்மையை அறிய முடிகின்றது. ஈழத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட லிங்கம் போன்ற தோற்றத்தினையுடைய சுடுமண் சிற்பங்களுள் பெருமளவானவை இக்கோயில் வளாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட சிவவழி

யறிவுக்கொள்கைகள் உருத்திரபுரத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பௌத்த மதம் வளர்த்தெடுக்கப்பட்ட தொட்டிலான அனுராதபுர நகரில் நிறுவப்பட்டிருந்த பல்லவர் காலச் சிவன் கோவிலான முனீஸ்வரர் ஆலயம் பின்னர் இடித்தழிக்கப்பட்டு பௌத்த விகாரையாக்கப்பட்டு, மக்களின் வழிபாட்டில், விகாரையாகவே பேணப்பட்டு, இற்றைக்கு வரைக்கும் பாதுகாக்கப்பட்டு வருவதைக் காண்கின்றோம். அவ்விகாரையின் இன்றைய பெயர் 'இசுருமுனிய' என்பதாகும். முனீஸ்வரம் என்பது ஈஸ்வர+ முனி என்றாகி 'இசுரு+முனிய' என மருவி வழங்கப்படுகின்றது. இது பௌத்த சமய வரலாற்றின் வளர்ச்சியில் ஏற்பட்ட ஒரு விடயமாகும். அதாவது சிவன் கோயில் பௌத்தக் கோயிலாக மாற்றமடைந்த விடயமாகும். இந்தப் பக்கத்தில் உருத்திரபுரம் பக்கம் பக்கமாக சிவவழிபாட்டினையும் பௌத்த வழிபாட்டினையும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திலிருந்து பேணி - வளர்த்தெடுத்திருந்தமையே யதார்த்தம். தமிழ் பௌத்தர்களின் செல்வாக்குக் குறைய உருத்திரபுரம் சிவன் கோயில் தேவஸ்தானம், ஒரு பெரிய கோயில் வளாகமாகவே மாற்றமடைந்திருந்தது எனலாம். சோழர் காலத்தில் இவ்வாறான ஒரு சிறப்பான வளர்ச்சியை உருத்திரபுரம் சிவன்கோயில் பெற்றிருந்திருக்கவேண்டும். அந்நிலையானது பொலனறுவைக் கால வீழ்ச்சியைத் தொடர்ந்து வந்த கலிங்க மாகனது ஆட்சிக் காலத்தில் சரிவு கண்டிருக்கவேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது. அதாவது கி.பி.13 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியல் பண்பாட்டு வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் உருத்திரபுரம் சிவன் கோயிலையும் நேரடியாகப் பாதித்திருக்கமுடியும். ஆனால் எமக்கு அந்நிலையைக் கண்டு கொள்வதற்குரிய நேரடியான தொல்லியற் சான்றுகள் எவையும் இதுவரையில் கிடைத்திருக்கவில்லை. இந்நிலையில் போத்துக்கேயரது ஆட்சிக்காலத்திலேயே உருத்திரபுரம் சிவன்கோயில் பாரிய பின்னடைவை எய்தியிருக்க வேண்டும்.

நன்றி -
மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம்,
15வது ஆண்டுமலர்.




# 'ஆமாம் சாமி' போடுவதை நிறுத்துங்கள்!

இரா.புத்திரசிகாமணி

ஜனாதிபதியின் பகல் உணவும், பாதணியும், இரண்டுசோடி சீருடையும் பெருந்தோட்டப் பாடசாலை சிறார்களுக்குக் கிடைக்குமா? இந்த உத்தரவாதமும் உறுதிமொழிகளும் நடைமுறைப்படுத்தப்படுமா? அல்லது பகல்கனவாகவே முடிந்துவிடுமா? அதுதான் இன்று எழுந்துள்ள கேள்வி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிதிஅமைச்சர் என்ற வகையில் தனது எட்டாவது வரவுசெலவுத் திட்டத்தைக் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட்டார்.

அரசாங்க ஊழியர்களுக்கு 1500 ரூபா சம்பள உயர்வை அதுவும் தவணை முறையில் வழங்கப்போவதாகக் கூறி உள்ளார். ஆனால் தோட்டத் தொழிலாளர்களையும் தனியார்துறை ஊழியர்களையும் ஜனாதிபதி அடியோடு மறந்துவிட்டார் என்றே தோன்றுகின்றது.

போனால் போகிறது என்று பெருந்தோட்டக் கம்பனிகளை ஒருமிரட்டு மிரட்டி உள்ளார். தோட்ட அபிவிருத்திக்கும் தொழிலாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்கும் அக்கறை காட்டாத தோட்டக் கம்பனிகளுக்கு அரசினால் வழங்கப்படும் மானியங்கள் நிறுத்தப்படும் என்றும் வரவு செலவுத் திட்ட உரையில் கூறியுள்ளார்.

நமது ஜனாதிபதி எப்போதும் சொன்னதையும் கூறியதையும் அப்படியே செய்துவிடுவார் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றுதானே.

இம்முறை அவரது வரவு செலவுத் திட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு, ஒருசோடி பாதணி, வருடத்திற்கு இரண்டுசோடி சீருடைகள் வழங்கப்படும் என்று முன்மொழிந்துள்ளார்.

அதேவேளை முன்பள்ளிகள் அபிவிருத்தி செய்யப்படும், அங்கு கல்வி கற்கும் சிறார்களுக்கு இலவசச் சத்துணவாகப் பால் முட்டை மற்றும் தானிய வகைகள் அரச செலவில் இலவசமாகவே வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பின்தங்கிய பிரதேசங்கள் என்றால் அதில் மலையக தோட்டப் பாடசாலை மாணவர்களும் உள்ளடக்கப்படவேண்டும். தனிப்பட்ட முறையில் கிராமப்புறங்கள் மட்டும் தெரிவுசெய்யப்படக்கூடாது.

"கிராமப்புறங்களில் இருந்து அலரி மாளிகைக்கு வந்த மாணவர்களின் பாதணிகள் பழையனவாகவும் கிழிந்தும் காணப்பட்டன. அம் மாணவர் கள் முன் வரிசையில் வந்து நிற்கவே சங்கடப்பட்டனர். இது எனது மனதில் பெரும் கவலையை ஏற்படுத்திவிட்டது. அதனால் இம்மாணவர்களுக்கு வருடாந்தம் ஒருசோடி சப்பாத்துக்களை வழங்க முடிவுசெய்துள்ளோம்" என்றார் ஜனாதிபதி.

ஐயா! இந்த மாணவர்களாவது பழைய சப்பாத்துகளுடன் வந்தனர். இன்னும் சில தோட்டப்புற மாணவர்கள் வெறும் காலுடன் பாடசாலை செல்வதைப் பார்க்க முடிகின்றது. இது ஜனாதிபதிக்குத் தெரியாதா? கிராமப்புற மாணவர்களுக்கு வழங்கப்படுவதை நாம் எதிர்க்கவும் இல்லை. கூடாது என கூறவும் இல்லை. ஜனாதிபதியின் இத்திட்டம் வரவேற்கப்பட வேண்டியதும் பாராட்டப்படவேண்டியதும் தான்.

தோட்டப்புறங்களில் கையகலக் காணியோ சொந்தமாக ஒரு குடிசைகூட இல்லாமல் லயன்களில் வாழும் தொழிலாளர்கள் தினக் கூலிக்கே தொழில் செய்கின்றனர். கடும் மழையோ கோரமான வரட்சியோ ஏற்படும்போது தோட்டத்தொழிலாளர்களுக்கு எதுவிதமான நிவாரணமும் வழங்கப்படுவதில்லை. ஆனால், கிராமப்புற விவசாயிகளுக்கு வெள்ளம் வந்தாலும் சரி வரட்சி ஏற்பட்டாலும் சரி அவர்களுக்கு வரட்சி நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.

இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் இரண்டு நாள் மூன்று நாள் வேலைமட்டுமே வழங்கப்படும்போது அரைவயிற்றுக் கஞ்சியைக் குடித்தே வாழ்கிறார்கள். ஆனால் வரட்சி நிவாரணங்கள் இதுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டதாக சரித்திரமே இல்லை. ஜனாதிபதி முன்பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கி உள்ளார். தோட்டப்புறங்களில் காணப்படும் முன்பள்ளிகளைப் பாருங்கள். அங்குள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களே



முன்பள்ளிகளாகவும் இயங்குகின்றன. அங்கே பயிற்றப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இல்லை. குழந்தை பராமரிப்புத் தாதிமார்களே முன்பள்ளி ஆசிரியர்களாகவும் கடமையாற்றுகின்றனர்.

இந்த குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில், தோட்டங்களில் கொழுந்து பறிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களின் ஆறுமாத குழந்தைகள் முதல் ஐந்து வயது சிறுவர் சிறுமிகளும் காணப்படுகின்றனர். அங்கே முன்பள்ளி மாணவர்களுக்கான தனி அறைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தளபாட வசதிகளும் இல்லை.

இந்த முன்பள்ளிகள் பதிவு செய்யப்படாத சிறுவர் பராமரிப்பு நிலையங்களாகவே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதனால் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளிகளுக்குப் பிரதேசசபை, பிரதேச செயலாளர் மற்றும் சமுர்த்தி அதிகாரசபைகள் ஊடாக வழங்கப்படும் அரச உதவிகள் தோட்டப்புற முன்பள்ளிகளுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும். தோட்டப் புறங்களில் காணப்படும் முன்பள்ளிகளும் பதிவு செய்யப்பட வேண்டும். அங்கே பயிற்றப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களும் நியமிக்கப்படவேண்டும்.

முன்பள்ளிகள் இல்லாத தோட்டங்களில் கட்டாயமாக சகல வசதிகளுடனும் கூடிய முன்பள்ளிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஜனாதிபதியின் வரவு செலவுத்திட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் தோட்டப்புற தொழிலாளர்களின் நிலைமை தொட்டுக் காட்டப்படவில்லை.

நாடாளுமன்றத்தில் மலையகத் தலைமைகள் அமைச்சர்களாகவும் பிரதி அமைச்சர்களாகவும் நடாளுமன்ற உறுப்பினர்களாகவும் ஆளும் தரப்பிலும் எதிர்த்தரப்பிலும் இருக்கின்றார்கள்.

இவர்கள் என்ன செய்கின்றார்கள்? ஆடிக்கு ஒருமுறையும் அமாவாசைக்கு ஒரு முறையும் சபைக்கு வருகின்றனர். இப்படியான நேரங்களில் தமக்கு வழங்கப்படும் சில நிமிடங்களில் இதைப் பற்றிப் பேசிவிட்டு தமது கடமை முடிந்துவிட்டதாகக் கருகின்றனர்.

இவர்களுடைய நாடாளுமன்ற உரைகள் தினசரி பத்திரிகைகளில் எப்படியாவது வெளிவந்துவிட்டால் போதும் அதை மக்கள் பார்க்க வேண்டும் . அதுவே போதும். நாம் நாடாளுமன்றத்திலும் பேசிவிட்டோம் பத்திரிகைகளிலும் வந்துவிட்டன என்று மலையகத் தலைமைகள் திருப்தி அடைந்து விடுகின்றனர். தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கின்றதோ இல்லையோ என்ற கவலை இல்லை. எதனையும் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற அக்கறையும் இல்லை. நமது மலையகத் தலைமைகளின் கையாலாகாத தனத்தையும் இயலாமையையும் தோட்ட நிர்வாகங்கள் மட்டுமல்ல ஜனாதிபதியும் நன்கு தெரிந்துவைத்துள்ளார். அரசுக்கு ஆமாம் போடுவதற்கு என்றே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், முத்துசிவலிங்கம், இராதாகிருஸ்ணன், என்பவர்களுடன் பிரதி அமைச்சர் கண்டிஷனுடன் ஒட்டிக்கொண்ட திகாம்பரம், பிரபாகணேசன் என ஒரு கூட்டத்தை தன்பக்கம் வைத்துள்ளார். ஜனாதிபதிக்கு தேவையானபோது இவர்கள் கைஉயர்த்தினால் போதும். அந்த சமயத்தில் இவர்களுக்கு இராஜமரியாதை. காரியம் முடிந்தபின் கறிவேப்பிலை போன்று தூக்கி எறியப்பட்டு விடுகின்றனர்.

முன்பு ஆரம்பத்தில் இருந்து வக்காலத்து வாங்கி வந்தவர் ஆர். யோகராஜன் இப்பொழுது எதிர்க் கட்சியில் இருக்கும்போது அடிக்கடி தோட்டத் தொழிலாளர்களைப் பற்றிப் பேசுகின்றார். இன்னும் ஒருவர் மின்னல் ரங்கா. இவர் ஒரு நல்ல விமர்சகர் ஜனாதிபதியினதும் அமைச்சர்களினதும் செல்லப்பிள்ளை. அதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர். இவர் மலையகத்தில் காணப்படும் இடர்பாடுகளையும், மலையகத் தலைவர்களின் செயல்களையும் படம்போட்டுக்காட்டிவருகின்றார். ஆனால், இவரும் கண்ணாடி வீட்டுக்குள் இருப்பவர்தான். மக்கள் இவரைப் பற்றி விமர்சிப்பதையும் சிறிது அறிந்துகொள்ளவேண்டும்.

கலைஞர் கருணாநிதி பராசக்தி படத்தில் ஒரு வசனம் எழுதி உள்ளார் அதாவது, "அரகரா என்ற கோசம் ஆண்டவனுக்கு கேட்டால் போதாது அது அரசாங்கத்திற்கு கேட்கவேண்டும்" என்று. இதில் எவ்வளவு பெரிய உண்மை காணப்படுகின்றது. இதனை நமது தலைமைகள் என்று உணரப் போகின்றனர்.

> *இந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாரத்தில் இரண்டு நாள், மூன்று நாள் வேலை மட்டுமே வழங்கப்படும் போது அரைவயிற்றுக் கஞ்சியைக்குடித்தே வாழ்கிறார்கள். ஆனால் வரட்சி நிவாரணங்கள் இதுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டதாக சரித்திரமே இல்லை. ஜனாதிபதி முன்பள்ளிகளுக்கு முன்னுரிமை வழங்கி உள்ளார். தோட்டப் புறங்களில் காணப்படும் முன்பள்ளிகளைப் பாருங்கள். அங்குள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்களே முன்பள்ளிகளாகவும் இயங்குகின்றன. அங்கே பயிற்றப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் இல்லை. குழந்தை பராமரிப்புத் தாதிமார்களே முன்பள்ளி ஆசிரியர்களாகவும் கடமையாற்றுகின்றனர்.*

நீங்கள் தோட்டங்களில் தனித்தனி கூடாரங்களை அடித்துக்கொள்ளுங்கள் அவர்களின் சந்தாவைப் பெற்றுக்கொள்ளுங்கள். ஆனால் உங்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்பை தவறவிட்டுவிடாதீர்கள். முழு மலையகத்தையும் உங்களால் ஒன்று திரட்ட முடியாது. ஒன்றுபடவும் விடமாட்டீர்கள். உங்களுடைய சமுத்தாயத்தின் விடிவுக்கு நீங்களேதான் எதிரிகள்.

எனவே, நாட்டின் அதி உயர் பீடமான நடாளுமன்றத்தின் முன்பக்கத்தில் இருக்கும் மலையகப் பிரதிநிதிகள் சமுதாய சமூக நலனைக்கருதி ஒன்றுபடுங்கள். வர்க்க ரீதியாக ஓரணி திரளுங்கள். மலையக மக்களின் குறைபாடுகளை ஒரே அணியாகக்கூடி ஜனாதிபதியிடமும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும் நேரடியாகப் பேசக்கூடிய சகல வசதிகளும் வல்லமையும் உங்களிடம் உண்டு. உங்களுக்கு கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டு விடாதீர்கள்.

ஒரு முன் உதாரணமாக நமது சகோதரர்களான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை எடுத்துக்கொள்ளுங்கள். தமது சமூகத்தில் ஏதாவது ஒரு பாதிப்பு அல்லது பிரச்சினை ஏற்பட்டுவிட்டால் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் சமுதாய அக்கறையுடன் ஒன்று கூடி ஆராய்ந்து ஜனாதிபதியிடமே சென்றுவிடுகின்றனர். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை செயலில் காட்டி உள்ளனர்.

ஆனால், நமது மலையகத் தலைமைகளுக்கு மட்டும் ஏன் இந்த சமுதாய உணர்வும் அக்கறையும் ஏற்படுவதில்லை என்பது தான் வேதனையாக இருக்கின்றது. உங்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள். உங்கள் மத்தியில் காணப்படும் போட்டா போட்டிகள் கருத்து முரண்பாடுகள் மற்றும் கொள்கைகள் என்பனவற்றை ஒருபக்கம் மூட்டை கட்டி வைத்துவிட்டு. உங்களையே நம்பி இருக்கும் அப்பாவித் தொழிலாளர்களின் விடிவுக்காக ஒன்றுபடுங்கள். நாடாளுமன்றத்தின் மூலமாவது ஏனைய சமூகத்தவர்களுக்கு கிடைக்கும் நன்மைகளை மலையகத் தொழிலாளர்களுக்கும் பெற்றுக்கொடுங்கள். தொழிலாளர்கள் உங்களுக்கு சிலைவைத்துக் கொண்டாடுவார்கள்.

***



# பாரதிய ஜனதா தலைவர் மீது ஊழல் குற்றச்சாட்டு!

பாரதிய ஜனதா கட்சியின் தற்போதைய தலைவரான நிதின் கட்காரி மீதான புதிய ஊழல் குற்றச்சாட்டுகளை இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான அக்கட்சியை பெரும் தர்மசங்கடத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றன. மஹாராஷ்டிரா மாநிலத்தில் 1994-1999வரை பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது பல்வேறு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களை குறைந்த விலைக்கு வழங்கி அதற்கு கைம்மாறாக தனக்குச் சொந்தமான 'பூர்த்தி பவர் அன்ட் சுகர்' நிறுவனத்தில் அந்த ஒப்பந்ததாரர்களை முதலீடுசெய்து முறையற்றவகையில் அரச நிதியை சுரண்டினார் என்பதே கட்காரி மீதான குற்றச்சாட்டு.

ஆச்சரியப்படவைக்கும் விதமாக பாரதிய ஜனதாவின் பரமவைரியான காங்கிரஸ் கட்சி இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. இவ்விரு



கட்சிகளையும் ஊழல் கட்சிகள் எனச்சாடிவரும் சமூக ஆர்வலர் அர்விந்த் கேஜ்ரிவால் தான் இந்தக் குற்றச்சாட்டுகளை முதலில் தெரிவித்துள்ளார். கட்காரி பெரும் பணக்காரர் என்பது இவ்வருடம் அவர் தனது மகனுக்கு நடத்திய ஆடம்பரத் திருமணத்திலிருந்து தெரிந்தது. மேலும் முன்னொருபோதும் இருந்திராத வகையில் பி.ஜே.பி.கட்சியின் தலைமைப் பதவியை தொடர்ந்து இரண்டு தடவை வகிக்க கட்காரிக்கு வழிவிடும் வகையில் கட்சி யாப்பில் கூட மிக அபூர்வமான திருத்தமும் சமீபத்தில் - ஊழல் குற்றச்சாட்டு எழுமுன் - செய்யப்பட்டது.

இதற்கு முன்பும் பி.ஜே.பி.தலைவர் பதவியில் இருந்த பங்காருலக்ஷ்மன் என்பவர் லஞ்சம் பெற்றபோது கையும்மெய்யுமாக பிடிபட்டு கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது. இப்போது மற்றொரு தலைவர் மீதும் அதேமாதிரி குற்றச்சாட்டு எழுந்திருப்பதால் மக்கள் பி.ஜே.பி.யின் முகத்தில் காறித்துப்பும் அளவுக்கு நிலைமை உள்ளது. இத்தனைக்கும் ஆளும் காங்கிரஸ்தான் ஊழல்கட்சி என ஊளைக்கூச்சலிடும் பி.ஜே.பி.க்கு இது இரட்டை அடியேதான். ஏற்கனவே கர்நாடக மாநிலத்தில் ஆட்சியிலுள்ள பி.ஜே.பியிலும் முதல்வராக இருந்த பி.எஸ் எதியூரப்பாவின் ஊழல் திருகுதாளங்கள் பி.ஜே.களின் இமேஜை ஏற்கனவே குழிதோண்டிப் புதைத்திருந்தன. இதுபோதாதென்று வடக்கே உத்தரப்பிரதேச மாநிலத்தில் முன்னால் முதல்வர் மாயாவதி தன் கட்சியிலிருந்து துரத்திவிட்ட ஊழல் அமைச்சரான பாபுசிங் குஷ்வாஹா என்பவரை பி.ஜே.பி இருகரம் நீட்டி வரவேற்று வகையாக வாங்கிக் கட்டிக்கொண்டது. உத்தரபிரதேசத்தில் பி.ஜே.பி பெரும் வீழ்ச்சியை கண்டுவருவதால் கட்சியை வலுப்படுத்த இந்த ஊழல்வாதியை பி.ஜே.பி சேர்த்துக்கொள்ள முயன்றது பிசுபிசுத்துப்போனது.

இன்றைய சூழலில் ஆளும் காங்கிரஸ் கட்சியின் ஊழல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவரும் தருணத்தில் ஆட்சி கவிழும் அளவுக்கு பொதுமக்கள் எதிர்ப்பைத் திரட்டி அதற்கு தலைமை தாங்கி ஊடகங்களின் உதவியையும் பெற்று செயற்பட்டிருக்க பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பி.க்கு சிறந்த வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் அதை உச்சநிலையில் பயன்படுத்துவதற்கு பெரும்தடையாக பி.ஜே.பி.யின் தலைவரான நிதின் கட்காரியே ஊழல் புகாரில் சிக்கிக் கொண்டுள்ளார். அவர் பதவி விலகவேண்டுமென பல பி.ஜே.பி.மூத்த தலைவர்கள் வெளிப்படையாக கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இந்தியாவின் நம்பர்1 குற்றவியல் வழக்கறிஞரும் பி.ஜே.பி.யின் ராஜ்யசபா எம்.பியுமான ராம் ஜேத்மலானி பகிரங்கமாக கட்காரி பதவி விலகவேண்டுமென கோரியுள்ளார். இவரை ராஜ்யசபா எம்.பியாக்கியவர் குஜராத் முதல்வர் நரேந்திரமோடியே. எனவே, கட்காரிக்கு எதிராக ஜேத்மலானி குரல் எழுப்ப நரேந்திரமோடி பின்னணியில் இருந்திருக்கக் கூடுமென ஊகங்கள் எழுந்துள்ளன. தன்னைப் பிரதம வேட்பாளராக அறிவிக்க கட்காரி தயங்குவதால் அவருக்கு 'செக்' வைக்க மோடி இவ்வாறு செயற்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

இதுதவிர பி.ஜே.பி.யின் அதிமூத்த தலைவரும் சகலரின் மரியாதைக்கும் உரியவரான அத்வானி, கட்காரி குற்றமற்றவர் என இன்னும் வெளிப்படையாகக் கூறவில்லை. கட்காரி மீதான குற்றச்சாட்டு குறித்து பி.ஜே.பி.யின் மூத்த


மஹாராஷ்டிராவில் காங்கிரசின் பிரிதிவிராஜ் சவரன் முதல்வராக இருப்பதும் முக்கிய விடயமாகும். நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோதும் இப்போது மன்மோகன் மீண்டும் பிரதமரானபோதும் டில்லியில் பிரதமர் அலுவலக இணைஅமைச்சராக இருந்து அரசியல் நிர்வாகத்தை அக்குவேறு ஆணிவேறாக பிரித்தகற்றி தேறியவர் சவான் ஆவார். அந்த மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் பல்வேறு குழறுபடிகள் இருந்ததால் அவற்றைச் சரிசெய்யவே டில்லியில் வாழ்ந்து பழகிய சவானை சோனியாகாந்தி விசேட கடமையை ஒப்படைத்து மும்பைக்கு அனுப்பிவைத்திருந்தார். சோனியாகாந்தி எதிர்பார்த்தது போலவே காங்கிரசின் ஊழல்களை மறைக்க எதிர்க்கட்சிகளின் ஊழல்களை கனகச்சிதமாக கிண்டி வெளியே எடுத்துவிட்டுள்ளார் சவான் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

மஹாராஷ்டிர மாநிலத்தில் காங்கிரசின் ஆளும் கூட்டணிக்கு இருந்தவாறே காங்கிரசுக்குக் குடைச்சல் கொடுத்துவரும் சரத்பவாரின் கட்சியினரின் ஊழல்களும் சமீப மாதங்களில் வெளிப்படுத்தப்பட்டன. இதனால் சரத் பவாரின் மருமகன் அஜித் பவா தனது துணைமுதல்வர் பதவியைக் கூட ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. இப்போது அடுத்த கட்டமாக பி.ஜே.பி.தலைவர் கட்காரியின் ஊழல்கள் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்பு புரிந்த ஊழல் இப்போதுதான் வெளியே வந்துள்ளது. அதுவும் கடந்த 13வருடங்களாக காங்கிரஸ்தான் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வந்துள்ளது.

***லோக்சபா எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜேட்லி என சகல மூத்த தலைவர்கள் கலந்துகொண்டு கூடிப்பேசி கட்காரி மீதான குற்றச்சாட்டு சட்டரீதியாக நிரூபிக்கப்படும்வரை அவர் பி.ஜே.பி.தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டியதில்லை என அறிவித்தனர். அப்போதும் அத்வானி அறிக்கை எதுவும் விடுக்கவில்லை. அத்வானியை சமாளிக்க நவம்பர் 8ம் திகதி அவரது பிறந்தநாளன்று கட்காரி நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.***

தலைவர்கள் டில்லியில் கூடி ஆராய்ந்த கூட்டத்திலும் அத்வானி பங்கேற்கவில்லை. இக்கூட்டத்தில் லோக்சபா எதிர்க்கட்சித்தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவர் அருண் ஜேட்லி என சகல மூத்த தலைவர்கள் கலந்துகொண்டு கூடிப்பேசி கட்காரி மீதான குற்றச்சாட்டு சட்டரீதியாக நிரூபிக்கப்படும்வரை அவர் பி.ஜே.பி.தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டியதில்லை என அறிவித்தனர். அப்போதும் அத்வானி அறிக்கை எதுவும் விடுக்கவில்லை. அத்வானியை சமாளிக்க நவம்பர் 8ம் திகதி அவரது பிறந்தநாளன்று கட்காரி நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார். பி.ஜே.பி.தலைவராக இரண்டாவது தடவையாகவும் பதவியேற்க படாதபாடுபட்டு கட்காரி கட்சியின் ஒழுங்குவிதிகளிலேயே மாற்றம் செய்வித்தார். இது போதாதென்று மோடியின் இணக்கத்தைப்பெற அவரது எதிரியான சஞ்சய் ஜோஷியின் பதவியையும் கட்காரி பறித்து பெரும் பழிச்சொல்லுக்கும் ஆளானார். இவ்வளவு நடந்தும் இரண்டாவது முறை தலைவராவதற்கு புதிய தடையாக ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஊழலில் திளைறும் காங்கிரசை ஒருகை பார்க்க அத்வானி முதலியோர் தயாரான வேளை அவர்களுக்கும் இதனால் பெரும் இக்கட்டும் தர்மசங்கடமும் ஏற்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். அத்வானியும் சுஷ்மா ஸ்வராஜும் ஊழலில் அகப்படாத சுத்தமான தலைவர்களெனெ பெயர் எடுத்தவர்களாவர். அவர்களின் அனுதாபமும் ஆதரவும் இன்றேல் கட்காரியால் கட்சித் தலைவர் பதவியில் தொடரமுடியாது. கட்சிக்குள் அவரது எதிரிகள் ஓரிருவர் உள்ளனர். அவர்களே இவ்விடயத்தை சமூக ஆர்வலர் கெஜ்ரிவாலிடம் போட்டுக் கொடுத்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இது மட்டுமன்றி கட்காரியின் சொந்த மாநிலமான



எனினும் இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் முதல்வர்கள் கட்காரியின் ஊழலை கண்டும் காணாதது போல் இருந்தனரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. அவ்வகையில் இன்றைய முதலமைச்சர் சவான் தனது 'க்ளீன் இமேஜ்' என்ற ஆயுதத்தை பாவித்து தன் கட்சிக்குள்ளும் கூட்டணிக் கட்சியிலும் தன் எதிரியான பி.ஜே.பி.க்குள்ளும் ஊழல்களை வெளிப்படுத்துவது ஒரு வகையில் பொது நன்மைக்கு பலம் சேர்ப்பதாகும். கட்காரியின் முகமூடி கிழிந்தது என காங்கிரசின் தலைவர்கள் ஆவேசமாகக் கூறியுள்ளனர். எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் காங்கிரசை திணறடிக்கத் தயாராகிவந்த அத்வானி இன்று கட்காரியால் தனது திட்டங்கள் தவிடுபொடியாகிவிட்டதாக கூறிவருகிறார். எதிர்வரும் வாரங்களில் கட்காரி பதவி விலகுவது தவிர்க்கமுடியாததாகி விடலாம். கட்காரியை வளர்த்த ஆர்.எஸ்.எஸ், தோழமை கட்சியான சிவசேனா முதலியனவும் கட்காரியை காப்பாற்ற முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அபிஜித்**



# பித்தன் பதில்கள்

# தாலி பெண்ணுக்கு வேலியா?

**து.கண்ணன், பூநகரி.**
கே:– உண்மையில் தாலி ஒரு பெண்ணுக்கு வேலிதானா?
ப:–அது வேலிக்கு மதிப்பளித்து விசுவாசம் காட்டும் பெண்ணைப் பொறுத்தது.



**இ.ரவிச்சந்திரன், அச்சுவேலி.**
கே:– மனைவியை ஏன் பிராணநாயகி என்ற பெயரிலும் குறிப்பிடுகிறார்கள்?
ப:–ஒரு வேளை பிராணனை வாங்கும் நாயகி என்ற கருத்தில் அப்படிச் சொல்லி வைத்திருக்கலாம் என்று எனது அனுபவம் சொல்கிறது.



**மு.மயில்வாகனம், புத்தூர்.**
கே:– இப்போதெல்லாம் ஊரில் பரவலாகத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. பாதுகாப்புக்காக நாய் வளர்க்கலாமா பித்தரே?
ப:–கவனம் அண்மையில் கூட இரண்டு வீடுகளில் நாய்களே திருட்டுப் போயுள்ளதாகக் கேள்விப்பட்டேன். எதற்கும் யோசித்து முடிவு செய்யும்.



**ச.தில்லைநடராசா, திருமுறிகண்டி.**
கே:– அனுபவப் பாடம் என்பதன் விளக்கம் என்ன பித்தரே?
ப:–ஒரு விதத்தில் சொல்லப்போனால், ஒவ்வொருவரும் தாம் விடுகின்ற பிழைகளுக்கு தரும் கௌரவமான பெயரே அனுபவப் பாடம் என்று கூறலாம்.



**வ.அரியநாயகம், வரணி.**
கே:– புகைத்தல் உடம்புக்குக்கேடு என்று தொலைக்காட்சியில் ஒளிபரப்புகிறார்கள். பத்திரிகைகள் பயமுறுத்துகின்றன. ஆனாலும் என்னால் புகைத்தல் பழக்கத்தைக் கைவிட முடியவில்லையே? உமது ஆலோசனை என்ன பித்தரே?
ப:–பேசாமல் தொலைக்காட்சி பார்ப்பதையும் பத்திரிகைகள் வாசிப்பதையும் நிறுத்திவிடுமேன்? பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடும்.





**கோ. திருமாவளவன், வவுனியா.**
கே:– ஒருபெண்ணைக் காதலித்துப் பின் கல்யாணம் செய்து கொள்வதா? அல்லது கல்யாணம் செய்தபின் காதலிப்பதா சுவாரஸ்யம் தரும்?
ப:–கல்யாணத்துக்கு முன் காதலிக்கும்போது இடைநடுவில் சிக்கல் வந்தால் மெதுவாக கழற்றி விட்டு விடலாம். கல்யாணத்துக்குப் பின் என்றால் தப்பித்துக்கொள்ள 'சான்ஸ்'ஸே இல்லை.



**த.திருமகள், பூநகரி.**
கே:– இன்றைய உலக நடப்பில், உண்மையான பாசம் எது? போலியான பாசம் எது என்று இனம்காண முடியுதில்லையே?
ப:–நீங்கள் வசதி குறைந்தவராயிருந்து உங்களைச் சுற்றியிருப்போர் உங்கள் மீது பற்றுப் பாசம் காட்டினால் அது உண்மையானது. நீங்கள் வசதிவாய்ப்புப் படைத்திருந்து சுற்றியிருப்போர் பற்று பாசம் காட்டினால் அது வேஷம்.

**து.இரவீந்திரன், யாழ்ப்பாணம்.**
கே:– தற்காலப் பெண்களில் சிலர் தமிழ்க் கலாசாரத்துக்குப் பொருத்தமில்லாத விதத்தில் ஆடை அணிவது குறித்து என்ன சொல்கிறீர் பித்தரே?
ப:–பெண்களின் ஆடை அலங்காரங்கள் காண்பவர்களின் மனதை அரிக்காமல் இருக்கும் விதத்தில் அமையவேண்டும். ஒரு பெண்ணைப் பார்க்கும்போது மனது கௌரவம் கொடுக்க எண்ணும் விதத்தில் அவளது ஆடை அலங்காரம் அமைவது அவசியம்.



**ப.கண்ணன், திருகோணமலை.**
கே:– தந்தைசொல்மிக்க மந்திரமில்லை என்பது முதுமொழி. எனது தந்தையோ தண்ணிபோட்ட வேளைகளில் தான் எனக்கு புத்திமதி கூறமுயல்கிறார். அதையெல்லாம் மந்திரமாக ஏற்று நடக்க இயலுமா?
ப:–தண்ணிபோட்ட வேளையில் கூறும் அறிவுரையை போதை தெளிந்த பின்னரும் கூறுகிறார் என்றால்அது நிச்சயம் ஏற்று நடக்கத்தக்க, கடைக் கொள்ளவேண்டிய அறிவுரையாகத்தான் இருக்கும்

## சொற்சிலம்பம் போட்டி இல: 548

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | | ■ |
| 6 | | ■ | 7 | | | ■ | 8 |
| 9 | | 10 | | ■ | 11 | 12 | |
| ■ | 13 | | ■ | 14 | | | ■ |
| 15 | ■ | 16 | | | ■ | 17 | 18 |
| 19 | 20 | | ■ | 21 | 22 | | |
| 23 | | ■ | 24 | | | ■ | |
| 25 | | | | | ■ | 26 | |

அனுப்புபவர் பெயர் :..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. உடம்பின் பின்பகுதி
02. சீனி தயாரிக்கப்பயன்படும் ஒரு பயிர் வகை
03. துச்சாதனன் களைய முற்பட்டது இதை
04. வசிக்க
05. அறுப்பது இதனால்
08. பீடை
10. கலாசாரம்
12. பெண்கள் வயதுக்கு வருதலை இப்படிக்கூறுவர்
14. விசுவாசித்தல்
15. இழிவு செய்
18.காப்பியம்
20.சிறிய பாத்திரம்
22.சிரசு
24.சமய

### இடமிருந்து வலம்

01. கடலும் ஆறும் கலக்கும் இடம்
06. இரும்பில் பிடிப்பது
07. வயது போய் முதிர்ந்த நிலைமை
09. கூட்டம்
11. உரம்
13. காயம்
14. எங்களை
16. உறவுகளை இணைத்து வைத்திருப்பது
17. பொருந்தா
19. தலைமயிர் உச்சி
21. மகள்
23. கல்லுக்குப் பிந்தியது
24. மழலை
25. அமுக்குதல்
26. இத்தாலியின் தலைநகர்

## போட்டி இல. 546 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** நா.ஹஜந்தினி, எல்டொப்ஸ் எஸ்டேட், பொகவந்தலாவ.

**2ஆம் பரிசு** திருமதி சுரேகா அனுரமணன், வியாபாரி மூலை, பருத்தித்துறை.

**3ஆம் பரிசு** திஸ்ஸ டிலாந்தி, கானடி வீதி, களுதாவளை – 01, களுவாஞ்சிக்குடி.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) திருமதி எம்.ஆர் பாலேந்திரா,**
இல 91/6 குளோப் மில் வீதி.
பண்டாரிக்குளம், வவுனியா.

**(2) பொ.பாலசுப்பிரமணியம்,**
பிரதான வீதி,
தம்பிலுவில்- 01.

**(3) சி.சௌமியா,**
அளம்பில்,
முல்லைத்தீவு.

**(4) ஜெயரட்ணசிங்கம் ஜெசிந்தா,**
இல-26/3, வளாக ஒழுங்கை.
திருநெல்வேலி.

**(5) திருமதி ஈ.தவமணி,**
இல 12 5/1 கொலிங்வூட் பிளேஸ்.
கொழும்பு - 06.

**(6) சி.உதயகுமார்,**
கைதடி மேற்கு,
கைதடி.

**(7) க.தில்லையம்பலம்,**
கதிர்காம கோவிலடி,
வதிரி,
கரவெட்டி.

**(8) கே.எப் சுபானி,**
இல : 14.
புளியடி குறுக்கு வீதி.
ஏறாவூர் - 06.

## சொற்சிலம்பம் போட்டி இல. 548

சொற்சிலம்பம் 548 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 12 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 546 ற்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
01. பிரமுகர், 02. மாதர், 03.தலைச்சன், 04. கங்காரு, 05. திகில், 09.திறை, 10.சிற்பம், 14.கும், 15.இடம், 16.சதுரம், 18.அகர, 19. பிதா, 20.புசி, 21. நதி

**இடமிருந்து வலம்**
01.பிரமாதம், 04. கதி, 06. தல்லை, 07.அங்கி, 08.முதிர்ச்சி, 11. கால், 12.கறை, 13. சற்குரு, 15.இன்பம், 17.கட, 18. அது, 19. பிரம்பு, 21. நகர, 22. தாவு, 23. சித்திரம்

**தொழில்நுட்ப தவறு காரணமாகவே கடந்த 'பித்தன் பதில்' பகுதியில் சில கேள்வி பதில்கள் இரண்டு தடவைகள் பிரசுரமாகிவிட்டன என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.**



# விளையாட்டு

### மாற்று வீரருக்கு ஆதரவை வழங்குகிறார்

# ஜே.பி.டுமினி



அவுஸ்ரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ற் போட்டியின் போது காயமடைந்துள்ள தென்னாபிரிக்க அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ஜே.பி.டுமினி தனக்குப் பதிலாகத் தெரிவாகியுள்ள வீரருக்குத் தனது வாழ்த்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

கிட்டத்தட்ட 6 மாதங்களுக்குக் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ள நிலையில் ஜே.பி.டுமினி இற்குப் பதிலாக டீன் எல்கர் தென்னாபிரிக்க அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.


இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள ஜே.பி.டுமினி,

தனக்குப் பதிலாக அடுத்த போட்டியில் பங்குபற்றவுள்ள வீரருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

கிடைக்கும் வாய்ப்பை தெரிவாகும் வீரர் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்த ஜே.பி.டுமினி, இவ்வாறான வாய்ப்புக்கள் அடிக்கடி கிடைக்கப்பெறுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தனக்குப் பதிலாக அடுத்த போட்டியில் பங்குபற்ற வாய்ப்புள்ள வீரர்களான டீல் எல்கர், பஃப் டு பிளெஸிஸ் அல்லது விக்கெட் காப்பாளர் தமி சொலக்கிலே ஆகியோர் மிகத் தரமான வீரர்கள் எனத் தெரிவித்த ஜே.பி.டுமினி அவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைப்பது மிகவும் பொருத்தமானது எனவும் தெரிவித்துள்ளார்.

## சாதனையை முறியடித்தார்




ஒரு ஆண்டில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார் ஆர்ஜென்டினாவின் லியோனல் மெஸ்சி.

மாட்ரிட் நகரில் நடந்த ஸ்பானிஷ் 'லா லிகா' உள்ளூர் கால்ப்பந்து லீக் போட்டியில் பார்சிலோனா, மாலோர்கா அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய பார்சிலோனா அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் பார்சிலோனா அணி இதுவரை விளையாடிய 11 லீக் போட்டியில் 10 வெற்றி, ஒரு டிரா உட்பட 31 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

இப்போட்டியில் இரண்டு கோல் அடித்த பார்சிலோனா அணியின் ஆர்ஜென்டினா வீரர் லியோனல் மெஸ்சி, இந்த ஆண்டு இதுவரை விளையாடிய உள்ளூர் மற்றும் சர்வதேச போட்டிகளில் மொத்தம் 76 கோல் அடித்துள்ளார்.

இதன்மூலம் ஒரு ஆண்டில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் பிரேசில் வீரர் பீலேவை பின்தள்ளி இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார்.

கடந்த 1958ல் சான்டோஸ் மற்றும் பிரேசில் அணிக்காக விளையாடிய பீலே 75 கோல் அடித்தார்.

மெஸ்சி இன்னும் கூடுதலாக 10 கோல் அடிக்கும் பட்சத்தில், ஜேர்மனி வீரர் ஜெர்டு முல்லரை பின்தள்ளி முதலிடம் பிடிக்கலாம்.

பேயர்ன் முனிக் மற்றும் மேற்கு ஜேர்மனி அணிக்காக விளையாடிய முல்லர், கடந்த 1972ம் ஆண்டு 85 கோல் அடித்து முதலிடத்தில் உள்ளார்.

## சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார் நோவாக் ஜோகோவிச்



ஏடிபி டென்னிஸ் தொடரில் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார்.

இலண்டனில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரண்டாம் நிலை வீரரான சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரரை அவர் எதிர்கொண்டார்.

இருவரும் மாறிமாறி புள்ளிகளை வென்றதால் தொடக்கம் முதலே ஆட்டம் பரபரப்பாகவே இருந்தது.

முதல் செட்டை ஜோகோவிச் 7-6 என்ற புள்ளிக்கணக்கில் வென்றதையடுத்து இரண்டாவது செட்டில் பெடரர் கூடுதல் வேகம் காட்டினார்.

இருப்பினும், அவரது சவாலை முறியடித்த ஜோகோவிச் 7-5 என்ற செட் கணக்கில் இரண்டாவது செட்டையும் வென்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இந்த ஆண்டு ஜோகோவிச் வென்ற 6 வது சர்வதேச சாம்பியன் பட்டம் இதுவாகும்.

## இந்திய தோசை சூப்பர்



இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, இந்தியாவின் தோசையை சுவைத்துப் பார்த்துள்ளார்.

ரஷ்ய டென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா, முதன் முதலாக இந்தியா வந்துள்ளார்.

தன் இந்திய சுற்றுப்பயணம் குறித்து அவர் பேட்டியளிக்கையில்,

"இந்தியாவில் எனக்கு ஏராளமான ரசிகர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்ததில் பெரு மகிழ்ச்சியாக உள்ளது.

டென்னிஸில் பிசியாக இருக்கும் எனக்கு தற்போது தான் கொஞ்சம் ஓய்வெடுக்க நேரம் கிடைத்ததனால் இங்கு வர முடிந்தது.

இங்கு வந்திறங்கியதும் எந்த இந்திய உணவு வகையை சுவைக்கலாம் என்று நினைத்த போது தோசை சாப்பிட்டேன்.

அதன் சுவை நன்றாக இருந்தது.

எனக்கு இந்திய மக்கள் மற்றும் கலாசாரம் பிடித்துள்ளது என்றார்.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி சம்பியன்

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் 16 வயது பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்ப்பந்தாட்ட போட்டிகள் மட்டுவில் சந்திரமௌலிசவரா கல்லூரியில் நடைபெற்றது.

மேற்படி போட்டிகளின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலில் நடைபெற்ற அரையிறுதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியினை எதிர்த்து நாவற்குழி மகாவித்தியாலயம் மோதியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் சாவகச்சேரி றிபேக் கல்லூரியை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் மோதியது. இந்தப் போட்டியில் சாவகச்சேரி றிபேக் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் சாவகச்சேரி றிபேக் கல்லூரியும் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் பின்கள வீரர்களினால் தடுக்கப்பட்டது. இருந்தும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி கோல் ஒன்றினைப் பெற்று தென்மராட்சி வலய சம்பியனாகியது.

## Dual Sim வசதியுடன் Galaxy Note II



கைப்பேசி உற்பத்தியில் புரட்சி செய்து வரும் Samsung நிறுவனமானது தற்போது Dual Sim வசதியுடன் கூடிய Galaxy Note II கைப்பேசிகளை அறிமுகப்படுத்த தயாராகின்றது.

முதன் முறையாக சீனாவில் அறிமுகப்படுத்தப்படவிருக்கும் இக்கைப்பேசிகளில் Dual Sim வசதி புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் ஒன்று GSM வலையமைப்பினைக் கொண்டதாகவும், மற்றையது ஸீம்னிபு வலையமைப்பைக் கொண்டதாகவும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுதல் விசேட அம்சமாகும்.

இவை தவிர 1280 x 720 Pixels Resolution உடையதும், 5.5 அங்குல அளவுடையதுமான Super AMOLED MultidTouch தொழில்நுட்பத்தில் அமைந்த தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 1.6GHz வேகத்தில் செயலாற்றவல்ல Processor - இனையும் கொண்டுள்ளது.

மேலும் 8 Megapixels உடைய பிரதான கமெரா மற்றும் 1.9 Megapixels கொண்ட துணைக் கமெரா ஆகியவற்றையும் கொண்டுள்ளன. இவை 16GB, 32GB மற்றும் 64GB கொள்ளளவுடைய சேமிப்புக் கொள்ளவுடைய பதிப்புக்களாக வெளியிடப்படவுள்ளன.

## பேஸ்புக் அறிமுகப்படுத்தும் புத்தம் புதிய வசதி

பல்வேறு சமூக வலைத்தளங்களுக்கு மத்தியில் அசைக்க முடியாத அரசனாகத் திகழும் பேஸ்புக் இணையத்தளமானது தனது பயனர்களுக்காக Social Plus எனும் புத்தம் புதிய வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதாவது Social Plus எனும் நீட்சியினை நிறுவிக் கொள்வதன் மூலம் பேஸ்புக் தளத்தின் தோற்ற அம்சங்களை விரும்பியவாறு மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

Google Chrome, Mozilla Firefox மற்றும் Safari உலாவிகளுக்காக வெளியிடப்பட்டுள்ள இந்நீட்சியின் உதவியுடன் அசைக்கக்கூடிய Chatting Window, Album slideshow, Picture preview, Dislike Button போன்ற பல்வேறு வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தவிர Profile Theme இனை மாற்றியமைக்கக்கூடிய வசதியும் காணப்படுகின்றது. இதற்காக 500 வரையான தீம்களும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## அடுத்த ஆண்டு வெளியாகும் அப்பிளின் ஐபோன் 5S

அப்பிளின் புதிய பதிப்பான ஐபோன் 5 அண்மையில் வெளியாகி மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்தது.

இந்நிலையில் அந்நிறுவனமானது அடுத்த ஸ்மார்ட் போனை தயாரிக்கும் முதற்கட்ட பணிகளை ஆரம்பிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கு ஐபோன் 5S என பெயரிட்டுள்ளதாகவும். சோதனைத் தயாரிப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் வணிக நோக்கிலான தயாரிப்பு அடுத்த வருடம் முதற்காலாண்டு பகுதியில் தொடங்கும் என்றும், அடுத்த ஆண்டு ஜூன் அல்லது செப்டம்பரில் அறிமுகப்படுத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



## தரவிறக்கத்தில் சாதனை படைத்த விண்டோஸ் 8

மைக்ரோசொப்டின் விண்டோஸ் 8 வெளியான சில நாட்களிலேயே 40 லட்சம் Windows 8 License Download செய்யப்பட்டதாக மைக்ரோசொப்ட் தலைமைஅதிகாரி ஸ்டீவ் பால்மர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், இந்த எண்ணிக்கை தனி நபர்கள் தரவிறக்கம் செய்த உரிமங்களின் எண்ணிக்கை தான். நிறுவனங்கள் பல கோடிக்கணக்கான உரிமங்களை பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஓராண்டுக்குள் 40 கோடி புதிய சாதனங்கள் விண்டோஸ் 8 சிஸ்டத்தில் இயங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதே போன்று விண்டோஸ் 7, 2009ஆம் ஆண்டில் வெளியான பின்னர் 70 கோடி பதிப்புகள் விற்பனையானமை குறிப்பிடத்தக்கது.




## புதிய ஆன்ட்ராய்டு டேப்லெட்டை வழங்கும் ஜென்போக்கஸ்




சென்போக்கஸ் நிறுவனம் சமீபத்தில் ஒரு புதிய குறைந்த விலை அன்ட்ராய்ட் டேப்லெட்டைக் களமிறக்கி இருக்கிறது. இந்த புதிய டேப்லெட்டிற்கு மைசென்டேப் 708பி என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்திய விலையில் ரூ.6000க்கு கிடைக்கும் இந்த டேப்லெட் பல சூப்பரான தொழில் நுட்ப வசதிகளுடன் வருகிறது.

குறிப்பாக இந்த 708பி டேப்லெட் அன்ட்ராய்ட் ஐசிஎஸ் இயங்கு தளத்தில் வருகிறது. மேலும் இந்த டேப்லெட்டில் சிங்கிள் கோர் சிபியு, 1.2 ஜிஹெர்ட்ஸ் மற்றும் மாலி 400 ஜிபியு ஆகியவை இருப்பதால் இந்த டேப்லெட் அசுர வேகத்தில் இயங்கும் என்று நம்பலாம். இந்த ரேம் மட்டும் 512எம்பி அளவில் வருகிறது.

இந்த டேப்லெட்டில் இருக்கும் 7.5 பொயிண்ட் அளவிலான மல்டி டச் திரை மிகவும் துல்லியமாக இருக்கும். அதோடு இதன் 4ஜிபி சேமிப்பை 32ஜிபி அளவிற்கு விரிவுபடுத்த முடியும். இணைப்பு வசதிகளுக்காக இந்த டேப்லெட்டில் வைபை மற்றும் 3ஜி டொங்குள் வசதிகளும் உள்ளன.

இந்த டேப்லெட்டில் ஆங்கிரி பேர்ட்ஸ், ப்ரூட் நிஞ்சா, ப்ளான்ட்ஸ் விஎஸ் சாம்பிஸ் மற்றும் டிக்ஸ்னரி போன்ற கேமிங் அப்ளிகேசன்களும் உள்ளன. இந்த டேப்லெட் வீடியோ உரையாடலுக்காக ஒரு 0.3எம்பி முகப்புக் கேமராவையும் வழங்குகிறது.

மேலும் எம்பி3, டபுள்யுஎம்ஏ, ஒஜிஜி, ப்ளாக், ஏபிஇ, ஏஏசி, ஏசி3 மற்றும் டிஎஸ் போன்ற ஆடியோ போர்மட்டுகளை இந்த டேப்லெட் சப்போர்ட் செய்யும். அதுபோல் எச்264, எச்263, விசி1, எம்பிஇஜி 1,2,3, டிவிக்ஸ் 3,4,5,6, எக்ஸ்விட், டபுள்யுஎம்வி7 மற்றும் 8, விபி6 மற்றும் ஏவிஎஸ் போன்ற வீடியோ போர்மட்டுகளையும் இந்த டேப்லெட் சப்போர்ட்




# இரகசியங்கள் நிறைந்த அமெரிக்க அதிபர் ஒபாமாவின் கார்

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் லிமோசின் ரக கார் ஜெனரல் மோட்டார்ஸின் கீழ் செயல்படும் கேடில்லாக் நிறுவனத்திடமிருந்து கஸ்டமைஸ் செய்து வாங்கப்பட்டது. இராணுவ கவசவாகனம் போன்ற அதிநவீன பாதுகாப்பு வசதிகள் இதில் உள்ளன. இந்த லிமோசின் ரக காரின் தொழில்நுட்பம், பாதுகாப்பு வசதிகள் ஆகியவை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன. தி பீஸ்ட் என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த கார் அமெரிக்க அதிபரின் நடமாடும் அலுவலகமாக பயன்படுகிறது.




# பரசூட்டில் அலுவலகம் செல்லும் சீனர்



வீதிகளில் வகை வகையான வாகனங்கள் செல்கையில் பொது போக்குவரத்து பஸ்களும் வீதிகளில் பயணிக்கையில் சீனாவை சேர்ந்த ஒருவர் பரசூட் மார்க்கத்தை பயன்படுத்தி வருகின்றமை பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்துக்கொள்ளவும் அலுவலகத்திற்கு குறித்த நேரத்திற்கு செல்வதற்காகவும் சீனர் ஒருவர் பரசூட் மார்க்கத்தை பயன்படுத்தி வருகின்றார்.

சீனரான செங் டெக்ஸியா என்பவரே இத்தகைய விபரீத போக்குவரத்து மார்க்கத்தை கடைப்பிடித்து வருகிறார்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக இவர் அலுவலகத்திற்கு செல்வதற்காக தினமும் 3 மணித்தியாலங்களை வீதியிலேயே செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய நேரம் அநியாயமாக செலவாவதை தடுப்பதற்கும் அலுவலகத்திற்கு இலகுவில் செல்வதற்கான வழிமுறையாக பரசூட் மார்க்கத்தை கடைப்பிடித்துள்ளதுடன் பரசூட்டில் பறப்பதற்கான பயிற்சியையும் எடுத்துக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

தொழில்புரியும் நான் நகரின் பல்வேறு முனைகளுக்கும் பயணிக்கின்றேன். இதனால், பல மணித்தியாலங்களை போக்குவரத்து நெரிசலின்போது வீணாக செல்விட நேரிடுகின்றது.

வாகன நெரிசல் மிக்க சாலையின் மேலே என்னால் இப்போது இலகுவாக பயணிக்க முடிகின்றது. பரசூட் மூலம் அலுவலகம் செல்வதற்கு சில நிமிடங்களே எடுக்கின்றன. இங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக காணப்படுகின்றமையினால் என்னைப் போல பலரும் இந்த போக்குவரத்து மார்க்கத்தையே கடைப்பிடித்து வருகின்றனர் என்றார்.

# மிக பிரமாண்ட டைட்டானிக் 2 கப்பல்




மிக பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட டைட்டானிக் கப்பல் தன்னுடைய முதல் பயணத்திலேயே பனிப்பாறையின் மீது மோதி விபத்துக்குள்ளானது. கடந்த 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி ஏற்பட்ட இந்த விபத்தில், கப்பலில் பயணம் செய்தவர்களில் சுமார் 1500 பேர் வரை கடலில் மூழ்கி இறந்தனர்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கோடீஸ்வரர் கிளைவ் பால்மர் டைட்டானிக் கப்பலை போன்றே பிரம்மாண்டமான 2வது கப்பலை கட்டி வருகிறார்.

சீனாவில் கட்டப்பட்டு வரும் இந்த கப்பலின் நீளம் 270 மீட்டராகும். 40,000 டன் எடையை கொண்டது. மேலும் இதில் 840 அறைகளும், 9 தளங்களும் முதல் 2வது மற்றும் 3வது வகுப்புகளையும் கொண்டிருக்கும். இதுகுறித்து பால்மர் கூறுகையில், டைட்டானிக்-2 கப்பல் சீனாவில் கட்டப்பட்டு வருகிறது. இக்கப்பல் 2016ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் சவுத்தாம்டன் நகரை வந்தடையும். அங்கிருந்து நியூயோர்க் நகருக்கு தன்னுடைய முதல் பயணத்தை தொடங்கும் என்று தெரிவித்துள்ளார்.

உங்கள் பரீட்சை வெற்றி எனது கையில்
இப்படிக்கு புலமை 06
என்னுடன் இணைந்து நீங்களும் வெற்றியாளராகுங்கள்




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்
தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் ... எக்ஸ்பிரஸ் ஸ்தாபனத்தினால், 2012 நவம்பர் 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.